# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 19 திங்கட்கிழமை (05.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 283





02 தீஸ்ஸவின் சவால்





14 கொரியாவுக்கு பீரிஸ் சென்றது எதற்கு?





21 ஜெயலலிதாவை புகழ்ந்தார் சீமான்





25 தங்கம் வென்ற வேகம்


ஊடக அமைச்சரின் பயணம்



ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்து பார்வையிட்டார். பிரதம ஆசிரியர் வ.ம.கானமயில்நாதன் (வலது) மற்றும் செய்தி ஆசிரியர் குகநாதன் (மத்தி) ஆகியோருடன் யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரத்தின் நிலை தொடர்பாக அவர் கலந்துரையாடுகிறார்.

ஐ.நா. மாநாட்டில் இலங்கைக்கு எதிராக

## தீர்மானம் நிறைவேறினால் செயற்படுத்துவது எப்படி? பான் கீ-மூன் ஆலோசனை

### இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, செப்ரெம்பர் 05

அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பது குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறார் என்று ஐ.நாவுடன் தொடர்புடைய உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தன. இது தொடர்பில் தனது ஆலோசர்களுடன் பான் கீ-மூன் தொடர்ச்சியாகப் பல சந்திப்புக்களை ஏற்கனவே நடத்தி இருக்கின்றார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் இலங்கை அரசும் தனது எதிர் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாகத் தெரிகிறது.

எதிர்வரும் 12ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 18ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகிறது. அந்த அமர்வில், இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் விவகாரமே முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டுமென அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்டப் பல நாடுகள் இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன.

இதனால் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் மேற்குலக

பக் 27

## சனியன்று உண்ணாவிரதம்

### குடாநாட்டில் நிலைமைகளை உடன் சீராக்குமாறு வலியுறுத்தி

யாழ்ப்பாணம், செப்.05

'கிறீஸ் பூதம்' என்ற போர்வையில் யாழ். குடாநாட்டில் தற்போது கிளப்பப்பட்டிருக்கும் பீதியைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் சனிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்த நேற்று முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிஅலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் வடக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் கடந்த இரண்டு வார காலமாக நிலவிவரும் பதற்றம் பற்றி விரிவாக ஆராயப்பட்டுக் கருத்துகள் பரிமாறப்பட்டன.

இக்கூட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர், தென்னிந்திய திருச்சபைப் பேராயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், என்.சிறிகாந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் மற்றும் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன், யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முக்கிய மூன்று முடிவுகள் எடுக்கப்பட்டன.

பக் 27

## பதற்றத்தைக் கட்டுப்படுத்த கோத்தபாய உடன் உத்தரவு

கொழும்பு, செப்.05

யாழ்.குடாநாட்டில் மர்ம மனிதன் விவகாரத்தால் அடிக்கடி ஏற்பட்டுவரும் பதற்ற நிலைமைகளைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு பாதுகாப்புச் செயலாளரால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

'கிறீஸ் பூதம்' அல்லது மர்ம மனிதன் வதந்தியால் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் அல்லோலகல்லோலப்படுகின்றது. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும் அச்சத்துக்கு மத்தியிலேயே மக்கள் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர். இதனால் ஏற்படும் பதற்றத்தைக் கட்டுப்படுத்த இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்டபோதே கட்டளைத் தளபதி மேற்கண்ட தகவலை வழங்கினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலைமைகள் வழமைக்

பக் 27

## தமிழர் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி சிங்களப் பகுதிக்கு திருப்பப்பட்டதா?

யாழ்ப்பாணம், செப்.05

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்றுப் பிரதேச சபைக்கு வடக்கு உள்ளூராட்சி சபைகள் சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் வீதித் திருத்தம் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காக 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண உள்ளூராட்சி சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்சுமி உதயனுக்குத் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்று பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி முல்லைத்தீவு எல்லைப் பகுதியில் உள்ள சம்பத்நுவர பிரதேச சபைக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் வெளியாகி

பக் 27

## வன்னியில் பொதுமக்களைக் கொன்று குவித்ததை உலக நாடுகள் அப்போது நன்கு அறிந்தேயிருந்தன

### அம்பலப்படுத்துகிறது விக்கி லீக்ஸ்; அமெரிக்க ஆவணம் பரகசியம்




கொழும்பு,செப்.05

போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது படையினர் தாக்கியதை இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளும் அறிந்திருந்தன - என்று உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய விக்கி லீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறித்த விவகாரத்தை, தான் இலங்கை ஜனாதிபதியின் அப்போதைய ஆலோசகரான பஸில் ராஜபக்ஷவிடம் எழுப்பியதாக, கொழும்புக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் பிளேக் 2009 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி நடந்த சந்திப்பு ஒன்றில் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் இணைத்தலைமை நாடுகளிடம் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளின் மீது தொடர்ச்சியாக சில நாள்கள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து வந்த நம்பகமான தகவல்கள் பற்றிய தூதுவரின் கரிசனைகளுக்கு, பஸில் ராஜபக்ஷ வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவில்லை என்று அமெரிக்க தூதரகத்தால் மார்ச் 5 ஆம் திகதி அனுப்பப்பட்ட தகவல் கூறுகிறது.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கனரக ஆயுதங்கள் பயன்படுத்துவதை நிறுத்துவதாக சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு மீண்டும் மீண்டும் உறுதி வழங்கியிருந்தது.

பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களில் இருந்து விடுதலைப்புலிகளால் இலங்கை படையினர் மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களை எதிர்த்து படையினர் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது என பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.


ஆனால், பதில் தாக்குதலாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் பொதுமக்களின் உயிர்களைக் காவுகொண்டன. இலங்கை அரசு கடப்பாட்டை மீறுவதாக உள்ளது எனவும் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் அமெரிக்கத்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




# திஸ்ஸவின் சவாலை ஏற்றார் சுசில்

**அரச வளங்களைப் பயன்படுத்தாமல் சபைகளைக் கைப்பற்றுவோமென சூளுரை**



கொழும்பு, செப்.05

திஸ்ஸ அத்த நாயக்கவின் சவாலை ஏற்று கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தேர்தல் சட்டதிட்டங்களை முழுமையாகக் கடைப் பிடித்து போட்டியிட்டு வெற்றியீட்டுவதற்கு அரசு தயார் எனக் கூறுகிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை எனக் கருதப்படும் கொழும்பு மாநகரசபையை முடிந்தால் இந்த முறை அக்கட்சி கைப்பற்றிக் காட்டட்டும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்னதாகப் பகிரங்க சவால் விடுத்திருந்தார்.

இந்தச் சவாலை ஏற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. அரச வளங்களையும், அரச ஊடகங்களையும் தனக்கேற்றவகையில் பயன்படுத்தாமல் தேர்தலில் மோதுவதற்கு அரசு தயாரா என சவால் விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தச் சவாலை ஏற்பதற்கு அரசு தயாரா எனக் கேட்டபோதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நடைபெற்று முடிந்த அனைத்து தேர்தல் களிலும் அரசு தேர்தல் சட்டதிட்டங்களை முழுமையாகவே கடைப்பிடித்து செயற்பட்டது. இனியும் அப்படித்தான் செயற்படும்.

கொழும்பு மாநகரசபை மட்டும் அல்ல, தேர்தல் நடைபெறவுள்ள 23 சபைகளுக்கும் முழுமையான தேர்தல் சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தே நாம் போட்டியிடவுள்ளோம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அர்த்தமற்ற கதைகளைக் கூறிவருகின்றார். அரசு செய்யாத விடயம் ஒன்றுக்காக அவர் சவால் விடுத்துள்ளார்.

அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்திருந்தால் இது புரிந்திருக்கும். பட்டியலில் வந்தமையால்தான் பலதையும் பல்வேறு கோணங்களில் திரிபுபடுத்திக் கூறுகின்றார் - என்றார். (உ-சி)

# பாடசாலைகள் இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன

கொழும்பு, செப்.05

நாட்டிலுள்ள அரச பாடசாலைகள் அனைத்தும் இன்று திங்கட்கிழமை மீண்டும் மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டும், இரண்டாம் தவணைக்காகவும் ஜூலை மாதம் 29ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 04ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக விடுமுறை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் இன்று மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகின்றன. (மற்றுமொரு செய்தி 6ஆம் பக்கத்தில்) (சி)

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப்.05

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 3மணிக்கு ' யோக சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆண்மிக வாழ்வு' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது.

நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் வழங்குவார்.

(10-323)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் குறைகள் மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிடும்

கொழும்பு, செப்.05

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் குறைபாடுகளை அம்பலப்படுத்தப்போவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அடிப்படை முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்று விரைவில் வெளியிடப்படும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது.

'நல்லிணக்க ஆணைக்குழுவின் குறைபாடுகள், எப்போது இவர்களுக்கு நியாயம் கிட்டும்' என்ற தலைப்பில் மன்னிப்புச் சபையின் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியங்களை முன்வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச அனர்த்தக்குழு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அழைப்பை மூன்று அமைப்புகளும் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# முன்னாள் போராளிகள் கதிர்காமத்தில் தரிசனம்

கொழும்பு, செப்.05

புனர்வாழ்வளிக்கப்பட்டுவரும் முன்னாள் போராளிகளுள் ஐந்நூறு பேரை கதிர்காம யாத்திரைக்கு அழைத்துச் செல்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு ஆகியன கூட்டாக இணைந்து இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன.

எதிர்வரும் எட்டாம் திகதி கொழும்பிலிருந்து இவர்கள் புறப்படுவர் என்றும், இரண்டு நாட்கள் மாத்தறையில் தங்கியிருந்து மறுநாள் காலை அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பார்வையிடச் செல்வார்கள் என்றும் புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதீஷ் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் பயணம் மேற்கொண்டு செல்லும் இவர்கள் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளனர். 13ஆம் திகதி கதிர்காமம் செல்லும் இவர்கள் அன்றைய தினமே கொழும்புக்குத் திரும்புகின்றனர்.

(சி)

# பணிகள் பூர்த்தியடையவில்லை அதற்கு முன் விமர்சனம் ஏன்?

**ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் கேள்வி**

கொழும்பு, செப்.05

''நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் இன்னும் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை. இந்நிலையில் அதனை விமர்சிப்பது நல்லதல்ல.

-இவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஆணைக் குழுவின் குறைபாடுகளை அறிக்கை வடிவில் அம்பலப்படுத்தப்போவதாக சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது. இது தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே லக்ஷ்மன் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை வெளியிடுவது குறித்து உத்தியோகபூர்வமாக எமக்கு எதுவும் தெரியாது.

எனினும், எமது பணிகள் இன்னும் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை. இந்நிலையில் எம்மை சர்வதேச மன்னிப்புச்சபை அல்ல யார் விமர்சித்தாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

(சி)

# இலங்கை ஒரே நாடு என்பதை தமிழருக்கு உணர்த்த வேண்டும்

**சுதந்திரக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி உரை**

கொழும்பு, செப்.05

தமிழ், முஸ்லிம் சமூக மக்கள் சிறுபான்மை இனத்தவர்கள் அல்லர். இலங்கை என்பது தனியான ஒருமித்த நாடு என்பதை அவர்களுக்கு உணரவைப்பதுதான் இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் முக்கிய பணி.

-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த வெள்ளியன்று அலரி மாளிகையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60ஆவது ஆண்டு மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நாட்டில் பிரிவினைவாதத்துக்கு இடமில்லை. நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற எண்ணம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட இடமளிக்கக் கூடாது.

இலங்கையில் அரைவாசியைத் தருவதாகவும், நாட்டில் ஒரு துண்டைப் பிரித்துத் தருவதாகவும் கூறி பிரிவினையாளர்களுக்குக் கப்பம் செலுத்தும் விதத்தில் மக்களை ஏமாற்ற முடியாது.

எமது கட்சி ஒருபோதும் தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றிய கட்சி அல்ல. 1950களில் உயர் தட்டு மக்களைத் தோற்கடித்து, அடித்தட்டு மக்களின் பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுத்தமை, 1972 இல் சுதந்திர அரசமைப்பு மூலம் நாட்டுக்கு பிரிட்டனிடமிருந்து முழு மையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தமை மற்றும் 2009ஆம் ஆண்டில் பயங்கர வாதத்தைத் தோற்கடித்தமை போன்ற முக்கிய நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே செய்து முடித்துள்ளது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும் - என்றார் அவர்.




தெற்காசிய ரோட்டரி சங்கத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு மாநாடு நேற்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது. இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அச்சங்கத்தின் தலைவர் நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை ஒரு தண்டனை வழங்கலே; புலிகள் இன்றும் நினைக்கின்றனராம்

ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது ஒரு தண்டனை வழங்கலே அன்றி அது ஒரு குற்றம் அல்ல எனக் குற்றவாளிகள் நினைத்தனர் என்று முன்னாள் மத்திய புலனாய்வு அதிகாரி ரகோத்தமன் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரித்த குழுவில் இடம்பெற்றிருந்தவர் ரகோத்தமன். இவர் ராஜீவ் காந்தியைப் புலிகள்தான் கொன்றார்கள் என்று கூறுகிறார்.

நாங்கள் குற்றவாளிகளின் இடங்களைச் சோதனையிட்ட போது ஆயிரக்கணக்கான சான்றுகளையும் சத்தியக் கடதாசிகளையும் கண்டு பிடித்தோம். அவை அனைத்தும் இந்திய இராணுவம் தமிழீழத்தில் பொதுமக்கள் மீது மேற்கொண்ட அட்டூழியங்களை காட்டின. வன்புணர்வு, கொலை, கொள்ளை ஆகியவற்றை செய்த இந்திய அமைதிப்படையினரின் குற்றங்களை நிரூபிப்பதற்கான சான்றுகளே அவை அனைத்தும். அடுத்ததாக தம் உயிரையே அர்ப்பணித்து செயற்படக்கூடியவர்கள் விடுதலைப்புலிகள்தான்.

ஆகவே ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கான 100 சதவீத காரணம் புலிகளுக்கே உள்ளன எனக் கருதினோம். ராஜீவ் கொலையினை அவர்களே செய்தார்கள் என்றாலும் அது ஒரு குற்றம் இல்லை என அவர்கள் நினைக்கின்றார்கள். மாறாக அது ஒரு தண்டனை வழங்கலே என இப்போதும் நினைப்பதாக ரகோத்தமன் கூறுகின்றார். (உ-10)

# மனித உரிமைகள் குறித்து தவறான வியாக்கியானம்

## சர்வதேச நாடுகள் மீது மஹிந்த சீற்றம்

இலங்கை போன்ற சிறிய நாடுகளில் மோதல்களின் போதான மனித உரிமைமீறல்கள், போர்க் குற்றங்கள், சேதங்கள் என்பவற்றை சில நாடுகள், சர்வதேச அமைப்புகள், குழுக்கள் என்பன தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தவறாக வியாக்கியானப் படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் ஆரம்பமான றோட்டரி கழகத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவும் சமாதானம், ஜனநாயகம் என்பன முழுமையாக மீள நிலைநாட்டப்படவும் முடியும் என்பதை உலகுக்கு முதல் தடவையாக இலங்கை நிரூபித்தது- என்று அவர் கூறினார் (உ-10)

# காலி முகத்திடலில் 8 பேர் கைதாகினர்

காலிமுகத்திடலில் நடமாடும் விபசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படும் 6 பெண்களும் இரு ஆண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு கோட்டை நீதிவானின் முன் கொண்டுவரப்பட்ட இவர்கள் 5,000 ரூபா ரொக்கப்பிணையிலும் 50,000 பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த முற்றுகைக்காக மாறுவேடத்தில் சென்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரிடம் இந்தப் பெண்களில் ஒருவர் 5,000 ரூபா கட்டணம் வசூலித்தார் எனவும் பின்னர் ஏனைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என நீதிமன்றில் கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுவினரை இயக்கியனார் எனக் கூறப்படும் பெண்கள் இருவரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. வாகனத்தின் சாரதிகளும் விபசாரத்திற்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பிரதான சந்தேகநபரான பெண், அவரின் செல்லிடத் தொலைபேசியில் ஆபாச வீடியோவை வைத்திருந்தார் என்று மற்றொரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. இச்சந்தேக நபருக்கு 2,500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் அவரின் செல்லிட தொலைபேசியை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-10)

# தப்பிச் சென்ற புலிகளுக்கு புலனாய்வுப் பிரிவு சம்பளம்

இறுதிக் கட்ட போரின் போது தப்பிச் சென்ற தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு, அந்த அமைப்பின் புலனாய்வுப் பிரிவு மதாந்தச் சம்பளம் வழங்கி வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உறுப்பினர் ஒருவருக்கு தலா மூவாயிரம் ரூபா என்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவில் மறைந்து வாழும் சுமார் ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே இவ்வாறு ஊதியம் வழங்கப்படுவதாக அரச புலானய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் இருந்து புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் ஒருவரினால், தென் இந்தியாவில் உள்ள உறுப்பினர் ஒருவருக்கு பணம் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் அது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராகத் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் குறித்த உறுப்பினர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர்தாக சென்னை மஹாபோதி அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய நபர்கள், இந்தியாவில் வாழும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போன சிறுவர்களைத் தேடும் பணி விஸ்தரிப்பு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது காணாமல்போன சிறுவர்களைத் தேடி மீளவும் அவர்களது குடும்பங்களுடன் ஒன்றிணைப்பதற்கான திட்டமானது தற்போது மேலும் விரிவாக்கப்பட்டு வருவதாக ஐ.நாவின் சிறுவர் நிதியமான 'யுனிசெப்' தெரி வித்துள்ளது.

இத்திட்டமானது 2009ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வட பகுதியிலுள்ள இரு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டமானது தற்போது வடபகுதியின் ஏனைய மாவட்டங்களுக்கும், போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டமானது தாமத மாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், தொலைந்து போன சிறார்களைத் தேடிக் கண்டு பிடித்து மீளவும் அவர்களது குடும்பத்தவர்களுடன் ஒன்று சேர்ப்பதில் யுனிசெப் நிறுவனம் கணிசமானளவு வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

# பயணத்தைச் சுருக்கினார் மஹிந்த

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் செல்லும் போது ஹொஸ்டனில் தனது குடும்பத்தினரை சந்திப்பதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டிருந்த திட்டம் திடீரெனக் கைவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகும் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் செல்லும் போது, சில நாள்கள் முன்னதாவே ஹொஸ்டனுக்குச் சென்று குடும்பத்தினருடன் சில நாள்களை கழிக்க இலங்கை ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார்.

தற்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டு ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை ஒட்டி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச்சபையில் உரையாற்ற இலங்கை ஜனாதிபதிக்கு செப்ரெம்பர் 23 ஆம் திகதி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே அவர், பொதுச்சபையின் ஆரம்ப அமர்வுகளில் பங்கேற்கமாட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவில் அதிக நாள்கள் தங்கியிருப்பதைத் தவிர்க்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் மீது அவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படலாம் என்ற அச்சத்தினாலேயே அவர் அமெரிக்கப் பயணத்தை சுருக்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சுகாதார அமைச்சருக்கே தவறான மருந்து

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் தனியார் மருந்தகமொன்று தவறான மருந்து வழங்கிய சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாகச் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு காசல் மகப்பேற்று வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தனியார் மருந்தகம் ஒன்றிலேயே மருந்துச் சிட்டையை கொடுத்தபோது அமைச்சருக்கு தவறான மருந்து வழங்கப்பட்டது.

அதையடுத்து அமைச்சர் சிறிசேனவின் அறிவுறுத்தலின் பேரில், தேசிய ஔடத அதிகார சபையின் தலைவர் டாக்டர் ஹேமந்த பேனராகம தலைமையிலான குழுவினரால் இந்த மருந்தகம் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 செப்ரெம்பர் 2011 திங்கட்கிழமை

# சென்னையில் அவசரமாகத் தரை இறங்கிய இலங்கை விமானத்தில் சீன ஆயுதங்கள்

கொழும்பு, செப்.05

சென்னை விமான நிலையத்தில் கடந்த வாரம் அவசரமாகத் தரையிறங்கிய இலங்கை விமானப்படை விமானம் சீனாவில் இருந்து ஆயுத தளபாடங்களை ஏற்றி வந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி காலை நடுவானில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக இலங்கை விமானப்படை விமானம் ஒன்று சென்னை விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதி கோரியிருந்தது. இதையடுத்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அந்த விமானம் தரையிறங்க அனுமதி அளிக்கப்பட்டது.

அந்த விமானம் இலங்கை இராணுவ அதிகாரிகள் ஏழு பேருடன் விசாகப்பட்டினம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாகச் சென்னை விமான நிலைய அதிகாரிகள் தகவல் வெளியிட்டிருந்தனர்.

ஆனால் அந்த விமானம் சீனாவில் இருந்து இலங்கை விமானப் படைக்கு ஆயுதத் தளபாடங்களை ஏற்றி வந்தது என்று இலங்கை விமானப் படை வட்டாரங்கள் கூறியதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ரஷ்ய தயாரிப்பான அன்ரனோவ் 32 ரக போக்குவரத்து விமானம் கொழும்பில் இருந்து டாக்கா சென்று முதலில் எரி பொருள் நிரப்பியது.

அதன் பின்னர் சீனாவின் குங்மின் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு சீனாவின் சொங்குயிங் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தது.

அங்கிருந்து சீனாவின் எவ்-7 ஜெட் போர் விமானங்களுக்கான உதிரிப்பாகங்களையும், ஒரு தொகுதி வெடிபொருள்களையும் ஏற்றிக் கொண்டு கொழும்பு வரும் போதே சென்னையில் அவசரமாகத் தரையிறக் கப்பட்டதாக இலங்கை விமா னப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த விமானத்துக்கு சென்னை விமான நிலைய அதிகாரிகள் முழுமையான பாதுகாப்பை வழங்கியதாகவும் கொழும்பு வார இதழ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீனாவில் இருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த இலங்கை விமானம் சென்னையில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தலாம் என்பதாலேயே அது அந்த விமானம் விசாகப் பட்டினம் நோக்கிச் சென்ற போது அவசரமாகத் தரையிறங்கியதாக சென்னை அதிகாரிகள் தகவல் வெளியிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

மாபெரும் விவசாயக் கண்காட்சி 2011 இல் இம்முறை நாம் விசேடமாக அமைக்கப்பட்ட காட்சிக் கூடத்தில் இலக்கம் 01

**பவிசாரு பூங்கனிச் சோலை**

**PaveeSharu Poongani Solai**

311/1, பலாலி வீதி,
கோண்டாவில் வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம். பதிவு இல. SA/JFA/02677

தொ.இல.
021 222 8199
071 8475629
077 3976203

விதைச் சட்டத்துக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும்.

**பழ மரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 Kg கொய்யா | றொட்லேடி பப்பாசி | மாதுளை | ஒட்டுப்பலா |
| ஒட்டு மா | ஒட்டுத்தேசி | ஒட்டுக்கயூ | கயூ |
| விலும்பிலி | றம்புட்டான் | தேசி | ஒட்டுநெல்லி |
| ஒட்டுத்தோடை (விபிலிய சுவிட்) | | | |

**அலங்காரத் தாவரங்கள்**

| | | |
|---|---|---|
| செவ்வரத்தை | குறோட்டன் | பாம் வகைகள் அவுஸ்ரேலியன் கிறாஸ் |
| றோஸ் | பாரியாதம் | ஐந்தூரியம் |
| சைபிரஸ் | அலகேரியா | நித்தியகல்யாணி |
| நந்தியாவட்டை | சைபிரஸ் | இந்தியன் மடு மல்லிகை |

**மூலிகைகள்**

| | | |
|---|---|---|
| இந்தியன் புதினா | கற்பூரவள்ளி | கருவேப்பிலை |
| கோப்பி | மிளகு | கராம்பு |
| கறுவா | யாதிக்கா | வெற்றிலை |
| துளசி | கொறுக்காய்புளி | கொக்கோ |

**பயன்தரு மரங்கள்**

| | | |
|---|---|---|
| ஈரப்பலா | கமுகு | தென்னை |
| செவ்விளநீர் | தேக்கு | மகோகனி |
| சந்தரவேம்பு | யம்பு | சமண்டலை |

மற்றும் பல மரக்கறி நாற்றுக்களும், சகல விதமான காய்கறி விதைகளும், பிளாஸ்ரிக், சிமெந்து சாடிகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தங்கள் ஆதரவால் உயர்ந்து நிற்கும் எமது நிறுவனம் வாடிக்கையாளர்களின் பேராதரவை நாடி நிற்கின்றோம்.

# ஊடகத்துறை தேசிய மாநாடு இருநாள்கள் கொழும்பில்

யாழ்ப்பாணம், செப்.5

ஊடகத்துறைக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை பொறி முறையின் முக்கியத்துவம் தொடர்பாக இரண்டு நாள் தேசிய மாநாடு ஒன்றினை இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

நாளையும், நாளை மறுதின மும் நடைபெறவுள்ள இந்த மாநாடு இல 96, கிருல வீதி, கொழும்பு - 5 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தேசிய மாநாட்டுக்கு முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக் குழுவின் தலைவருமான சாம் விஜேசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை, திருகோணமலை, குருணாகல், கண்டி, அப்பாந்தோட்டை, இரத்தினபுரி, வவுனியா, அனுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை உட்பட நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மாகாணச் செய்தியாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் முறைப்பாட்டாளர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# பிரிட்டனில் சிங்கள அமைப்புகளால் அடேல் பாலசிங்கத்துக்கு எதிராக வழக்கு

கொழும்பு,செப்.05

விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கத்துக்கு எதிராகப் பிரிட்டன் வாழ் சிங்கள அமைப்புக்கள் வழக்குத்தொடரவுள்ளதாக லங்கா புவத் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிறநாட்டைச் சேர்ந்த சிறுவர்களை விடுதலைப் புலிகளுடன் இணைத்து, அவர்களுக்கு சயனைட் வழங்கிப் போராட்டத்தில் ஈடுபட வைத்து அவர்களின் சாவுக்குக் காரணமாக இருந்தார் என்ற கொலைக்குற்றச்சாட்டு இவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்வதற்கான முக்கிய சாட்சியாக சிறுவர்களுக்கு சயனைட் வழங்கும் படக்காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர் போராளிகள் தற்கொலைத் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளதாக லங்கா புவத் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

# மும்மொழிகளிலும் சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.05

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் மும்மொழி திறந்த சிறுகதைப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் ஆர்வ முடையவர்கள் எவரும் பங்கு பற்றமுடியும்.

''மொழிகளுக்கிடையிலான தொடர்பாடலும் சமூக ஒரு மைப்பாடும்'' எனும் தொனிப் பொருளில் சிறுகதை அமைதல் வேண்டும்.

ஆர்வமுடையவர்கள் திமிழ்- சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சிறுகதை களை தயாரிக்க லாம். சிறுகதை களை ஏ-4 தாளில் தயாரித்து சுயவிவரத் துடன் இணைத்து, நிறுவனத் தலைவர் அல்லது கிராம சேவையாள ரின் உறுதிப் படுத்தலுடன் அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, இல.40, புத்கமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் இடது பக்க மூலையில் ''திறந்த சிறு கதைப் போட்டி'' எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக் கவும்.

சிறுகதைப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசாக 30 ஆயிரம் ரூபாவும்,இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. பத்தாம் இடம் வரை வெற்றி பெறுவோருக்கு நான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. (ம-313)

**பெண் வேலையாள் தேவை**

நல்லூர் பகுதியில் இயங்கும் உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பெண் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 0779063025

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் 4 பேர் கொண்ட வைத்திய குடும்பத்துக்கு நல்ல சமூக சூழலில் வீடு தேவை.

தொடர்பு: 0718474223

# உடைந்து விழும் நிலையில் மதகுகள்

சரசாலை - துன்னாலை வீதியில் உள்ள மூன்று மதகுகள் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளதாக இந்த வீதியைப் பயன்படுத்தும் வாகனம் செலுத்துவோர் தெரிவித்தனர்.

மதகுகள் அமைந்துள்ள பகுதி வீதியில் பெரிய வெடிப்புகளும் பள்ளங்களும் ஏற்பட்டுக் காணப்படுகின்றன. தற்போது அதனை மூடி மண் போடப்பட்டுள்ளது.

மழை காலத்தில் வாகனங்கள் செல்லும் வேளை உடைந்து விழலாமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-207)

NEW BATCH
05-09-2011
ஆரம்பம்!

மிகக் குறைந்த கட்டணத்தில் யாழ் மண்ணிலேயே கல்வி பயின்று
கணினி மற்றும் வர்த்தகத் துறைகளில் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!

1. B.Sc. in Computer Science
2. B.Com. with Computer Application

தகமை– HND/HNDA / Adv. Diploma காலம்– 01 வருடம் அல்லது A/L அல்லது O/L காலம்– 02 - 03 வருடங்கள்

3. Post Graduate Diploma in Computing >> M.Sc.

தகமை– Any Degree காலம்– 01 வருடம்



NORTH LANKA IIT
#113, Laxan Plaza,
Navalar Road, Jaffna.
Phone: 0215677774

அரச அங்கீகாரமுடைய BRITISH பல்கலைக்கழக சான்றிதழைப் பெறுங்கள்!

வங்கிக் கடன் வசதிகள், வேலைவாய்ப்பிற்கான ஆலோசனைகள் நேரில்!

NORTH LANKA IIT ஆனது
Registered as a Private Liability Company in Sri Lanka.
Registration No.: PV 71651

Partner Institution of Isles International University - UK & Malaysia
License No. IIU/AF-SL/09-2001
Registered with the UK register of learning provider No.: UKPRN10027470 & SSM Reg. No. : 994097M
Web: www.iiuedu.ac, www.iiuedu.org

Approved Center of Cambridge Association of Managers - UK
Listed in British Qualification (A complete guide of professional, vocational and academic qualification in UK)
Year Book – 36th, 37th and 38th Edition.
Web: www.cam-uk.org

Registered as a Higher Education Provider at Quality Assurance Commission UK
Web:- www.qac-uk.org
and
Accreditation Syndicate for Education and Training – UK
Web: www.aset.com.my

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணாமற் போகச் செய்யப்பட்டோர் நிலை அறிய மார்க்கமில்லையா?

காணாமற்போனோர் சர்வதேச நாள் கடந்த ஒகஸ்ட் முப்பதாம் திகதியாகும்.

அதனைக் கருத்தில் கொண்டு போலும், பலாத்காரமாகக் காணாமற் போகச் செய்யப்படுவோரைப் பாதுகாக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக்குழு, இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அனுமதிக்குமாறு நான்காவது முறையாகவும் கேட்டுக்கொண் டது. ஆனால் அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

செயற்பாட்டுக் குழுவின் இணை அதிகாரி மத்தியாஸ் யோசுவே பெலாடோ அம்மையார், இந்தத் தகவலை மிகுந்த கவலையுடன் வெளியிட்டிருக்கிறார். இதற்கு முன்னரும் 2006 ஒக்ரோபரிலும், 2009 ஜூலையிலும், 2010 ஒகஸ்டிலும் செயற்பாட்டுக் குழுவின் விஜயத்துக்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசிடம் கோரப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

செயற்பாட்டுக் குழு இதுவிடயத்தில் அக்கறையுடன் தொழிற்படுவது குறித்து உரிய கவனம் செலுத்தப்படும் என்று அரச தரப்பில் ஒரு தடவை பதிலளிக்கப்பட்டதாகவும் அதன் பிற்பாடு எந்தத் தொடர்பும் தம்முடன் வைக்கப்படவில்லை என்றும் பெலாடோ கூறியிருக்கிறார். இவ்வருடம் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு, இதுவரை அது கிடைத்ததாகத் தானும், பதில் அனுப்பப்பட வில்லை என்றும் அவர் ஆதங்கப்பட்டுள்ளார்.

காணாமற்போகச் செய்யப்பட்டோரை பாதுகாக்கும் செயற்பாட்டுக் குழு, தனக்குக் கிடைத்த தகவல்களின், முறைப்பாடுகளின் பிரகாரம் 12,230 எண்ணிக்கையானோர் காணாமற்போகச் செய்யப்பட்டோர் பட்டியலையும், அவர்கள் காணாமற்போன சம்பவங்களையும் நிரல் படுத்தி அரசாங்கத்துக்கு அனுப்பியிருந்தது. அவற்றில் 6,535 பேர் சம்பந்தப்பட்ட விவரங்கள் அரசாங்கம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டன. கடந்த வருட இறுதிவரை 5,695 ஆள்கள் குறித்த தகவல் எதனையும் ஊர்ஜிதம் செய்வதில் அரசு அக்கறை காட்டவில்லை என்றும் பெலாடோ அம்மையார் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை 1991, 1992, 1999 ஆகிய வருடங்களில் செயற்பாட்டுக் குழு இலங்கைக்கு வந்து நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் சமர்ப்பித்த அறிக்கையின் சிபார்சுகளை, இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்றும் பெலாடோ கவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில், இலங்கை மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாட்டுக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு உண்டு. அதற்கேற்றவாறு, சட்டம் இயற்றுவதற்கும் அதனூடு நிர்வாக ரீதியாக வும் சட்டத்துறை ஊடாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய கடப் பாடும் அரசாங்கத்துக்கு உண்டு.

ஆனால் அரசாங்கமோ, இந்த விடயத்தில் கிஞ்சித்தும் அக் கறை காட்டாமல், தட்டிக்கழித்து காலத்தைப் போக்குகிறது. பாவம் அரசு, இம்மாதம் பதின்மூன்றாம் திகதி கூடும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவின் கூட்டத்தில், தன்மீது சுமத்தப் பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல் கள் சம்பந்தப்பட்ட தாக்கங்களை எவ்வாறு இல்லாமற் செய்வது என்ற கடும் யோசனையிலும், எதிர்வினையை எவ்வாறு திட்ட மிட்டு மேலேறிப் பாய்வது என்பதிலும் தீவிரமாகப் புலனைச் செலுத்திவரும் வேளையில், காணாமற்போகச் செய்யப்பட்டோர் விவகாரத்தை கையில் எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பெலாடோ அம்மையாரின் வேண்டுகைக்குப் பதில் அளிக்கவோ அதில் அக்கறை காட்டவோ அரசுக்கு இப்போதைக்கு நேரமேது...?!

1958 ஆம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்துடனும் அதன் பின்னர் 1977, 1983 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போதும், காணாமற்போகச் செய்யப்பட்ட ஆயிரக்கணக் கான தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு விடையில்லை; அதற்கு விடை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவும் முடியவில்லை.

1990 களில் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் கதி குறித்து இருபது வருடங்களாகியும் வகை சொல்லப்படவில்லை. அதனை நோக்குங்கால், அண்மைக் காலங்களில் காணாமற் போகச் செய்யப்பட்டோர் குறித்து ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புக்களால் எதுவும் செய்ய முடியாது என்ற தேற்றமே மிஞ்சுகிறது.

சர்வதேச மட்டத்திலான பிணக்குகள் வன்முறைகளாகக் கட்டவிழும்போது மக்கள் காணாமற் போவதும், காணாமற் போகச் செய்யப்படுவதும் காலங்காலமாக நடைபெற்று வருகிறது. ஆனால் அரசுகளுக்கும் அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு எதிரான வன்முறைப் போராட்டங்களை முன்னெடுக்கும் அமைப்பு களுக்கும் இடையேயான போர்களின் போதே, மோதல்களின் போதே அந்தந்த நாடுகளின் சொந்த மக்கள் அதிக எண்ணிக் கையில் காணாமற் போவதும், காணாமற் போகச் செய்யப்படு வதும் வழமையாகிவிட்டது.

இலங்கையிலும் அந்தவகை சார்ந்தோர் குறித்து, ஆண்டுகள் பலவானாலும் தகவல் இல்லை. அதனால் காணாமற் போனவர் கள், காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து, மிகக் குறிப் பாக கடந்த சுமார் மூன்று வருடங்களாகக் காணாமற் போனோ ரின் கதியைக் கண்டறிவதில் ஆக்கபூர்வமான, வெளிச்சமான அறிகுறி எதுவுமே தென்படவில்லை.

இது விடயத்தில் அரசு சிரத்தையுடன், அக்கறையுடன் செயற்படும் என்று நினைக்கத்தானும் முடியவில்லை. ஐக்கிய நாடுகள் சபையால் மட்டுமே அது இயலும். எனவே, காணாமற் போகச் செய்யப்பட்டவர்களைப் பாதுகாக்கும் ஐ.நா. செயற்பாட்டுக் குழுவினர் தமது முயற்சியில் தளர்ந்துவிடாது, இயன்றளவு அழுத்தங்களை இலங்கை அரசு மீது காத்திரமாகச் செலுத்த வேண்டும்.

தனக்குள்ள தார்மீக கடமையாகக் கருதி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒட்டு மொத்தக் குரலாக எழுந்து, வேகத்துடனும் வீச்சுடனும் செயற்பட வேண்டிய வேளை இது. அவர்களின் சார்பில் விடுக்கப்படும் விநயமான வேண்டுகோளாகக் கொள்க.

# படைகளை பணியில் ஈடுபடுத்தியிருப்பதற்கு அரசு தரப்பில் இன்னமும் விளக்கம் இல்லை

**நேற்று 04-09-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.**

ஐந்து வருடகாலம் அமுலில் இருந்து புலிகள் இயக்கப் போராட்டத்தின் தோல்வியைக் கண்டுவிட்ட அவசரகாலச் சட்டமானது கடந்த செவ்வாய்க் கிழமையுடன் ஒரு முடிவுக்குவந்தது. நாட்டின் ஒரு சரித்திரத்தை மட்டுமல்ல சரித்திரத்தின் சர்ச்சைக்குரிய அத்தியாயம் ஒன்றையும் முடிவுக்கு கொண்டுவந்தது. இருந்த போதிலும் இன்னொரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்துக்கொண்டு அதேசமயம் நிலை கொள்ளத் தொடங்கி யுள்ளது. ஏற்கனவே காலாவதி யான பல சட்டவிதிகளைக் கொண்ட புதிய சட்டங்கள் அமுலுக்கு வருகின்றன. யதார்த்தம் என்னவென்றால் அவசர காலத்தில் அமுலில் இருந்தபல விதிகள் வேறுவகை யான சட்டங்களின் கீழ் தொடர்ந்து அமுலில் இருக்கப்போகின்றன.

அப்படியானவைகளில் ஒன்று, வெளிப்படையாக தெரிகின்ற ஒன்று என்னவென்றால் படைகளை பணிக்கு அழைப்பதாகும். இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைகள் முழு அதிகாரங்களுடன் பொலிஸாரைப்போல தேடுதல்களை நடத்தவும் கைதுகள் செய்யவும் அதிகாரமளிக்கப்படுவதாகும். இராணுவம், விமானப்படைகளைப் பொறுத்தமட்டில் சார்ஜன்ட் நிலைகளுக்கு மேல் பட்டவர்களுக்கும் கடற்படையில் சிறு அதிகாரிகளுக்கு மேற்பட்டவர்களுக்கும் பொருந்துவதாகும். சாதாரண சட்டங்களின் கீழ் இவ்வாறான அதிகாரங்கள் பொலிஸாருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கும். இந்த நிலைமையில் கொழும்பு நகரிலும் ஏனைய பிரதான நகரங்களிலும் செயற்பட்டுவரும் இராணுவச் சோதனை நிலையங்கள் தொடர்ந்து செயல்பட்டு வரும். அதேபோல் முன் அறிவித்தலின்றியே தலை நகரில் ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் அமைப்பதும் தொடர்ந்து இடம்பெறும்.

அவசரகாலம் காலாவதியானாலும் படையணிகளை சேவைக் கழைக்கும் செயற்பாடானது ஒகஸ்ட் 6 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் கட்டளையின் மூலம் அமுலுக்கு வந்துள்ளது. பொது ஒழுங்கை குறிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலை நாட்டுவதற்கான தமக்குள்ள அதிகாரத்தின் கீழ் இந்த கட்டளையை விடுப்பதாக ஜனாதிபதி அதில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தம்மை இனம் காட்டிகொள்ளாது வெளியிட்ட ஒரு கருத்தில், இந்தக் கட்டளையானது. ''அது இரத்து செய்யப்படும் வரையில்'' அமுலில் இருக்கும் என்று குறிப்பிட்டார். இது செல்லுபடியாவதற்கு அவசரகாலம் அமுலில் இருக்க வேண்டியதில்லை என்பது அவர் கருத்து.

ராஜபக்ஷவின் கட்டளையின் பிரகாரம் படைகளை பணிக்கு அழைக்கும் உத்தரவானது நாட்டிலுள்ள 25 மாவட்டங்களுக்கும் பொருந்துவதாகும். அவைகளாவன கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புல கடல் பகுதிகள்), கிளிநொச்சி, மன்னார் (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புல கடல்பகுதி) வவுனியா, முல்லைத்தீவு (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புல கடல் பகுதி) மட்டக்களப்பு (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புல கடல்பகுதி, அம்பாறை (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புல கடற்பகுதி) திருகோணமலை (மற்றும் அதற்கு அடுத்துள்ள ஆள்புலகடல்பகுதி), குருநாகல், புத்தளம் (மற்றும் அதற் கடுத்துள்ள, ஆள்புல கடல் பகுதி), அனுராதபுரம், பொலனறுவ, பதுளை, மொனராகல, இரத்தினபுரி, மற்றும் கேகாலை.

ராஜபக்ஷவின் கட்டளையானது, ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை அவசரகால சட்டம் அமுலில் இருக்கும் என்று நாடாளுமன்றம் கடைசித் தடவையாக அங்கீகரித்தமைக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் அவருக்குள்ள விசேட அதிகாரங்களின் கீழ் விடுக்கப் பட்டது.

## அவசரகாலம் நீக்கப்பட்டதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை

முப்படைகளைப் பணிக்கு அழைக்கும் சட்டவிதியானது பின்வருமாறு உள்ளது:

எங்காவது ஒருபகுதியில் பொது அமைதிக்கு ஆபத்து ஏற்படும்படியான சூழ் நிலைகள் தோன்றியிருக்கும் நிலையில் அல்லது நடக்கும் என்ற நிலையில் அல்லது அந்தப்பகுதியில் எழுந்துள்ள நிலைமையை பொலிஸாரால் கட்டுப்படுத்த இயலாது என்று ஜனாதிபதி தாம் கருதும் பட்சத்தில் அவர் வர்த்தமானி அறிவித்தல் மூலமான ஒருகட்டளையின் மூலமாக அந்தப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட ஆயுதப் படைகள் அனைவரையும் அல்லது அவர்களில் ஒரு பிரிவினரை அழைக்க முடியும்.

இந்த கட்டளையானது வேறு அதிகாரங்களையும் ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. ஓர் உதாரணம்: ஒரு சமூகத்தின் உயிர் வாழ்வுக்கு ஒரு சேவையை பாதுகாக்க தேவையென்று ஜனாதிபதி கருதுமிடத்தில், வர்தமானி அறிவித்தல் மூலமான கட்டளையொன்றை பிறப்பித்து அந்த சேவையானது அத்தியா வசிய சேவையென அறிவிக்க முடியும். எந்த ஒரு வேலை நிறுத்தம் அலலது பொது சேவைகளை பாதிக்கும் விதமான தொழிற்சங்க நடவடிக்கைகளையும் இது உள்ளடக்குவதாய் இருக்கும்.

அத்தியாவசியசேவையென்று அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்தசேவைக்குரிய எந்த ஒருவராவது வேலைக்கு செல்லாமல், அல்ல செல்ல மறுக்கும் நிலையில் குற்றம் ஒன்றை புரிந்தவராகக் கருதப்படுவார்.

ஒகஸ்ட் 25 ஆம் திகதி முன்கூட்டியே அறிவிக்காத தமது அறிவிப்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி பேசுகையில் கூறினார். 2009 மே மாதம் பயங்கரவாத நடவடிக்கைகள் ஓய்ந்ததன் பின்னர் இன்று வரை எந்த ஒரு பயங்கரவாத நடவடிக்கையும் இடம்பெறவில்லை. ''கிறீஸ் பூதம்'' என்ற கற்பனை நடவடிக்கைகளைத் தவிர. இந்த காலகட்டத்தில் பல தேர்தல்களை நடத்தி நாடு ஜனநாயகத்தை நோக்கி மேலும் நகர்ந்துள்ளது. இவை அமைதியான நியாயமான தேர்தல்கள் என்று சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே கடந்த அண்மைக் காலத்தில் அவசர காலச் சட்டத்தில் பல அம்சங்களை நாம் அகற்றியிருக்கிறோம். அதன் மூலம் சமூகத்துக்கு சாதாரண நிர்வா கத்தை வழங்கியிருக்கிறோம். அவசரகால சட்டங்களை அகற்றி நிர்வாகத்தை சாதாரண சட்டங்களின் கீழ் ஜனநாயக முறையில் நடத்தவதற்கான முன்மொழிவை நான் இந்தச் சபையில் சமர்ப்பிக்கின்றேன். எனவே அவசர காலத்தைத் தொடர்ந்து அமுல்படுத்தாமல் விட நான் முன்மொழிகின்றேன் என்றார்.

பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சந்தர்ப்பங்களிலேயே பொதுப்பாதுகாப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங் களைப்பாவித்து படையணிகளை சேவைக்கு அழைக்க முடியும் என்று அந்தச் சட்டப் பிரிவில் விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் நாடு முழு வதும் இன்று படையணிகள் பணியில் அமர்த்தப்பட்டிருப்பதற்கு பொதுப் பாதுகாப்பை அச்சுறுத்தும் சூழ் நிலைகள் என்ன என்பதற்கு அரசு இன்னமும் விளக்கம் அளிக்கவில்லை. அதேபோல் இந்த விடயத்தை ஒரு பிரச் சினையாக வாதிடவும் எதிர்க் கட்சிகள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. முயற்சி மேற்கொள்ளவில்லை. அதன் முக்கிய உறுப்

**தொகுப்பு: கோகுலன்**

பினர் களில் ஒருவரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மாத்திரம் சில எதிர்கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

### கிறீஸ் பூதம் தொடர்பிலான நடவடிக்கைகள்

'கீறிஸ் பூதம்' தொடர்பாக எழுந்துள்ள சம்பவங்களில் சில இடங்களில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் செயற்பட்டிருக்கிறார்கள். இது முக்கியமாக சட்ட ஒழுங்கு பிரச்சினையாகும். காவல் தரங்களில் சீர்குலைவு ஏற்பட் டிருப்பதாக தற்போது கடமை யில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கருத்து கொண்டிருக்கிறார்கள். பல சந்தர்ப் பங்களிலும் வழக் கமாக மேற்கொள்ளப் படும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தமது பகுதி நிலைமைகள் தொடர்பாக சமயத் தலை வர்கள், சிரேஷ்ட பிரஜைகள், முன்னணி தொழில் அதிபர்கள், தொழில் சார் பிரமுகர்கள், சமூகவியல் நிறுவனங்களுடனான கலந்துரையாடல்கள் சரியாக நடைபெற வில்லை. என்பது அவர்களின் கருத்து.

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பணியாளர் நலனோம்பு சங்க பணியாளர் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

## சங்கச் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பணியாளர் நலனோம்பு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள், அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இனிவரும் காலங்களில் அதிகரிக்கப்படும் என்று அண்மையில் நடைபெற்ற இயக்குநர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலனோம்பு கூட்டுறவுச் சங்க செயலாளர் செ.கெங்காதரன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சேவைக்காலத்தில் இருக்கும் போது உறுப்பினர்கள் வன்செயலால் அல்லது விபத்தால், இறந்தால் 50 ஆயிரம் ரூபா அவரது பின் உரித்தாளருக்கு வழங்கப்படும்.

சேவைக்காலத்தில் உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் 20 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகவும் வழங்கப்படும்.

வன்செயலால் அல்லது விபத்தால் ஏற்படுகின்ற இயலாமைக்கு அதாவது ஒரு கை இழப்புக்கு 10 ஆயிரம் ரூபாவும், இரண்டு கைகள் இழந் தால் 20 ஆயிரம் ரூபாவும், ஒரு கால் இழந்தால் 10 ஆயிரம் ரூபாவும் இரண்டு கால்கள் இழந்தால் 20 ஆயிரம் ரூபாவும், ஒரு கண் பார்வை இழந்தால் 10 ஆயிரம் ரூபாவும் இரண்டு கண்களும் பார்வை இழந்தால் 20 ஆயிரம் ரூபாவும் உடல் அவயங்கள் பூரணமாக இயங்காமையினால் 50 ஆயிரம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்கப்படும்.

சத்திரசிகிச்சை செய்யும் உறுப்பினர்களுக்கு இருதய சத்திரசிகிச்சைக்கு 20 ஆயிரம் ரூபாவும், சிறுநீரகம் சத்திர சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாவும், குடல் சத்திர சிகிச்சைக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

ஓய்வு பெறும் அங்கத்தவர்களுக்கு 5 வருடத்துக்கு மேல் 250 ரூபாவும், 10 வருடத்துக்கு மேல் 500 ரூபாவும், 15 வருடத்துக்கு 750 ரூபாவும், 20 வருடத்துக்கு மேல் ஆயிரம் ரூபாவும் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேவைக்காலம் என்பது நீண்டகால லீவு, ஒழுக்காறு விடுவிப்பு பெற்றவருக்கு கொடுப்பனவுகள் வழங்கமுடியாது என்று சபை ஒரு மனதாகத் தீர்மானித்துள்ளது.

வன்செயல், இறப்பு, விபத்து, சுகயீனம் ஏற்கனவே கொடுப்பனவுகள் பெற்றிருந்தால் அந்தப் பணியாளர்கள் ஓய்வு பெறும் பணியாளர் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் இயங்காமைக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு அரச மருத்துவ வைத்திய நிபுணர் அதிகாரியின் சான்றிதழ்களைப் பெற்று நிதி வழங்க வேண்டும் என்றும் தொடர்ச்சியாகச் சங்க நிதிய பங்களிப்பு செலுத்துபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட நிதி ஊக்குவிப்பு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம-311)

# புற்றுநோயாளர்களுக்கு உதவிகள்



நெதர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழ்வோரின் உதவியுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம் கைதடியில் உள்ள புற்று நோயாளர்களுக்கு உடுபுடைவைகள் மற்றும் நிதி உதவிகளை அண்மையில் வழங்கியது.

இந்த நிகழ்வில் புற்றுநோயாளர் ஒருவருக்கு கழகத்தலைவர் லயன் செல்லத்துரை இந்தப் பொருள்களை வழங்கினார்.

# பஸ்தரிப்பிடம் அமைக்கக் கோரிக்கை

நெடுந்தீவு பிரதான வீதியில் உள்ள புனித யாகப்பர் வீதிக்குச் செல்லும் சந்திப் பகுதியில் பஸ்தரிப்பிடம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பஸ் வருகைக்காக காத்துக் கொண்டிருக்கும் மக்கள் வெயிலில் புளியமரநிழல்களுக்குக் கீழும், பூவரச மர நிழல்களுக்குக் கீழும் காத்திருக்க வேண்டி உள்ளது.

மழை காலங்களில், பாதை அருகில் இருக்கும் வீடுகளில பஸ் வருகைக்குக் காத்திருக்க வேண்டியுள்ளது. சில சமயங்களில் பஸ் நிறுத்தப்படாது போனால் யாழ்.செல்லும் பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் நிலையும் ஏற்படுகிறது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர்.

(ம)

# ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் 40 பாடசாலைகளுக்கு தரமுயர்வு

யாழ்ப்பாணம், செப்.5

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வடக்கில் 40 பாடசாலைகள் இந்த வருடம் வளநிலையில் தரம் உயர்த்தப்படும் ஆசிரியர் வெற்றிடங்களும் முழுமையாக நிரப்பப்படும்.

கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன கூட்டிய கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இதில் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதில் அவர் மேலும் கூறுகையில்:-

வடக்கில் உள்ள 34 பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு பாடசாலை என 34 பாடசாலைகளும் மேலும் 6 பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

2012 ஜனவரியில் முழு பௌதிக வளங்களுடன், முழு ஆசிரிய ஆளணியுடன் இந்த 40 பாடசாலைகளும் இயங்கக் கூடிய வகையில் திட்டம் முன்னெடுக்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தில் நாடு முழுவதும் 1000 பாடசாலைகள் தரம் உயர்த்தப்படும். இதில் வடக்கு மாகாணத்துக்கு 125 பாடசாலைகள் தெரிவாகியுள்ளன.

அவற்றில் இந்த வருடம் 40 பாடசாலைகளும் எஞ்சியவை அடுத்தடுத்த வருடங்களில் அபிவிருத்தி செய்யப்படும் என்று அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

(ஐ)

## அனைத்துப் பாடசாலைகளிலும்

# மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.05

அனைத்துப் பாடசாலைகளும் மூன்றாந் தவணைக்கான கல்விச் செயற்பாடுகளுக்காக இன்று ஆரம்பமாகின்றன.

வடமாகாணத்தில் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளையும் தவிர அனைத்துப் பாடசாலைகளிலும் மூன்றாம் தவனைக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின்றன என்று வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உயர்தர பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணிகள் வடமாகாணத்தில் மேற்குறித்த இருபாடசாலைகளிலும் நடைபெறுகின்றன. இவ்வினாத்தாள்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு திருத்தப்படுகின்றன.

முதலாவது தொகுதி வினாத்தாள்கள் யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த 30 ஆம் திகதி முதல் திருத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 10 ஆம் திகதி இவை திருத்தும் பணிகள் நிறைவடைந்ததும் 12 திகதி இந்தப் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும்.

இரண்டாவது தொகுதி வினாத்தாள் திருத்தும் பணிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறும். பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் இப்பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான செயற்பாடுகள் ஆரம்பமாகும்.

இதேவேளை மூன்றாவது தொகுதி வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்கல்லூரியில் மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின்றன. இந்நிலையில் 16 ஆம் திகதி இக்கல்லூரி மூடப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை மூன்றாவது தொகுதி வினாத்தாள்கள் திருத்தப்படும். பின்னர் அடுத்தமாதம் 3 ஆம் திகதி தொடக்கம் இக்கல்விச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகும்.

இதேவேளை நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் திருத்தும் பணிகள் வடமாகாணத்தில் யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்று நேற்றையதினம் அவை திருத்தும் பணிகள் முடிவடைந்தன எனவும் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

(ம-4)

# பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து இரவில் பாதுகாப்புக் கடமைகளில்

யாழ்ப்பாணம், செப்.5

உடுவில் ஆலடிப் பகுதியில் பொதுமக்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து இரவு நேரப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மர்மமனிதன் பீதியின் கதையால் மிகவும் பாதிப்படைந்துள்ள இந்தப் பிரதேச மக்கள் தமது பாதுகாப்புக்காக வீதிகளில் நின்று கொண்டிருந்த வேளை இராணுவத்தினரால் தாக்கப்பட்டதால் மானிப்பாய் பொலிஸ் பிரிவால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அப்பகுதி பொதுமக்களை சந்தித்துக் கலந்துரையாடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மர்மமனிதன் என்பதே கிடையாது இவ்வாறு இருப்பதாக பொதுமக்கள் நீங்கள் தான் கூறுகிறீர்கள். அதனால் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட நீங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் மின்சாரம் இல்லாத வீடுகளுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுக் கொள்ளுவதற்கும் நாங்கள் அனுமதிக்கின்றோம். இரவு 9 மணிக்கு பின்னர் யாரும் வீதிகளில் நடமாடவோ, சத்தமாக வானொலி கேட்கவோ தொலைக்காட்சி பார்க்கவோ வேண்டாம்.

வீடுகளில் வீதிக்கு முன்பாக மின்விளக்குகளை அணைக்காமல் எரிய விடவும்.

இவற்றை மீறி நீங்கள் நடந்து கொண்டால் உங்கள் பாதுகாப்புக்கு நீங்களே பாத்திரமானவர்களாக இருப்பீர்கள்.

இது போன்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பொதுமக்களிடம் பொலிஸார் எடுத்துக் கூறினார்.

இதனால் ஆலடி பிரதேசத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

பாதுகாப்புக் கடமைக்காக குடும்பத்தலைவனை அனுப்பி வீட்டு குடும்பத்தைச் சார்ந்தவர்களும் வீடுகளில் விழிப்புடன் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

(ம-313)

# இளைஞர்களை உள்வாங்கினால் பெரியளவில் அபிவிருத்திகளை பெறமுடியும்

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர்

யாழ்ப்பாணம், செப்.5

சபைகள் மூலம் நிறைவேற்றப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு இளைஞர்களை அதிகம் உள்வாங்குவதன் மூலம் பெரியளவில் வளர்ச்சியை பிரதேச சபை பெறமுடியும். அத்துடன் சபை உறுப்பினர்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன்.

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவி ஏற்பு நிகழ்வு அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு [illegible] நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

மக்களின் உன்னதமான பங்களிப்புடன் பிரதேச மேம்பாட்டுக்காகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் சபை உறுப்பினர்கள் தமது பணியை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன் பெண்கள் இந்தச் சபையில் உள்வாங்கப்பட்டுள்ளதால் கூடுதலாக பெண்களின் பங்களிப்பும் கட்டாயம் தேவை. நேர்மையுடன் ஏற்றத்தாழ்வு இல்லாமல் பணிகளை நிறைவேற்றினால் மக்களும் இதனால் பயனடைவார்கள்.

சபையின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடும் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும்.

இதன் மூலம் பிரதேசத்தில் சபை மூலம் முன்னேற்றமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியும்.

இளைஞர்களின் திறமைகள் ஆலோசனைகள் இவற்றுக்கு மதிப்புக் கொடுத்து பாரபட்சமின்றி சபை செயற்பட வேண்டும்- என்றார்.

(ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய் பரவாது தடுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## சாவகச்சேரி நகரசபைத் தலைவர்

தென்மராட்சி, செப்.5

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் அபாயம் காணப்படுவதால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மக்கள் அதனை வராமல் தடுப்பதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நகர சபைத் தலைவர் இ.தேவகாயம்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நுளம்பு பெருக்கக் கூடிய அனைத்துப் பற்றைக் காணிகளும் பராமரிப்பற்ற ஆதனங்களும் உடனடியாக துப்புரவு செய்யுமாறு ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களை கேட்டுள்ளார்.

15 நாள்களுக்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் நகர சபையின் டெங்கு ஒழிப்புப் பிரிவினரால் துப்புரவு செய்யப்படுவதுடன் அதற்கான செலவினத்துடன் தண்டப்பணமும் ஆதன உரிமையாளரிடமிருந்து அறவிடப்படும் என்றும் கூறப்பட்டது.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்காத ஆதன உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் மீது சுகாதார திணைக்களத்துடன் இணைந்து நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினார். அதனைத் தவிர்க்க மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரியுள்ளார்.

இதேவேளை- சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்படும் காணிகளைத் துப்புரவு செய்யக் கோரி துண்டுப் பிரசுரங்கள் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் ஒட்டப்பட்டு வருகிறது.

துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ள தினத்திலிருந்து 15 தினங்களுக்குள் துப்புரவு செய்யுமாறும் தவறின் இலங்கை ஜனநாயகக் குடியரசின் 2007 ஆம் ஆண்டில் நுளம்பு பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)



கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோரின் நலன்கருதி சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒரு தொகை உலர் உணவுப் பொருள்களை அண்மையில் வழங்கியது. சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.நவரத்தினம் மற்றும் சங்கத்தின் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.லோக நாதன் ஆகியோர் உலர் உணவுப் பொருள்களை யாழ். விழிப்புலனற்றோர் சங்கப் பொருளாளர் எஸ்.கனகசபையிடம் கையளிக்கின்றனர். (ம-288)

# விஷமிகளால் போத்தல்கள் உடைப்பு நெற்செய்கையாளர் பெரும் சிரமத்தில்

தென்மராட்சி, செப்.5

கல்வயல் இல்வாரை குளத்தை அண்டிய நெல்வயல்களில் கால் வைக்க முடியாத அளவுக்கு உடைந்த போத்தல் ஓடுகள் காணப்படுவதால் நெற் செய்கையாளர் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இல்வாரைக் குளத்தினுள் வெறுமையான பியர் ரின்களும் உடைக்கப்பட்ட போத்தல்களும் அளவுக்கதிகமாகக் காணப்படுவதாக வும் குளக்கட்டில் உள்ள சிமெந்துக் கட்டில் போத்தல்கள் பெருமளவில் அடிக்கப்பட்டு உடைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றைப் பாவித்தவர்களால் வயல் வரம்புகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வயல்களுக்குக் குப்பை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரச் சில்லுகளை உடைந்த போத்தல் துண்டுகள் வெட்டுவதால் காற்றுப் போய் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# பொன்னாலையில் எரிபொருள் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், செப்.5

பொன்னாலைச் சந்தியில் எரிபொருள் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை உறுப்பின்களின் முதலாவது அமர்வுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனம் பாவனைக்கு விடப்பட வேண்டும்.

நிலுவையில் உள்ள பிரதேச சபையின் சோலைவரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் தெருவிளக்குகள் பொருத்தி அவற்றைச் சீர் செய்ய வேண்டும். பிரதேச எல்லைக்குள் விளம்பரங்கள் வைப்பதற்கு முன்அனுமதி பெறவேண்டும் போன்ற கோரிக்கைகளும் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. (ம-313)

# பொலிஸ் சேவையில் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் தெல்லிப்பழையில்



யாழ்ப்பாணம், செப்.5

இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 145 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொலிஸ் நிலையங்களில் நேற்று முன்தினம் காலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து விசேடமாக பொலிஸ் நிலையங்களுக்கான மின்னொளியிலான பெயர்ப் பலகைகள் திரைநீக்கம் செய்யப்பட்டன. கூட்டங்கள், நடமாடும் சேவைகள் எனப் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் விசேட நிகழ்வுகள் நடைபெற்றதுடன் பொலிஸார் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் இணைந்து நடமாடும் சேவைகள், பெயர் பலகை நீக்கம் எனப் பல செயற்பாடுகளிலும் ஈடுபட்டார்கள்.

பொலிஸ் சேவையின் 145 ஆவது வருட நிறைவை நினைவு கூருமுகமாகத் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் சமய வழிபாடுகளுடன் பொலிஸ் நிலையப் பெயர்ப்பலகை தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரனால் திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் பிரபாகர மூர்த்தி, நிர்வாகக் கிராம அலுவலர் கே.சாந்தமோகன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ம-86)

# யாழ். மத்திய கல்லூரி மூன்றாம் தவணை 12 ஆம் திகதியே ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ். மத்திய கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் எதிர் வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாடசாலையில் மதிப்பீட்டுப் பணிகள் இடம் பெறுவதன் காரணமாகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# விவசாயக் கண்காட்சி இன்று ஆரம்பமாகிறது

வலி வடக்கு, செப் 05

இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி என்னும் தொனிப் பொருளிலான விவசாயக் கண்காட்சி இன்று 05 ஆம் திகதி திங்கள் கிழமை ஆரம்பமாகி 09 ஆம் திகதிவெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

திங்கள்கிழமை யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த வளாகத்தில் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சியை பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காலை 8.30 மணிக்க சம்பிரதாய பூர்வமாகப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

மத்திய விவசாயத் திணைக்களம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விவசாய பீடம் கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் சுதேச மருத்துவத் திணைக்களம் வானிலை அவதான நிலையம் கமநல அபிவிருத்தி திணைக்களம் தென்னைப் பயிர் செய்கை சபை தென்னை அபிவிருத்தி அதிகார சபை பனை வள அபிவிருத்திச் சபை அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்ப நிறுவனம் ஹெக்ரர் கொப்பே கடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனம் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் விவசாய காப்புறுதிச் சபை வங்கிகள் விவசாயத்துடன் தொடர்புடைய தனியார் வங்கிகள் என பல நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்தக் கண்காட்சியை நடத்துகின்றன.

கண்காட்சி பல்வேறு வகையான தொழில் நுட்பங்களும் உள்ளடக்கியதாக அமைக்கப் பெற்றுள்ளது. குறிப்பாக விவசாய உற்பத்திப் புள்ளி விவரங்களும் தகவல்களும் இலங்கை மண்வளம், மண் சம்பந்தமான பிரச்சினைக்குரிய தீர்வுகள், உயர்தர நாற்றுக்களின் உற்பத்தி, உள்நாட்டு மரக்கறிகள், மேல் நாட்டு மரக்கறிகள் கிழங்குப் பயிர்கள் இலை மரக்கறிகள் மறுவயற் பயிர்கள், பழப் பயிர்கள் ஆகியவற் றின் உற்பத்தித் திறனை மேம் படுத்தல், விதி முறைப் பயிர்ச் செய்கை தென்னைப் பயிருடன் தீவனப் பயிர் செய்கை, தகாத காலங்களில் மரக்கறிச் செய்கை, வளங்குன்றிய பகுதிகளில் கொள்கலன்களில் மரக்கறிச் செய்கை, நகர்புறக் குடியிருப்பாளர்களுக்கான வீட்டுத் தோட்டம், மாதிரி சேதன வீட்டுத் தோட்டம் போன்றன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வீடுகளின் வெளிப்புற மற்றும் உட்புறங்களில் அலங்காரத் தாவர வளர்ப்பு, மண்ணின்றிய மரக்கறிப் பயிர் செய்கை, காளான் செய்கையும் வித்து உற்பத்தியும், மூலிகை தாவர விருத்தியும் பயன் பாடும், விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் வெளிப்பாடுகள் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தலும் தரத்தை மேம்படுத்தலும் போன்றன தொடர்பான வழிகாட் டல்களும் உள்ளடங்கப்பட் டுள்ளன.

உற்பத்திப் பொருள்களின் பெறுமானத்தை அதிகரித்தல் ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணை நீர் முகாமைத்துவமும் நிலத்தடி நீர் சேமிப்பும் பண்ணை இயந்திரங்களின் பயன்பாட்டை மேம் படுத்துதல், விவசாய அடிப்படையிலான கைத்தொழில் முயற்சிகள் தென்னை அபிவிருத்தியும் அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பமும் பனைவள அபிவிருத்தியும் அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பமும் மரமுந்திரிகை அபிவிருத்தியும் அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பமும் சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை விவசாய காப்புறுதிக்கான வாய்ப்புகள் விவசாய வங்கிக்கடன் பற்றிய விளக்கங்கள் எனப் பல விடயங்களும் ஒரே இடத்தில் இந்தக் கண்காட்சியில் மையப்படுத்தப்பட்டு பெரியளவில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவாகள் விவசாயிகள் என பல்வேறு தரப்பினருக்கும் பயன்பாடுடைய கண்காட்சியாக இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 86-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொரியாவில் வேலைவாய்ப்பைக் குறைக்க தென்கொரிய மனிதவள அமைச்சு நடவடிக்கை

தொழில்வாய்ப்புத் தேடி தென் கொரியாவுக்குச் சென்றுள்ள இலங்கைப் பணியாளர்கள் இலங்கை- தென்கொரிய வேலை வாய்ப்பு ஒப்பந்தத்தை மீறி அங்கு சட்ட விரோதமாகத் தங்கி யுள்ளமை குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தியுள்ளது.

சட்டவிரோதமாகப் பணியாளர்கள் தென் கொரியாவில் தங்கியிருப்பதால் தங்கியிருப்பவர்களின் நாட்டுக்கு வழங்கி வரும் வேலைவாய்ப்பு எண்ணிக்கையைக் குறைக்க தென் கொரிய மனித வள அமைச்சு தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையர்கள் சிலருக்கு கிடைக்கவிருந்த வேலை வாய்ப்பு இல்லாது போயுள்ளதென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு தென் கொரியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்துவர விசேட வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது. சேவைக்காலம் முடிந்தும் தென் கொரியாவில் தங்கியுள்ளவர் களை மீண்டும் நாட்டுக்கு அழைத் துவரும் ஒரு நடவடிக்கையாக அவர்களது உறவினர்கள் ஊடாக தகவல் வழங்கப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)



நல்லூர் கந்தன் ஆலய மஹோற்சவத்தின்போது நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இசையரங்கில் சகோதரிகளான வாசுகி நந்தினி ஆகியோர் பாடுகின்றனர். பக்கவாத்தியக் கலைஞர்களாக ஏ.ஜெயராமன்-வயலின், சு.நாராயணன் சர்மா-மிருதங்கம் மீட்டுகின்றனர்.

# நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் அலுவலகச் செயலணி

நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி, விரைவுபடுத்தும் நோக்குடன் பிரதமர் அலுவலகச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசு பிரதமர் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரனால் அறிவிக்கப்பட்டுள்ள மேற்படி செயலணியில் ஜெயக்குமார் திலீபன், செல்வராஜா செல்வத்துரை, திருமதி. ஜெயமதி சிவசோதி, வைத்திய கலாநிதி மாலதி வரதர் ஆகியோர் தற்போது இடம் பெறுகின்றனர்.

நாடு கடந்த தமிழீழ அரசின் வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகளை பிரதமரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி செயலணி முன்னெடுக்கவுள்ளது.

மேலும், இந்தச் செயலணியின் செயற்பாடுகளுடன் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் pmotgte.org என்னும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் அலுவலகம் கேட்டுக் கொள்கிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன் அரச இணையத்தில் இலங்கைக்கு எதிராக முறைப்பாடு

பிரிட்டன் அரச இணையத் தளத்தில் இலங்கைக்கு எதிராக முறைப்பாடு ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் ஒரு லட்சம் பேர் கையொப்பமிட்டால், அந்த விவகாரம் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றில் பேச்சு நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது குற்றச் செயல்கள் இடம் பெற்றதாகவும், சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் குறித்த முறைப்பாட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஜேர்மனியில் இந்திய தூதரகம் முன்பாக மரண தண்டனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மரண தண்டைனைக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் உள்ள இந்திய தூதரகம் முன்பாக நேற்று முன்தினம் அங்குள்ள தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டது .

நீதித்தாயின் கண்களைத் துறக்க தனது உயிரை துறந்த தமிழினப் பெருமகள் தோழர் செங்கொடிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு தொடர்ந்து மலர் வணக்கம் மக்களால் முன்னெடுக்கப்பட்டது . அதனைத் தொடர்ந்து மரண தண்டனைக்கு எதிரான கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது .

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனு தொடர்பில் மறு பரிசீலனைக்கு அனுமதிக்காது அவர்களுக்கு கருணை காட்டித் தூக்குத் தண்ட னையிலிருந்து விடுவிக்குமாறு இளைஞர்களால் கோசங்கள் எழுப்பப்பட்டன .

மேற்படி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஜேர்மன் ஈழத்தமிழர் மக்களவையின் சார்பில் இந்தியத் தூதரகத்தைச் (அவர்கள் நேரடியாக ஏற்க மறுத்தாலும்) சென்றடைய மனு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது .

இதேவேளை ஜேர்மன் ப்ராங்பேட் (Frankfurt) நகரிலும் உள்ள இந்தியத் தூதரகப் பிரதிநிதியின் காரியாலயம் முன்றலிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது .

நீங்களும் ஓர் கணினிக்கு உரிமையாளராக?

அதிரடி விலைக்கழிவில்...

| SDSCOM - I | SDSCOM - II | SDSCOM - III |
|---|---|---|
| Processor Intel Dual Core 3.2 | Processor Intel Dual Core 3.2 | Processor Intel i3 3.06 |
| Mother Board-Biostar G41 | Mother Board - Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston |
| HDD 250GB Samsung | HDD 500GB Samsung | HDD 500GB Samsung |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX |
| DVD Writer | DVD Writer | DVD Writer |
| Monitor LCD 16" Viewsonic | Monitor LED 16" Viewsonic | Monitor LCD 18.5" Dell |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad |
| M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker |
| USB Keyboard 104 Keys | Web Camera/ Headphone with mic | USB Keyboard 104 Keys |
| | PS/2 Keyboard 107 Keys | Web Camera/Headphone with mic |
| | | UPS 650VA |
| Price :- Rs. 33,400/= | Price :- Rs.35,500/= | Price :- Rs.48,900/= |
| Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original |

★ 1 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்! ★கையிருப்பில் உள்ளவரை மட்டுமே....

Our Services

Sales, Repair & maintenance, Software Developments and all type of printing etc.

Authorized Dealer for..

Hp, Dell Products
Biostar Mother Boards
T P Link Products
Viewsonis Products
Havit Products
East UPS

வரவேற்கின்றோம்!
மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான கணினி, கணினி சார் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தேவைகளுக்கும் நாடுங்கள்....

SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்...
T/P:- 021-5100105,0777-874705 , Fax :- 021222 4500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னத்தைச்... ...சொல்ல?!

மாவை. நல்லூர் சந்நிதிக் கந்தன்கள்



நல்லைக் கோயிலை இந்தப் "பிரசண்டன்" இன் னும் விட்டு விடவில்லைப் போலிருக்கு என்று நீங் கள் முணுமுணுப்பது எனது காதிலும் விழுகின்றது.

இற்றைக்குச் சுமார் 65 வருடங்களுக்கு முன் அதாவது 1946,1947களில் ஒரு சிறு பெடியனாக வயதோ ஏழு, எட்டு, படிப்போ மூன்றாம் ஆண்டு படிக்கும் ஒரு குட்டித் தம்பியாக, மாவைக் கந்தனது சப்பறத் திருவிழா பார்த்த காலம் அடி மனதில் ஆழமாகவே பதிந்துவிட்டது.

ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி என்பன வரிசையாக, கோயில் வீதியில் நிற்கும், அந்தக் காலத்தில் இந்தப் பிரசண்டன் நல்லூருக்கு வந்த ஞாபக மில்லை.

அப்போது இருந்த அமைதி, பக்தி, காவடி, பஜனை, தவில் சமா, தண்ணீர்ப்பந்தல் இனி எப்போதும் வரப்போவதில்லை. இது மாவைக்கும் நல்லைக்கும் மிகப் பொருந்தும்.

அந்தக் காலத்தில் கோபுர எழிலோடு பக்திப் பரவசமும் மிக்கதாக இருந்த மாவிட்டபுரத்தில் இன்று காடு வெட்டி, பாம்படித்துப் பின், கண்ணி வெடி அகற்றி, பாஸ் எடுத்து பதிவுகளை மேற்கொண்டு போக வேண்டிய நிலையில் மாவைக் கந்தனும் மனம் நொந்து போய் இருந்தான்; சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர்.

நல்லைக் கந்தனோடு பட்டினத்துக் கந்தன், அத்தோடு பணக்காரக் கந்தன் என்றும் அழைக்கப்படுபவன், சந்நிதிக் கந்தன் அன்னக் கந்தனாக அமைதி காத்து நின்றாலும், அவனது வண்ணமுறு தேரும் தீமூட்டி எரிக்கப்பட்டதை தமிழ் மக்கள் மறந்துவிட முடியாது.

என்னவோ தெரியாது, கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது இல்லாத வெறுப்பு சந்நிதித் தேரையும் யாழ்.பொது நூல் நிலையத்தையும் கூட விட்டு வைக்கவில்லை! கல்விச் செல்வத்தையும், இறை பக்தியையும் தீமூட்டி எரித்து விடலாம் என்று எண்ணுவது மடமையாகும். காலம் இவர்களுக்கு பதில் சொல்லியாகும். கவலையை விட்டுவிடுவோம்.

நல்லையில் திருவிழா முடிந்த மறுநாள் கொழும்பில் பெரும்பதவி வகிக்கும் ஒரு தூய பக்திமான், வெள்ளை வேட்டி, திருநீறு, அர்ச்சனைத் தட்டோடு காலை 6.40 மணிக்கு நல்லை வந்தார். கோயில் அடித்துப் பூட்டப்பட்டிருந் தது. மிகுந்த வேலைப்பளு மத்தியில் காலை 6.40 முதல்7 மணிவரை முருக தரிசனத்துக்கு ஒதுக்கி இருந்தாராம்.

பாவம் பூட்டிய கதவு திறபடுமா? என அங்குமிங்கும் பதற்றத்தோடு ஓடி ஆடித் திரிந்தார். சிங்களத்திலும், சிறு தமிழ் எழுத்திலும், நேர அட்டவணையை அங்கே தண்டிப் பிளைக் கும் ஆசாமி சுட்டிக் காட்டினார். அப் போது தான் வருகை தந்த அந்தத் தமிழருக்கு நிலமை புரிந்தது. ஏழு மணிக்கு அவரது ஏவலாளர்கள் "பிக்" அப்பில் வந்துவிட்டார்கள்.

ஒரு சில நிமிட நேரம் தன் ஆதங்கத்தை அங்கு நின்ற சிலரிடம், கண்கலங்கச் சொல்லிவிட்டு, பூசைத்தட்டோடு சந்நிதியிலும் முருகன் இருக்கிறான் தானே என்று முணுமுணுத்துக் கொண்டு வாகனத்தில் ஏறிப்பறந்தார்.

அவரது வாகனம் அப்பால் நகர்ந்தபின் அவரது ஆதங்கத்தை அடியவர் ஒருவர் கேட்டவாறே எடுத்து ரைத்த "கதை" இது: தாம்பத்து முறை இந்திய திருத்தல யாத்திரை மேற்கொண்டதாகவும் அங்கு எந்தக் கோயிலும், விடிந்த பின் தாழிட்டுப் பூட்டுப் போட்டு பூட்டப்படுவதில்லை. தனது அறிவுக்கு எட்டியவரை, சிறைச்சாலையும், ஆஸ்பத்திரியும் மட்டுமே மணி அடிக்கத் திறந்து பூட்டுவதாகவும் கூறினார் அப்பிரமுகர். நல்லூரின் பெருமையை, மகிமையை, தனித்துவத்தை இது கூட்டுவதாக இருப்பதாக வேண்டா விவாதக் கருத்துக் கூறுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதில் மற்றவர்கள் விமர்சனம் செய்யவோ, வாதம் செய்யவோ, என்ன உரிமை உண்டு என்ற வாதத்திலும் நிறைய உண்மை இருக்கத்தான் செய்கிறது. முருகன் முருகனாக இருந் தாலும் அவரும் கட்டுப்பட்டவர்தானே!

மேலங்கி அணிந்து நல்லையில் யாரும் உட்பிரவேசிக்க முடியாது- ஜனாதிபதியானால் என்ன முப்படைத் தளபதியானாலென்ன இதுவே சட்டம். ஆனால், மேலங்கியை கழற்றி விட்டு; வம் புக்கார கிப்பித் தலையன்; தன் கால் சட்டை பொக் கற்றில் ஒரு புறம் வெண்புகைப் பெட்டியும், மறு பொக் கற்றில் சப்பட்டை போத்தலுமாக உள்ளே ஓடித் திரிந்து விட்டு வெளியே போவது - பார்ப்பதற்கு மனதில் எதையோ செய்கிறது. சட்டத்தை மாற்றுவது யார் கையிலும் இல்லை. எல்லாம் அவன் செயல்!



பிரசண்டன்

# தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி; துபாய் நிறுவனத்திடமிருந்து நஷ்டஈடு

## சுசில் பிரேம் ஜயந்த தகவல்



கொழும்பு,செப்.5

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியினால் ஏற்பட்டுள்ள சகல நஷ்டத்தையும் இறக்குமதி செய்த நிறுவனத்திடம் அறவீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

தரம் குறைந்த பெற்றோலை சந்தைக்கு விநியோகம் செய்ய முடியாத காரணத்தினால் அதனை நெப்டா எரிபொருளாக மாற்றி, இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியினால் இதுவரையில் 41 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

2500 மெற்றிக் தொன் தரம் குறைந்த பெற்றோல் சந்தைக்கு விநியோகம் செய்யமுடியாமல் தேங்கிக் கிடப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த தரம் குறைந்த பெற்றோலை தாம் வழங்கவில்லை. இதனால் நஷ்டத்தை பொறுப்பேற்க முடியாது என்று துபாய் நிறுவனம் தெரிவித்துள் ளது. (ச)

## மர்ம மனிதன் விவகாரத்தில் 9 பேருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,செப்.5

மட்டக்களப்பு, ஊறணிப் பிரதேசத்தில் மர்ம மனிதர்கள் விவகாரம் தொடர்பில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரங்களின் பின்னணியிலுள்ளதாகக் கருதி கைதுசெய்யப்பட்ட 9 பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட 9 பேரும் அன்றைய தினம் மாலை மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோதே இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது.

இந்த 9 பேரும் ஏற்கெனவே சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவிற்கமைய பிணையில் விடுவிக்கப் பட்டனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழுவினரால் மீண்டும் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தரமற்ற பெற்றோலை ஏற்றுமதி செய்யவில்லை

## துபாய் நிறுவனம் கூறுகிறது

கொழும்பு,செப்.5

இலங்கையில் தரமற்ற பெற்றோலை சந்தைக்கு விட்டமை தொடர்பில் தற்போது அரசு பெரிய பிரச்சினைக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கிறது.

இந்த தரமற்ற பெற்றோல், சிங்கப்பூரில் உள்ள துபாய் நிறுவனம் ஒன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஈ.என்.ஓ.சி என்ற இந்த துபாய் நிறுவனம் இலங்கையின் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நியமங்களுக்கு ஏற்பவே தமது நிறுவனம் பெற்றோலை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ததாக அந்த நிறுவனத்தின் சிங்கப்பூர் கிளை அதிகாரி ஜேர்மி சியா தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கை அரசு, தம் மிடம் நஷ்டஈட்டை கோருமானால் எந்தவித நஷ்டஈட்டையும் வழங்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பட்டுள்ளார்.

இதேவேளை பெற்றோல் துபாய் நிறுவனத்திடம் இருந்து கடன் அடிப்படையிலேயே பெறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அந்தக் கடனை மீளசெலுத்துவதில் எவ்வித தாமதமும் காட்டப்படமாட்டாது என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தரமற்ற பெற்றோல் இறக்குமதி விடய குற்றச்சாட்டு தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹரி ஜெயவர்த்தனவை பதவி நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அவர் அரசியல் பின்னணியை கொண்டிருப்பதால் அது கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 145 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கொழும்பில் அமைந்துள்ள பொலிஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோன் ஏற்றுக்கொள்கின்றார்.

# மருந்து விற்பனை நிலையங்கள் குளிரூட்டப்படுவது அவசியம்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

கொழும்பு,செப்.5

மருந்து விற்பனை நிலையங்கள் அனைத்தும் குளிரூட்டப்பட்டிருப்பதைக் கட்டாயமாக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் மருந்துகளின் தன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துகளை 24 பாகை செல்சியசுக்குக் குறைந்த வெப்பநிலையில் வைத்திருப்பது அவசியம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சூழல் வெப்பநிலையைக் கருத்திற்கொள்ளும் போது நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரமே 24 பாகை செல்சியசை விடக் குறைந்த வெப்பநிலை காணப்படுவதால் அங்கு சூழல் வெப்பநிலையில் மருந்துகளைப் பாதுகாக்க முடியும்.ஏனைய மாவட்டங் களில் 24 பாகை செல்சியசை விட அதிக வெப்பநிலை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதலில் முடிந்த இருவரின் வாய்த்தர்க்கம் நகரசபை பணியாளர் பொலிஸாரால் கைது

மன்னார், செப்.5

மன்னார் நகரசபையின் சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவருக்கும், பஸ் சாரதி ஒருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலில் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நகரசபையின் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர் ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வவுனியா டிப்போவுக்கு சொந்தமான பஸ் சாரதி ஒருவர் வாய்த்தர்க்கத்தின் காரணமாகத் தாக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் சிறு காயத்துக்குள்ளான குறித்த பணியாளர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின் இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட மன்னார் நகரசபையின் தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் மன்னார் அரச போக்குவரத்துத் தரிப்பிடத்துக்குச் சென்றனர்.



பின்னர் மன்னார் சாலை முகாமையாளரிடம் இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. சாலை முகாமையாளர் குறித்த சாரதியை உடனடியாக மன்னார் நகரசபைக்கு அனுப்பிச் சமரசம் பேசுவதாகத் தெரிவித்தார்.

மறுநாள் சனிக்கிழமை காலை மன்னார் நகரசபை சுத்திகரிப்புப் பணியாளர்கள் பணிக்குச் செல்லாமல் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

குறித்த சாரதி மன்னார் நகர சபைக்கு வந்தார். மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் ஒன்றுகூடி மேற்படி பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்தனர்.

பிரச்சினை தீர்க்கப்படும் நேரத்தில் மன்னார் நகரசபையைச் சேர்ந்த சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவர் திடீரென சாரதி மீது கையால் தாக்கினார்.

இதனால் மீண்டும் அந்த இடத்தில் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். சாரதி மீது தாக்கிய பணியாளர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

மன்னார் நகர சபைத் தலைவர் மற்றும் உறப்பினர்களை நம்பி வந்த மேற்படி பஸ் சாரதியைத் தாக்கியமை கண்டிக்கத்தக்க விடயமாகும். குறித்த பணியாளர் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் காலங்களில் ஏனைய பணியாளர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் குறிப்பிட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என மன்னார் நகரசபையின் தலைவர் சந்தான் பிள்ளை ஞானப்பிரகாசம் தெரிவித்தார். (க-601)

## கிராமங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

மன்னார், செப்.5


இந்து சேவா சங்கத்தின் அனுசரணையுடன் மீள்குடியமர்ந்த 10 கிராமங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின் மீள்குடியமர்ந்த மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறிய நிலையில் மக்கள் வாழும் 10 கிராமங்களுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக இந்து சேவா சங்கத்தின் இணைப்பாளரும் மாந்தை தேற்கு பிரதேச சபையின் உறுப்பினருமாகிய மகாலிங்கம் நடேசன் தெரிவித்தார்.

இதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானோருக்கும், விதவைகளுக்கும் விசேட முறையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல் மற்றும் கோழி வளர்ப்பு, பசுமாடு வளர்ப்பு, விவசாய உபகரணம் வழங்குதல் போன்ற உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-601)

## பொலிஸ் திணைக்களத்தின் 145 ஆவது ஆண்டு நிறைவு



மன்னார், செப்.5

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 145 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் 145 ஆவது ஆண்டு நிறைவு நாள் கொண்டாடப்பட்டது.

இதன்போது மன்னார் பொலிஸ் நிலைய பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதை இடம்பெற்றதோடு பொலிஸ் நிலையத்துக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட பெயர்ப் பலகையை மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஏ.என்.லக்சிறி விஜயசேன திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துசார தலுவத்த, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ரெவல் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி மோகநாதன், மன்னார் சாலை முகாமையாளர் அஸ்வர், மும்மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-601)

## வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு குறுகியகால பயிற்சி நெறிகள்

வவுனியா, செப்.5

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய குறுகிய காலப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளைஞர் விவகார அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தொழில்நுட்பக் கல்லூரிப் பயிற்சித் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குறுகியகால ஆறுமாத பயிற்சி நெறிக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் (கணினிப் பயிற்சிநெறி) ஆங்கிலச் சான்றிதழ்களும் தொடர்பாடலும் பயிற்சிநெறி (வேலை தேடுபவர்கள் பயிற்சிநெறி) ஆகிய இருபயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பக் கல்வியை முடித்து உயர்கல்வியை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ தொடர்கின்றவர்களுக்கும் வேலை தேடுபவர்களுக்குமாக அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவின் வேண்டுதலுக்கு அமைய ஆரம்பிக்கவுள்ளன. எனவே இவற்றுக்கான விண்ணப்பப் படிவத்தையும், அவற்றுக்கான விவரக் கோவையையும் தை மாதம் 2012 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறிகளின் விவரங்களையும் தொழில் நுட்பக் கல்லூரி, நெளுக்குளம் வவுனியாவில் நேரடியாகவும் தபால் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இவற்றுக்கான விண்ணபத் திகதி 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டு 10 ரூபா முத்திரையை உரிய இடத்தில் ஒட்டி நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமோ அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி, நெளுக்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் வை.சத்தியநாதன் தெரிவித்துள்ளார். தொடர்புகொள்ள வேண்டுமாயின் காரியாலயத் தொலைபேசி இலக்கம் 024 2223664 உடன் தொடர்பு கொள்ள முடியும்.

## துணுக்காய் கல்வி வலயத்தில் 14 ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள்

மல்லாவி, செப்.5

துணுக்காய் கல்வி வலயத்தில் 14 பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், கிறிஸ்தவம், நடனம், சித்திரம், விவசாயம், மனையியல், வர்த்தகம், முறைசாராக்கல்வி, இரண்டாவது மொழி சிங்களம், தமிழ், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், கணிதம் ஆகிய 14 பாடங்களுக்கே ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மேற்படி பதவிக்கு ஆசிரியர் தரம் 1 அல்லது தரம் 2 II ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். பட்டதாரி ஆசிரியர்களாயின் டிப்ளோமா நிறைவு செய்திருப்பதுடன் ஆசிரியராக 7 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.


மேலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயின் ஆசிரியர் சேவையில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் உரிய விண்ணப் படிவங்களை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக்கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஏனைய கல்வி வலயங்களிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்தத் தகவல்களை துணுக்காய் கல்வி வலயக்கல்வி முகாமைத்துவத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்தார். (க-425)

## மலைப் பாம்பு பிடிபட்டது



மன்னார், செப்.5

மன்னாரில் ஏழு அடி நீளம் கொண்ட மலைப்பாம்பொன்று பிடிபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மூர் வீதி காட்டுப் பள்ளி மூன்றாம் குறுக்குத் தெருப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் வளாகத்தினுள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தப் பாம்பு பிடிபட்டுள்ளது.

குறித்த பாம்பைப் பெருந்திரளான அந்தப் பகுதி மக்கள் பார்வையிட்டனர்.

இந்தப் பாம்பு அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குள்ளிருந்து வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

## மாதா ஆலயத் திருவிழா

மன்னார், செப்.5

மன்னார் குஞ்சுக்குளம் கிராம மக்களின் பாதுகாவலியாம் புனித அங்கமாத்து மாதா ஆலயத்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையால் திருவிழாத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இதேவேளை அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு இளைஞர் ஆண்டு சிறப்புக் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

இதன்போது தியாக தீபங்கள் அருட்பணி பஸ்ரியான் மற்றும் அருட்பணி பாக்கியம் ரஞ்சித் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய சிறப்பு நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (க-601)

## குரவயல் த.வி. சொந்த இடத்தில்

முல்லைத்தீவு, செப்.5

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தினுள் வரும் குரவயல் தமிழ் வித்தியாலயம் இன்று தொடக்கம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்குமென முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையைச் சேர்ந்த சகல ஆசிரியர்களும் உடனடியாக இந்தப் பாடசாலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இவர்களுக்கான இனி வரும் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இதே பாடசாலையில் வைத்தே வழங்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(க-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வீட்டுக்காக அரச ஊழியர் காத்திருப்பு

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்து வழங்குவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பகுதியில் இருந்து போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து உயிராபத்துக்கள், சொத்திழப்புக்களைச் சந்தித்து நலன்புரி நிலையங்களிலிருந்து மீளக் குடியமர்ந்த இவர்களுக்கே நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஓர் ஆண்டுக்கு முன்னர் மீளக்குடியமர்ந்த இவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பணமும் இரு கூரைவிரிப்புக்களும், பத்துத் தடிகளும் யூ.என்.எச்.சி.ஆரின் பொதியொன்றும், 12 கூரைத் தகடுகளும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. வாழ்வாதார உதவிகள், சுயதொழில் உதவிகள், கடனுதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

அக்கராயன் பகுதியில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்ட போது அரச ஊழியர்களுக்கு வீடுகள் இல்லையென்ற நிலையில் கரைச்சி அரச அதிபருக்கு அரச ஊழியர்களினால் மனுக் கொடுக்கப்பட்டபோது அரச ஊழியர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு விவரங்களும் கிராம அலுவலர் மூலம் பெறப்பட்டன.

இந்த நிலையில் அக்கராயன் பகுதியில் நிரந்தர வீடுகள் அமைக்கும் பயனாளிகள் தெரிவில் அரச ஊழியர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு பயனாளிகள் .தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அக்கராயன் பகுதியில் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ள உதவி நிறுவனம் அரச ஊழியர்களுக்கு வீடுகள் அமைக்க முடியாது என்று கைவிரித்து விட்டது.

இந்த நிலையில் கரைச்சி உதவி அரச அதிபர் இவர்களை அரச அதிபரிடம் அழைத்துச் சென்றுள்ளார். அப்போது கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ''அரச ஊழியர்களின் கஷ்டங்களை நான் நன்கறிவேன். மீள்குடியமர்வின் ஆரம்பத்தில் மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன. ஆனால் பல அரச ஊழியர்கள் தமது வீடுகளைக் கட்டி முடிக்கவில்லை. இதன் காரணமாக யு.என். உதவி நிறுவனங்கள் அரச ஊழியர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்க முன்வரவில்லை. இந்தியன் வீட்டுத் திட்டத்தில் அரச ஊழியர்களை முதன்மைப் படுத்தி நிரந்தர வீடுகள் வழங் கப்படும். மழை காலத்தைக் கருத்தில் கொண்டு தற்காலிக வீடுகள் வழங்குவோம்'' என அரச ஊழியர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து நிரந்தர வீடுகளுக்கு அக்கராயன் அரச ஊழியர்கள் காத்திருக்கிறார்கள்.

-கி.பிரிதிவி-

# வங்காலைக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்பு

மன்னார், செப். 05

மன்னார் வங்காலைக் கடற்கரையில் சடலமொன்று உருக்குலைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கடலுக்குச் சென்ற வங்காலை மீனவர்கள் இந்தச் சடலத்தை கண்டுள்ளனர். உடனடியாக வங்காலைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. உடனடியாகக் கடற் கரைக்கு விரைந்த பொலிஸார் சடலத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டபின் மதியம் மன்னார் வைத்தியசாலையில் இதனை ஒப்படைத்தனர்.

இந்தச் சடலத்தின் மேற்பகுதியில் வெள்ளைநிற ரீசேட் ஒன்று காணப்பட்டது. கை, கால்கள் மோசமாகச் சிதைவடைந்து காணப்பட்டன. மேலும் ஆணா, பெண்ணாவென அடையாளம் காண முடியாதவாறு சடலத்தின் முக்கிய பகுதிகள் சேதமடைந்து காணப்பட்டன. இந்தத் தகவலை மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.ஆஸாத் தெரிவித்தார்.

இந்தச் சடலம் இந்திய மீனவராக இருக்கலாமென்ற சந்தேகம் நிலவுகின்றது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

# செல்வபுரம் கிராம மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தின் உதவிகள்

முல்லைத்தீவு, செப்.5

யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் செல்வபுரம் கிராம மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தின் வாழ்வாதார உதவிகள் நாளை மறுதினம் புதன்கிழமை வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருக்கின்றார். இந்தக் கிராம மக்களுக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 95 வீடுகள், மீன்பிடிப் படகுகள், வலைகள் மற்றும் வாழ்வாதார உபகரணங்கள் என்பன இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி, நோர்வேத் தூதரகத்தின் இலங்கைக்கான பிரதிநிதி, கரித்தாஸ் இலங்கை செடெக் நிறுவனத்தின் தலைவர், யாழ்ப்பாண ஆயர் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

மேலும் கரித்தாஸ் இலங்கை - செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் அருட் தந்தை ஜோர்ஜ் சிகாமணி அடிகளாரின் வழிகாட்டலில் இத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(க)

# மனிதநேயம்....



கால்நடைகளுக்கு ஊக்கம்: கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்துக்கான கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கொழும்பு மனிதநேயத் தலைவர் வி.கயிலாசபிள்ளை அவரது துணைவியார் இல்லத் தலைவர் தி.இராசநாகயம், பிரதம நிறைவேற்று அதிகாரி ரி.இரத்தினசிங்கம் மற்றும் படையதிகாரிகள் உரையாடிக்கொண்டிருக்கின்றனர். (302)

# முல்லைத்தீவுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வெலி ஓயா நுவன்புரவுக்கு மாற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி நிர்மாணப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப்பணம் வெலி ஓயாவுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

நெல்சிப் நிதி உதவியின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதி நிர்மாணப் பணிகளுக்கெனப் பெருந்தொகைப்பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் வடமாகாண ஆளுநரின் உத்தரவுக்கமைய இந்த நிதியும் வேலைத்திட்டமும் வெலி ஓயாவிலுள்ள குடியேற்றக் கிராமமான நுவன்புரவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தற்போது தெரிய வருகின்றது.

யுத்தத்தின் பின்னர் மக்கள் துரிதமாகக் குடியமர்ந்து வரும் புதுக்குடியிருப்பு உள்ளிட்ட இரண்டு பிரதேசங்களில் வீதிக் கட்டுமானங்களுக்கென ஒதுக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதியே அவசர அவசரமாக வெலி ஓயா குடியேற்றப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளே வெலி ஓயாவிலும் வீதி நிர்மாணப்பணிகளில் ஆளுநரால் ஈடுபடுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

படைத்தளங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள நுவன்புர குடியேற்றத்துக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் ஆளுநரும்,முஸ்லிம் அமைச்சரொருவரும் முன்னின்று செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(க)

# மனநல சுகாதார உத்தியோகத்தருக்கு மூன்று புதிய வாகனங்கள் கையளிப்பு

வவுனியா, செப்.5

வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த மனநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கு டபிள்கப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மனநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கே வேல்ட் விசன் லங்கா நிறுவனத்தால் மூன்று டபிள்கப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் இந்த வாகனங்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கினார்.

வன்னி மாவட்டத்தின் கிராமப்புறங்களுக்கும் மனநல சுகாதார உத்தியோகத்தர்கள் சென்று அங்குள்ள மனநிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட மருத்துவ முகாம்களை நடத்துவதுடன் அவர்களை மேலதிக வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு பொது வைத்தியசாலைகளுக்குக் கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சமூக உதவி உத்தியோகத்தர்கள் மூலம் எல்லை கடந்த மருத்துவ முகாம்களை நடத்துதல், பாதிக்கப்பட்ட மக்களை இனங்காணுதல் போன்ற சிறந்த திட்டங்களை உள்ளடக்கி இந்தச் செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மீள் உளவளர்ச்சிச் செயற்திட்டத்தின் வேல்ட் விசன் லங்கா நிறுவனச் செயற்றிட்ட முகாமையாளர் ஜே.எம்.கித்பலட் அசோரன்ட், வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மருத்துவர் சத்தியமூர்த்தி ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

(க)

# பொறியாக மாறிய வீதி

முல்லைத்தீவு, செப்.5

மக்களது போக்குவரத்துக்கான வீதியா அல்லது மக்களுக்காக வைக்கப்பட்டுள்ள பொறியா எனத் தினமும் வீதி ஆபத்துக்களை எதிர்கொள்ளும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஒட்டுசுட்டான், புதுக் குடியிருப்பு வீதியிலிருந்து முத்துஐயன்கட்டு 2 ஆம் கண்டம் செல்லும் வீதியைப் புனரமைப்பதற்கு ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்தகாரர் அந்த வீதியை போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குக் கருங்கற்களைப் பரவி விட்டுள்ளனர். இதனால் அந்த வீதியூடாகப் பயணம் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் தினமும் மக்கள் ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். எனவே இந்த வீதியில் உள்ள கற்களை அகற்றியாவது எமது போக்குவரத்துக்கு உதவி செய்யுமாறு வீதி அபிவிருத்திச் சபையினை மக்கள் கேட்டுள்ளனர். (க-500)

# பொருள்களை எடுக்க முடியாத நிலை

முல்லைத்தீவு, செப்.5

இடப்பெயர்வின் போது புதுக்குடியிருப்பு தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் வைத்த பொருள்களை எடுப்பதில் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிய வருகின்றது.

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் தமது பொருள்களைத் தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் இருந்த உறவினர்கள், தெரிந்தவர்கள் வீடுகளில் விட்டுவிட்டுச் சென்றனர். ஆனால் இந்தப்பொருள்கள் எடுத்துச் செல்வதில் இவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

உழவு இயந்திரக் கலப்பை, மேசை, கதிரை, அலுமாரி, உரல், அம்பி போன்ற பொருள்களை இவர்கள் பார்வையிட்ட போதும் அனுமதி வழங்கப்படாததால் எடுத்துவர முடியாத நிலையிலுள்ளனர். இதனால் இந்தப்பொருள்கள் வெயில், மழை என்பவற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றன. (க-500)

# குளவி கொட்டியவர் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, செப்.05

கற்சிலைமடு பேராறு பகுதியில் குளவி கொட்டிய ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற 52 வயதான வேலாயுதம் என்பவரே குளவி கொட்டிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதட்சணை என்னும் கொடிய நோய் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்!



இன்று மனித குலத்தை அச்சுறுத்தி ஆட்டிப்படைக்கும் பிரச்சினைகள் ஏராளம். ஏழ்மை, பசி, பிணி, ஊழல், இனவெறி, நிறவெறி, மொழிவெறி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றுள் ஒன்றுதான் இந்த வரதட்சணைக் கொடுமை. இந்த வரதட்சணை வாங்கும் பழக்கம் தமிழ் சமூகத்தைத் தவிர வேறெந்த சமூகத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வரதட்சணைக் கொடுமை பரவி, ஜாதி மத பேதமின்றி எல்லோரையும் துன்பத்துக்குள்ளாக்கி வருகின்றது.

ஒரு பெண்ணை மணமேடையில் அமர்த்துவதற்காக வரதட்சணை என்னும் மரணப் படுகுழியில் விழும் பெற்றோர்கள் எத்தனை பேர்? உடன் பிறந்த சகோதரிகளைக் கரையேற்றுவதற்காகக் கடல்கடந்து சென்று உழைத்து உருக்குலைந்து வளை குடா நாடுகளில் வாலிபத்தைத் தொலைத்து நிற்கும் சகோதரர்கள் எத்தனை பேர்? கல்யாணம் என்பதே கானல் நீராகிக் கண்ணீர் சிந்தி நிற்கும் கன்னியர்கள் எத்தனை பேர்? என்றேனும் இந்தச் சமுதாயம் எண்ணிப் பார்த்திருக்குமா?

அறியாமைக் காலத்துப் பெண்களது குழந்தைகளை உயிரோடு புதைத்தனர். நவீன காலத்துப் பெண்கள் வரதட்சணைக்குப் பயந்து வயிற்றில் உள்ள கருவை ''ஸ்கான்'' செய்து பெண்குழந்தை என்று தெரிந்தால் கருவறையைக் கல்லறையாக்கி விடுகின்றனர்.

இது எதைப்பற்றியும் சிந்திக்காமல் சிலர் வாங்குகின்ற வரதட்சணையை வாங்கிக் கொள்ளுங்கள் என்று தங்களுடைய கடமையை செவ்வனே செய்து வருகின்றனர்.

'ஐந்தாறு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்' இது முதுமொழி. இப்போது ஒரேஒரு பெண்பிறந்தால் கூட ஆண்டியாகிவிடுவார்கள்.


வசதி படைத்த பெண்ணின் பெற்றோர் சிலர் தங்களின் மகளுக்கு மனமுவந்து அன்பளிப்பாக வழங்குவதை நாம் குறைகூற முடியாது. அதைத் திருமணத்தன்று செய்யாமல் பிறிதொரு சமயத்தில் செய்யலாமே; திருமணத்தன்று பலர் முன்னிலையில் இப்படிச் செய்வது மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்து விடுகிறது.

இதனால் இல்லாதவர்கள் என்ன செய்ய முடியும்?

எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் வரதட்சணை என்பது முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டிய ஒரு கொடிய நோயே என்பது மறுக்க முடியாத உண்மை.

-நித்தியா.

# பெண் என்னும் பாலம்....!



இரு நதிக் கரைகளை மிக அழகுற
இணைப்பதே நாம் காணும் பாலம்
இல்லத்தில் உள்ளவர்களை எல்லாம்
இணைப்பவளே பெண் எனும் பாலம்
தந்தை என்றால் பயம், மரியாதை
தாய் என்றால் பாசம், உரிமைகள்
தந்தை குழந்தைகளுக்கு இடையே
தாத்தா பேரப்பிள்ளைகளுக்கிடையே
ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே
ஆவாள் பெண்ணே உறுதியான பாலம்
பத்து ஆண்கள் செய்யும் வேலைகளை
பதறாமல் செய்து முடிப்பாள் ஒரு பெண்
பத்து ஆண்கள் ஒன்றாய் முயன்றாலும்
முத்துப் போலப் பணி செய்ய இயலார்!
பெண் இருக்கும் வீடே நல்ல வீடாம்
பெண் இல்லாத வீடு வெறும் காடாம்!
பாலத்தை நன்கு பராமரித்தாலேயே
பாலம் பயன்படும் போக்குவரத்துக்கு
பெண்ணைப் போற்றிப் பேணுவோம்
பெண் என்னும் பாலம் பயன் தரவே.

-ரதினி.

# பெண்களின் உரிமைகள் எதற்காக மறுக்கப்படுகின்றன?



21 ஆம் நூற்றாண்டில் கால்பதித்துள்ள நாம் பல கண்டுபிடிப்புக்கள் மிக்க உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகமோ பல நவீன மாற்றங்களுக்கு உட்படுகின்ற போதும் பெண்களுக்கான உரிமைகள், கட்டுப்பாடுகள் மட்டும் மாற்ற மடையவில்லை. அவர்களது சுதந்திரம் மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது ஏன்? எமது சமூகத்திலும் சரி இன்றைய உலகத்திலும் சரி எத்தனையோ திறமைகளுடைய பெண்கள் இருக்கின்றபோதும் அவர்களின் திறமைகள் வெளிக்காட்டப்படாமல் மறுக்கப்படுகின்றன.

பெண்களின் உரிமைக்காக வேண்டி சில சமூகப் பெரியவர்கள் போராடுகின்ற போதும் அதிகமானோர் பெண்களுக்கு உரிமைகள் கொடுப்பதை விரும்புவதில்லை. பாரதி போன்ற பெரியார்கள் பெண் உரிமைக்கென பல்வேறு பட்ட வழிகலில் போராடியுள்ளனர். இவ்வாறான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் பெண்களுக்கு முழு சுதந்திரம் கொடுப்பதை சமுதாயம் ஏன் மறுக்கிறது?

சமூகமே இன்று பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்ற போதும் அவர்கள் மனம் தளராமல் போராடி சமுகத்தில் பல உயர்ந்த பதவிகளில் இருந்து மக்களுக்காக சேவையாற்றுகின்றனர். எனவே சமூகத்தில் பெண்களுக்கான உரிமைகளுக்கு முழு சுதந்திரத்தையும் கொடுங்கள், எம் உலகத்தை உயர்த்தும் நல்ல மனிதராகவும் பல கண்டுபிடிப்புக்களுக்கு சொந்தக்காரர்களாகவும் பெண்கள் இருப்பார்கள்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# வழங்கப்பட்ட உரிமைகள், சலுகைகளை பெண்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்



இன்றைய பெண்கள் தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரத்துடன் ஆண்களுக்கு இணையாகச் செயற்படத் தொடங்கி விட்டார்கள்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு ஆண்களிடம் அடங்கிப் போய் கிடந்த அந்தக் காலம் இன்று முற்றிலும் மாறிப் பெண்கள் தங்கள் வாழ்க்கையிலும் வளர்ச்சியிலும் தனித்து நிற்கிறார்கள் என்பது நூறு சதவீதம் உண்மையாகவே உள்ளது.

இதனைக் கடந்த காலப் பெண்களின் நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும்.

தன்னையும் தன் விருப்பங்களையும் விட்டுக் கொடுத்துக் குடும்பப் பாரத்தைச் சுமந்து ஆண்களின் கட்டுப்பாட்டில் அடங்கி ஒடுங்கி இருந்த காலம் மாறிப் பெரும்பாலான விடயங்களில் பெண்களுக்கு உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டு தனித்து செயற்படக்கூடிய நிலைமை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அன்றைய காலத்துக் கடுமையான பெண்ணடிமைத்தன விதிமுறைகளை இன்றைய சமுதாயம் ஓரளவு மாற்றிப் பெண்களுக்கு சமத்துவம் வழங்க ஆரம்பித்துள்ள நிலையில், இந்தச் சமத்துவத்தைத் தவறாகப் புரிந்துகொண்ட சில பெண்கள் தங்களது வாழ்க்கைக்குத் தேவையான சில கட்டுப்பாடுகளைத் தொலைத்து விட்டு வாழ்க்கையை இழந்து தவிக்கிறார்கள்.


இந்த இழப்புக்கள் தங்கள் அறியாமையால் ஏற்பட்டது என்பதையும் சில பெண்கள் உணர்ந்துள்ளனர்.

எனவே இத்தகைய தவறான வழிக்கு வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் பழக்கம் பெண்களால் தவிர்க்கப்பட்டால் அவர்களின் வாழ்க்கை என்றும் மகிழ்ச்சிப் பாதையில் பயணிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் நீங்கினால் மட்டுமே தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ முடியும்!

## பொன். செல்வராசா எம்.பி. கூறுகிறார்



மட்டக்களப்பு, செப்.5

அவசரகாலச்சட்டத்தை மட்டும் நீக்கினால் போதாது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீக்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று நீக்கப்படுகின்றதோ அன்றுதான் தமிழினம் சுதந்திரமாக வாழமுடியும்.தமிழர்களின் அபிலாஷைகள் என்று தீர்க்கப்படுகின்றனவோ அன்றுதான் இந்த நாட்டிலே தமிழ் மக்கள் உண்மையான சமாதானத்தை அனுபவிக்க முடியும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தின் திறப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

அவசரகாலச் சட்டம் எடுக்கப்பட்டுவிட்டது. அவசரகாலச் சட்டம் எடுக்கப்பட்டால் நாங்கள் வீதிகளிலே சுதந்திரமாக நடமாடலாம், வீடுகளிலே நடமாடலாம் என்று நினைத்துள்ளீர்கள். இந்த நாட்டில் அவசர காலச் சட்டம் எடுக்கப்பட்டாலும் கூட பொலிஸ் அதிகாரங்கள் எதுவும் குறைந்துவிடவில்லையென்றே பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, அவசர காலச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்கள், வேறு ஒரு சட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே, இந்த அவசர காலச் சட்டம் இன்று இலங்கையில் இருந்து எடுக்கப்பட்டாலும் கூட அதனால் தமிழ் மக்கள் நன்மையை அனுபவிக்கப் போகின்றார்கள் என்று சொன்னால் அது நிச்சயமாக இல்லை.

இந்த நாட்டிலே இருந்து பயங்கரவாத தடைச்சட்டம் எடுக்கப்பட வேண்டும். எது தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தடையாக இருக்கின்றதோ அதை அரசு நீக்க வேண்டும்- என்றார்.




மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இந்த ஆண்டு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய மாணவர்களை வரவேற் கும் நிகழ்வு மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் மண்டபத் தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் பிரேம்குமார் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# மீனவர் படகுகளில் வெடிபொருள்கள்; ரோந்து நடவடிக்கைகள் தீவிரமாகின

மீனவர்களின் படகுகளிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளமையை அடுத்து, தற்போது மூதூர்- கொட்டியாரக் குடாக் கடலிலும், சம்பூர் பெருங் கடலிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கிண்ணியாக் கடல் முதல் சூடைக்குடா, கெவுளிமுனை கடல் வரையிலும், சம்பூர் கடல் முதல் வெருகல் முகத்துவாரம் வரையிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது.

ரோந்து நடவடிக்கையின் போது கடற்பரப்பில் காணப்படும் மீன்பிடி வள்ளங்கள், படகுகள் முதலானவற்றைக் கடற்படையினர் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

கடற்படையினர் அண்மைக் காலமாக இந்தக்கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட பல கடற்றொழிலாளர்களின் படகுகளில் வெடி பொருள்களைக் கண்டுபிடித்து, மீனவர்களையும் வெடிபொருள்களையும் திருகோண மலைத் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்து நீதிமன்ற சட்ட நடவடிக்கைக்குட்படுத்தியுள்ளனர்.

இந்தக் குடாக்கடற்பரப்பிலும், சம்பூர் பெருங்கடல் பரப்பிலும் பல மீனவர்கள் அண்மைக் காலமாக வெடிபொருள்களுடன் பிடிபட்டதைத் தொடர்ந்தே கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணிகளைக் குத்தகைக்கு விட துறைமுக அதிகாரசபை ஏற்பாடு

திருகோணமலை,செப்.5

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த ஆயிரம் ஏக்கர் காணி குத்தகைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தனியார் முதலீட்டாளர்களுக்கு இந்தக் காணிகள் குத்தகைக்கு விடப்பட உள்ளதாக துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

காணிகளைக் குத்தகைக்கு விடுவது தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக துறைமுக அதிகாரசபையின் தலைவர் பரியாத் விக்ரம தெரிவித்துள்ளார்.

காணிகளை குத்தகைக்கு விடும் பணம் துறைமுக அபிவிருத்திக்காகப் பயன்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். காணிகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் சர்தேச ரீதியான முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

# சொகுசு வாழ்க்கை நடத்துவோருக்கு வாக்களிப்பதால் எவ்வித பயனுமில்லை

## ஐ.தே.க. அம்பாறை மாவட்ட அமைப்பாளர் கமகே தெரிவிப்பு

கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வாக்களிப்பதால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. மக்கள் நலனில் அக்கறையுள்ள சமூக சிந்தனையாளர்களைத் தெரிவு செய்து மாநகர சபைக்கு அனுப்புங்கள்.

இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஐ.தே.க.எப்போதுமே மக்கள் நலனில் அக்கறையுடன் செயற்பட்டுவரும் ஒரு தேசியக் கட்சியாகும். அது இன, மத, பேதம் பாராது மக்களுக்கு சேவையாற்றிவரும் ஒரு பழம் பெரும் கட்சியாகும்.

கல்முனை மாநகர சபைக்கு ஐ.தே.க. மிகவும் திறமையான வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. அவர்களை உங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதன் மூலம் இந்தப்பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும். அவர்களுக்கு நான் பக்கபலமாகச் செயற்படுவேன்.

நாங்கள் அரசியல் அதிகாரத்திற்கு அப்பால் எமது சொந்தப் பொருளாதாரத்தில் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம். நாம் மக்களின் வாக்குகளைச் சூறையாடிச் சென்று, அதன் மூலம் பதவிகளைப் பெற்று சுகபோகம் அனுபவிப்பவர்களல்லர்- என்றார்.

## அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி ஒன்றை வைத்தி ருந்த சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 10 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி பிரதான நீதிவான் எம்.யூ.கரல்லியத்த உத்தரவிட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து வத்து காமம் மீகம்மன பிரதே சத்தில் வைத்து இந்தச் சந்தேக நபரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கடந்த வியாழக் கிழமை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளனர். (ச)

# முன்னெச்சரிக்கைக் கோபுரங்களை பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களை பரீட்சித்துப்பார்க்கும் நடவடிக்கைகள் நாளை செவ் வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். எம்.கசீர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை வாகரை, களுவண்கேணி, கோட்டைக் கல்லாறு, கல்லடி, கல்குடா, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள 6 முன்னெச்சரிக்கை கோபுரங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தக் கோபுரங்கள் எச்சரிக்கை ஒலி எழுப்பும் போது மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கோபுரங்களின் இயங்கும் தன்மையை பரீட்சித்துப்பார்ப்பதே இதன் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் நாடு முழுவதிலுமுள்ள 52 முன்னெச்சரிக்கை கோபுரங்களும் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதானவர்களின் விடுதலையை வற்புறுத்துகிறது பிரதேசசபை

அம்பாறை, செப்.5

நாட்டில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளன போல் பயங்கரவாதத் தடைச்சட்டமும் முற்றாக நீக்கப்படுவதுடன், அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் ஒன்றை காரைதீவு பிரதேச சபை நிறைவேற்றியுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் முதலாவது செயலமர்வு தவிசாளர் செல்லையா இராசையா தலைமையில், பிரதேச சபை சபாமண்டபத்தில் நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் தவிசாளர் செல்லையா இராசையா உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நாட்டில் நீண்ட காலமாக அவசரகாலச் சட்டம் தற்சமயம் நீக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதற்கு ஆவனசெய்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை முழுமையான நிம்மதியுடன் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டமும் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு அவசரகாலச் சட்டம் தற்போது அவசியமில்லையென்றும், ஜனநாயக நாட்டில் அடுத்தகட்ட நடிவடிக்கையை சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு நடத்துவதற்காகவே அவசர காலச்சட்டம் நடைமுறையிலிருந்து நீக்கப்படுவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இத்தகைய நல்லெண்ணமும், ஜனநாயக நடவடிக்கையும் தொடர்பில் மக்கள் முழுமையான நம்பிக்கைகொள்வதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீக்கப்படுவதுமிக அவசியமாகும்.

இந்த விடயத்திலும் ஜனாதிபதி கூடிய கரிசனை செலுத்தி பயங்கரவாதத்தடைச்சட்டத்தையும் நீக்குவதற்கு ஆவன செய்வாரானால் தான் சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டில் நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்வதற்கு வழிவகுக்கும்.

அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கும் ஆவன செய்யப்பட வேண்டும்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதற்கு அரசு காலதாமதத்தைத் தொடராது, தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வினை விரைந்து வழங்க முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நம்பிக்கையும், திருப்தியும் அளிக்கத்தக்க வகையில் அரசின் அணுகுமுறைகள் அமைந்து பேச்சுக்களைத் தொடர அரசு முன்வர வேண்டும் என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வீண் வம்பு விவகாரங்களில் தலையிடாமல், ஒதுங்கி இருக்க வேண்டிய நாள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். சொந்தபந்தங்களின் அன்புத் தொல்லைகளால் அவதிப்படலாம். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில், வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். வேலைகள் நேரத்திற்கு முடியாமல், இழுத்தடிக்கலாம்.

**இடபம்:**
மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். உறவினர்களிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். வேண்டாம் என நினைத்த வேலை ஒன்றை. இன்று திடீரென மீண்டும் செய்ய நேரிடலாம். பலர் பங் கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளலாம். ஆனந்தமான நாள்.

**மிதுனம்:**
நேற்று தடைப்பட்ட காரியம் ஒன்று, இன்று முடியலாம். கொள்கையில் உறுதியாக இருப்பதன் மூலம், சிலரின் கோபத்திற்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். உறவினர்களை உபசரிக்க, கணிசமான பணத்தை செலவு செய்யலாம். செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிப்பீர்கள். தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:**
நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள் நடக்கலாம். சூழ்ச்சியாக செயற்படும் அயலாரை, அடையாளம் கண்டு கொள்வீர்கள். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். தர்ம, புண்ணியக் காரியங்களைச் செய்வீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**சிங்கம்:**
கையில் இருக்கும் பணத்தை ஒருவருக்கு கொடுத்து விட்டு, மற்றொருவரிடம் கடன் வாங்க நேரிடலாம். நாட்டு நடப்புகளை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். அலைச்சல் கூடும்.

**கன்னி:**
குடும்ப மேன்மையில் அக்கறை காட்டும் நாள். சிலரிடம் உங்களின் சொந்த விடயங்களை மனம் விட்டுப் பேசுவீர்கள். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை, நீங்கள் மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர் கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

**துலாம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில், செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள், விரும்பும் விதத்தில் அமையும். விருந்தினர்கள் வருகையால், உங்களின் வேலைகளில் சில மாற்றங்களைச் செய்யலாம். தவறு ஒன்றை செய்வதால் பதற்றம், படபடப்பு அதிகரிக்கலாம். நினைத்ததற்கு மாறாக சில விடயங்கள் நடக்கலாம்.

**விருச்சிகம்:**
பெருந்தன்மையான பிரச்சினையால் கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள் உருவாகலாம். உங்களின் உத்வேகத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பழைய நண்பர் ஒருவர் மூலம், புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். ஆபத்தான பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம்.

**தனுசு:**
ஆலய வழிபாடு மூலம் அமைதி காண வேண்டிய நாள். வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம். கடனாக கொடுத்த பணம் ஒன்று, வேறொரு வகையில் திரும்பி வரலாம். மனதில் இனம்புரியாத கவலை குடிகொள்ளும் நாள். சிலரை நம்பி ஒப்படைத்த காரியம் முடிவடையாமல் போகலாம். ஒன்றுக்கு இரு மடங்காகச் செலவாகலாம்.

**மகரம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க, கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகள் வெளியூர் சுற்றுப் பயணங்கள் செல்லலாம்.

**கும்பம்:**
உங்களின் வளர்ச்சியை கண்டு, மற்றவர்கள் பொறாமை கொள்ளலாம். எந்த விடயத்திலும் அதிக அக்கறை காட்டாமல் பட்டும் படாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். மாமன், மைத்துனர்கள் சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் உண்டு.

**மீனம்:**
இரண்டு நாள்களாக செய்ய மறந்த வேலை ஒன்றை, இன்று செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் சிலர் தங்களுக்கு வேண்டியவர்களுக்காக உங்களிடம் உதவி கேட்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போலத் தோன்றி, இறுதியில் சாதகமாக முடியலாம்.

# கொரியா... பீரி... சென்றது...

Khaleej Times இணையத் தளத்தில் Qadijah Irshad எ...

பான்கிமூனின் சொந்த நாடான கொரியாவுக்கே பீரிஸ் முதலில் சென்றுள்ளமை இலங்கையால் எடுக்கப்பட்டுள்ள கெட்டித்தனமானதொரு நகர்வாக உள்ளது.

2009 மே 26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களிலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக ஐ.நாவின் மனித உரிமைகள் சபையின் சிறப்புக் கூட்டத்தொடர் ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இலங்கைக்குச் சார்பான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இச்சிறப்புக் கூட்டத் தொடர், கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள் ளப்பட்ட போரானது இலங்கை இராணுவத்தால் வெற்றி கொள்ளப்பட்டு ஒருவார காலத்துக்குப் பின்னர் கூட்டப்பட்டிருந்தது.

இதில் இலங்கை அரசுக்குச் சார்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 29 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்ததுடன், சமுகம் தராதவர்களாக 06 நாடுகள் இருந்தன.

அதாவது இந்தப் பரிந்துரையானது இலங்கை அரசு பயங்கரவாதத்தை அழித்துள்ளது என்பதைப் பாராட்டுவதை முதன்மைப்படுத்தவில்லை. மாறாக தோற்கடிக்கப்பட்ட புலிகள் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்களை முதன்மைப் படுத்தியிருந்தது.

இது நடந்து முடிந்து இரு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது நிலைப்பாடானது முற்றுமுழுதாகத் திசைதிரும்பியுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது, இலங்கைக்கான ஆதரவுகள் குறைந்திருக்கும்.

மேற்குலக நாடுகளானது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அதன் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்ற இந்த நிலையில் தற்போது நடைபெறவுள்ள பாதுகாப்புச் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தன்னைச் சரியாக வெளிப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளது. அதாவது இன்னுமொரு புலியின் பற்களிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்ள வேண்டியுள்ளது.


யுத்தம் முடிவுற்றதிலிருந்து இலங்கை தனக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு அரசுகள், அமைப்புக்கள் போன்றவற்றுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்களுக்கு எதிராக இலங்கை அரசு மீதும் அதன் படைகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டு ஐ.நா. பொதுச் செயலர் பான்கீமூனால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவானது அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அத்துடன், நிராயுத பாணிகளாகச் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு உட்படுத்திக் கொன்றதை உறுதிப்படுத்தும் முகமாக பிரிட்டனின் சனல் 04 தொலைக்காட்சிச் சேவையானது பல்வேறுபட்ட காட்சிகளைக் கொண்ட ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டிருந்தது.

**இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்குப் பின்னர் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்ளும் இரு நாடுகளாக சீனா. ரஷ்யா ஆகியன உள்ளன. அத்துடன் இந்த இரண்டு நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அதிகூடிய அதிகாரம் உள்ள நாடுகளாக உள்ளன. இந்த இரு இறைமை நாடுகளும் தமது நாடுகளில் நிலவும் உள்நாட்டு இன முரண்பாடுகளைச் சமாளிக்க வேண்டும் என்கின்ற பொதுவான கொள்கைப்பாட்டைக் கொண்டுள்ளன.**





இந்த இரு சம்பவங்களும் இடம்பெற்ற பின்னர் அனைத்துலக சமூகமானது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது. இதனால் குற்றமிழைத்த இலங்கை இராணுவத்தினரைக் கைது செய்து மனித உரிமைகள் சபையின் நீதிமன்றில் தண்டிக்கும் உரிமை உள்ளதாலேயே தற்போது இலங்கை அரசு அவசரகாலச் சட்டத்தை நீக்கம் செய்துள்ளது.

நன்றாக நிதியளிக்கப்பட்டுள்ள புலம்பெயர் சமூகத்தவர்களின் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள், சில மேற்குலக அரசுகள், மேற்குலக மனித உரிமை அமைப்புக்கள் போன்றன இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகித்து வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யாவுக்கு ...ிஸ் ...ு எதற்கு

...n Irshad எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்





கின்றன.

ஐ.நா. வல்லுநர் குழுவின் அறிக்கை மற்றும் சனல் 04 தொலைக்காட்சிச் சேவையால் வெளியிடப்பட்ட ஆவணப்படம் என்பன போலியானவை என்றும் அவற்றில் எவ்வித உண்மைகளும் இல்லை எனவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 3 லட்சம் வரையான பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமையால், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற பொதுமக்களின் உயிரிழப்புக்கள் என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று என இலங்கை அரசு அறிவித்திருந்தது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் மனித

**மேற்குலக நாடுகளானது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அதன் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்ற இந்த நிலையில் தற்போது நடைபெறவுள்ள பாதுகாப்புச் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தன்னைச் சரியாக வெளிப்படுத்தவேண்டிய நிலையிலுள்ளது. அதாவது இன்னுமொரு புலியின் பற்களிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்ள வேண்டியுள்ளது.**

உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளாக உள்ள சீனா, தென்னாபிரிக்கா, உருகுவே போன்ற பெரும்பான்மை நாடுகள் இலங்கைக்குச் சார்பாக வாக்களித்திருந்தன.

இந்தத் தடவை இலங்கை தன்மீது மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகளைத் தவிர்ப்பதற்காக சீனா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் ஆதரவுகளை எதிர்பார்த்து நிற்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்குப் பின்னர் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்ளும் இரு நாடுகளாக சீனா, ரஷ்யா ஆகியன உள்ளன. அத்துடன் இந்த இரண்டு நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் அதிகூடிய அதிகாரம் உள்ள நாடுகளாக உள்ளன. இந்த இரு இறைமை நாடுகளும் தமது நாடுகளில் நிலவும் உள்நாட்டு இனமுரண்பாடுகளைச் சாமாளிக்க வேண்டும் என்கின்ற பொதுவான கொள்கைப்பாட்டைக் கொண்டுள்ளன.

இந்த மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்கு முன்னர், தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளவர்கள் மற்றும் ஆதரவுச் சக்திகள் போன்றவற்றைச் சந்திப்பதற்கான இராஜதந்திர ரீதியானதொரு சுற்றுப் பயணத்தை இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மேற்கொண்டுள்ளார்.

பான் கி மூனின் சொந்த நாடான கொரியாவுக்கே பீரிஸ் முதலில் சென்றுள்ளமை இலங்கையால் எடுக்கப்பட்டுள்ள கெட்டித்தனமானதொரு நகர்வாக உள்ளது. அதன் பின்னர் சிங்கப்பூர், ஜோர்தான் போன்ற நாடுகளின் தலைவர்களையும் பீரிஸ் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள விசாரணைக்கு எதிராக பொருளாதார மற்றும் அரசியல் ஆதரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சீனாவுக்கு பயணம் செய்திருந்தார்.

''நாங்கள் இணக்கப்பாட்டு முயற்சிக்கான நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளோம். அதில் நாம் பல வெற்றிகளையும் கண்டுள்ளோம். ஏனையவை முழுமையடைந்து பயனைத் தருவதற்கான கால அவகாசத்தைக் கோரி நிற்கின்றோம். நாங்கள் அனைத்துலக நாடுகளின் கருத்துக்களை, அபிப்பிராயங்களை எமது கவனத்தில் எடுத்துள்ளோம். ஏனையவர்களின் அழுத்தங்களுக்காக நாங்கள் எமது திட்டங்களைத் துரிதமாக மேற்கொள்ள முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் மிகப் பிரதான நலன்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை முதலில் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்'' என ஜெனீவா கூட்டத் தொடரில் கூறப்போகும் விடயம் தொடர்பாக இலங்கையின் மனித உரிமை ஆதரவாளரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

## கவனம் சிதறக்கூடாது



அலுவலகம் ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவைப் பட்டரர்கள். அதற்காக அங்கு நேர்முகத்தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. அது என்ன வேலையென்றால் கம்பில்லாத் தந்திக் கருவியை இயக்கும் வேலை. அதிக எண்ணிக்கையான இளைஞர்கள் வாசலில் நேர்முகத் தேர்வுக்காகக்காத்துக் கொண்டு நின்றனர்.

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்திருக்கவில்லை. அருகில் இருப்பவர்களிடம் எதை எதையோ பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அங்கு கடைசியில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் மட்டும் யாரிடமும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்து இருந்தான். தேர்வு அதிகாரிகள் இருந்த அறைக்குள் இருந்து கம்பியில்லாத் தந்திக் கருவின் சத்தம் மட்டும் லேசாகக் கேட்டுக்கொண்டிருந்தது. அரட்டை அடித்துக் கொண்டிருந்த இளை ஞர்கள் இந்தச் சத்தத்தைக் கவனிக்கவில்லை. அவர்கள் ஊர் விவகாரங்களை அலசுவதிலேயே அக்கறையாக இருந்தார்கள்.

ஆனால் கடைசியில் தனியாக உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் மட்டும் கம்பியில்லாத தந்திக் கருவியிலிருந்து வெளியான அந்த ஒலிக் குறிப்புக்களைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அதைக் கேட்டு முடிந்ததும் அவன் திடீரென்று எழுந்து அதிகாரிகள் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

''ஏன் இப்படி இவன் யாரும் கூப்பிடாமல் திடீரென்று எழுந்து உள்ளே போகிறான் என்ற விவரம் மற்றவர்களுக்குப் புரியவில்லை. உள்ளே சென்ற அந்த இளைஞன் சிறிது நேரம் கழித்து வெளியே வந்தான். அவன் வெளியே வரும்போது வேலையில் நியமிக்கப்பட்டதற்குரிய உத்தரவுக் கடிதம் இருந்தது.

இதைப் பார்த்தும் அங்கிருந்த ஏனைய இளைஞர்கள் எல்லாம் கோபப்பட்டனர். ''இது என்ன நியாயம்!'' நாங்கள் இங்கு வந்து நீண்டநேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறோம்... நீ கடைசியில் வந்தவன்...எங்களுக்கு முன்னால் நீ எப்படி உள்ளே போகலாம்... வரிசைப்படி எங்களை முதலில் சோதிக்காமல் திடீரென்று உனக்கு மட்டும் எப்படி உத்தரவுக் கடிதம் கொடுத்தனர்?'' என்று கூச்சல் போட ஆரம்பித்தனர்.

அதற்கு அந்த இளைஞன் பின்வருமாறு பதில் கூறினான்,

''உங்களையெல்லாம் சோதித்துவிட்டு அதற்குப் பிறகு தான் எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார்கள். அந்த அறைக்குள் இருந்த கம்பியில்லாதத் தந்திக்கருவி மூலமாக... ஒலிக்குறிப்புக்களினால் அந்த அதிகாரிகள் செய்தி அனுப்பினர். அதை நீங்கள் கவனிக்கவில்லை!'' என்றான்.

''என்ன செய்தி அனுப்பினார்கள்?'' என்று அதுவரையில் அரட்டையில் மூழ்கியிருந்த இளைஞர்கள் வினவினார்கள்.

''அதிகாரிகள் ஒலிக்குறிப்பு மூலமாக அனுப்பிய செய்தி இதுதான். அதாவது, எங்களுக்கு எந்த நேரமும் அக்கறையும் கவனமும் உள்ள இளைஞனே தேவை. இந்தச் செய்தியைப் புரிந்து கொண்டு உள்ளே சென்றேன். வேலை கிடைத்தது!'' என்று விளக்கினான் இளைஞன்.

அரட்டைக் கச்சேரியில் கவனம் சிதறியதால் அங்கிருந்த மற்ற இளைஞர்களால் அதிகாரிகளின் அழைப்பைப் புரிந்து கொள்ள முடியவில்லை.


இந்தக் கதையை ஓர் ஆன்மிகப் பெரியவர் கூறியுள்ளார். இதன்மூலம் அவர் தெரிவிக்கும் கருத்து இதுதான்.

''இறைவனும் இது போன்ற அழைப்புக்களைத் தொடர்ந்து எமக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறார். இறைவனின் மொழியாக இயற்கை விளங்குகிறது. இயற்கையில் குறிப்புகள் வடிவத்தில் இருக்கும் அழைப்புக்களை - நாம் அமைதியாகவும் அக்கறையாகவும் இருந்து முயற்சி செய்தால் புரிந்துகொள்ளமுடியும். கவனத்தைக் கண்டபடி சிதறிவிடாமல் இருந்தால் இதைப் புரிந்துகொண்டு இறைவனை நெருங்க முடியும்'' என்கிறார் அந்தப் பெரியவர்.

இது எமக்கெல்லாம் இறைவன் நடத்திக் கொண்டிருக்கும்- இயற்கை நடத்திக்கொண்டிருக்கும் நேர்முகத்தேர்வு.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். சைவ பரிபாலன சபையின் சைவ மாநாடு அண்மையில் இடம்பெற்றது. கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துகிறார். அணி செய் கலைஞர்களும் உள்ளனர்.

# பாடத்துறை தொடர்பான உசாத்துணை நூல்கள் கருத்துக்களை உள்ளடக்கி வெளியிட வேண்டும்

## இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

பாடத்துறை தொடர்பான உசாத்துணை நூல்கள் புதிய கருத்துக்களை உள்ளடக்கிய தாக எழுதி வெளியிடப்பட வேண்டும் அத்தகைய ஒரு நிலை 1990 ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் காணப்பட்டது. அந்த வகையில்தான் யாழ்ப் பாணம் கல்வித் தரத்தில் மேல் நிலை பெற்றிருந்தது.

இவ்வாறு யாழ்.பல்கலைக் கழக இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பி. அபிமன் தெரிவித்தார்.

ஜயன்சின்ஸ் அறிவியல் கழகத்தின் செயலாளர் எஸ். சுரேஸ்குமாரால் எழுதப்பட்டு, அறிவியல் கழகத்தால் வெளி யிடப்பட்ட ''இரசாயன வியல் சேதன நட்சத்திரம்'' நூல் வெளி யிட்டு விழா கொக்கு வில் இந்துக் கல்லூரி பஞ்ச லிங்கம் மண்டபத் தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி. கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்து அவர் தொடர்ந்து உரை யாற்றும்போது தெரிவித்ததாவது:

மாணவர்கள் பரீட்சையில் உயர்பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உசாத்துணை நூல்களை தேடி வாசிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்த நிலை இன்று அருகிக் கொண்டு செல்கிறது.

யாழ். மாவட்டத்தில் கல்வித் தரம் 1990க்கு முந்திய காலப் பகுதியில் அதிஉயர் நிலையில் காணப்பட்டது. இன்று அந்த நிலைமாறி பின்தங்கிய நிலைக்கு செல்கின்றது. இந்த நிலை எதிர் காலத்தில் மாற வேண்டும்.

பாடத்துறையுடன் தொடர் பான மேலதிக வாசிப்புக்குரிய நூல்களை குறித்த துறைசார்ந்த அறிஞர்கள் கல்வியாளர்கள் எழுதி வெளியிடப்படவேண் டும். அந்த வகையில் சுரேஸ்குமா ரின் இந்த முயற்சி பாராட்டத் தக்கது. இந்தவகையில் மேலும் பலநூல் வெளிவரவேண்டும்.

1990க்கு முந்திய காலப் பகுதியில் பல்வேறு நூல்கள் வெளியிடப்பட்டன. அதனை மாணவர் சமூகம் ஏற்றுக் கொண்டு தமது தேடலை விருத்திசெய்தது. வாசிப்புத் திறனை தொடர்ந்து வளர்த்து வந்தது, இன்று அந்தநிலை குறைவடைந்து செல்கின்றது.

தேடலுடன் கூடிய வாசிப் புத்திறன் மாணவர்களை முழுமை அடையச்செய்யும் பொதுப் பரீட்சைகளிலும், போட்டிப் பரீட்சைகளிலும் உயர் புள் ளியை பெற்றுக்கொள்ள வகை செய்யும்.- என்றார். (எ-11)

# நூல்களை வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்

## முன்னாள் துணைவேந்தர் சண்முகலிங்கன்

யாழ்ப்பாணம், செப்.5

நூல்களை வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின் றான் என்பதற்கிணங்க எவ் வளவு தூரம் வாசிக்கும் பழக் கம் மனிதனிடையே அதிகரிக் கின்றதோ, அவ்வளவுக்கு அறிவு வளர்ச்சியும் அதிகரிக் கின்றது என்று முன்னாள் துணைவேந்தர் நா.சண்முக லிங்கன் தெரிவித்தார்.

கடந்த வாரம் இடப்பெற்ற நல்லூர் தேர்த்திருவிழா வன்று நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடை பெற்ற சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதிய ''சைவசமயதரிசனம்'' நூல் அறிமுக விழாவில் வாழ்த்துரை வழங்கிய சண்முகலிங்கன் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் சு.உதயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

மாணவர்களிடையே வாசிப் புப்பழக்கம் அருகி வரு கின்ற இந்த காலத்தில் தொலைக் காட்சி பார்க்கும் பழக்கம் அதி கரித்து வருகிறது. மாணவர்களு டைய தொலைக்காட்சி பார்க் கும் பழக்கத்தை மாற்றுவ தற்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவேண்டும். அப் பொழுதுதான் மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தின் முக்கியத் துவம் புரிந்து இப்படிப்பட்ட நூல்களை வாசிக்க முன்வரு வார்கள்.

'கடவுள் இருக்கி றாரா?' அவர் எப்படிப்பட்டவர்? அவ ரது உருவம் என்ன?' என் றெல்லாம் வினாவெழுப்பும் மாணவர் வாழ்கின்ற இன்றைய காலகட்டத்தில் ஆன்மிக எழுத்தாளர் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதி வெளி வந்துள்ள இந்த நூல் மாணவர் களிடையே ஆன்மீக உணர் வைத் தட்டியெழுப்பி ஓர் ஆன் மிக விழிப்புணர்ச்சியை ஏற் படுத்த வல்லது.- என்றார். (எ)

# அகில இலங்கை சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத் தப்பட்ட சைவப்புலவர் தேர்வு, இளஞ் சைவப்புலவர் தேர்வு ஆகியவற்றில் சித்திய டைந்தோர் விவரம் பின் வருமாறு:

சைவப்புலவர் தேர்வின் இரண்டாம் பிரிவில் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் (வாழைச் சேனை), செல்வி. நேமி நாதன் டிஹாசி (வாழைச் சேனை), செல்லையா நவநீத குமார் (கொழும்பு), செல்வி. ரஜீதா கைலாயநாதன் (பன் னாலை), செல்வி பாலரட்ண சிங்கம் சோபா (அளவெட்டி), திருமதி. சண்முகவடிவு தில்லை மணி (வட்டுக்கோட்டை) சின் னத்தம்பி விசுவாசம்( நீர்வேலி) ஆகியோர் சித்தியடைந் துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் தேர்வின் இரண்டாம் பிரிவில் செல்வி.ஹரிகரன் தர்மியா (வாழைச்சேனை), செல்வி. மகேந்திரன் துஸ்யந்தி (வாழைச் சேனை), கனகரெத்தினம் சிவதர்சன்(வாழைச்சேனை), செல்வி.சுகுமார் தவ[illegible] (வாழைச்சேனை), செல்வி யோகராஜா சுகிர்தா (வாழைச் சேனை),திருமதி கஜேந்தினி உதயகுமார் (வாழைச் சேனை), திருமதி. புஸ்பலதா கலாரஞ் சன் (தம்பிலுவில்), வைரமுத்து ஜெயந்தன் (வாழைச் சேனை) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் தேர் வின் மூன்றாம் பிரிவில் செல்வி. தர்மராஜா சுதர்சினி (வாழைச் சேனை),செல்வி பத்மநாதன் அங்கவை (பழுகாமம்-1), செல்வி.மதுரநாயகம் தர்மினி (பழுகாமம்-1),புவனேஸ்வரன் ஜீவஆனோஜ் (பெரியநீலா வணை-1அ) செல்வி. தவேந் திரகுமார் சரமிளா (பெரியகல் லாறு-3) செவ்லி.நவரத்தினம் சசிகலா(எருவில்), சுந்தர மூர்த்தி கரிகரன்(தம்பிலுவில்), நாகரெத்தினம் மேன ரூபன் (மகிழூர்), மாணிக்கவாசகம் புருசோத்மன் (எருவில்), கோவிந்தன் ரவீந்திரராஜா (துறைநீலாவணை-8) சுப்ர மணியம் பரமநாதபிள்ளை (கல்முனை-2), செல்வராசா நித்தியராஜ் (எருவில்), ஜீவகுமார் பால்ராஜ் (வாழைச் சேனை), இராசையா நிரூபன் (பெரியகுளம் வவுனியா), இராசகோன் தருமராசா (பாண்டி ருப்பு-2) ஆகியோர் சித்திய டைந்துள்ளனர். (எ-313)

# நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு, செப்.5

சுன்னாகம் அம்பேக்கர் சன சமூக நிலையம் புதிய நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளது. தெரிவு செய்யப் பட்டுள்ளோர் விவரம்:

தலைவர்-தி.ஜெயச் சந்தி ரன், உபதலைவர்- ஆ. சுரேஸ் ஆனந்தன், செயலாளர்- த.மோகன ரமணன், உபசெயலாளர்- சி.ஜெயானந்தன், பொருளா ளர்-மு.தர்சன்

செயற்குழு உறுப்பினர்க ளாக த.கோகுலரமணன், இ.கேந் திரன், அ.கஜன், அ.தர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட் டனர். (எ-86)

# உபசரணையாளர் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.9

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப் பாணத்தில் அரச சான்றித முடன் கூடிய இலவச தொழிற் கற்கை நெறிப்பயிற்சி ஒன்றை இன்று காலை 8.30 மணிக்கு ரில்கோ ஹொட்டலில் நடத்த வுள்ளது.

இந்த ஹோட்டலில் உபசர ணையாளர்கள் கற்கை நெறிக்கு 50 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதுடன் 12 நாள்கள் இலவசமாக பயிற்று வித்து சான்றிதழ்கள் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தக் கற்கை நெறிக்கு ஆரிவமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப் பாளர் இரா. அகிலன் அறி வித்துள்ளார். (எ)

# இருபது வருடங்களாகத் திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம், செப்.5

அச்சுவேலி பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட ஒன்ப தாம் வட்டாரம் எல்லை வீதி புனரமைக்கப்படாமையால் அந்தப் பகுதி மக்கள் போக்கு வரத்து செய்வதில் பல சிர மங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி 20 வருடங் களுக்கு மேலாக எந்தவித புனரமைப்பு பணிகளும் இன்றி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

மழைகாலத்தில் இந்த வீதி யூடாகப் பயணத்தை மேற் கொள்வது கடினமாக உள்ளது என்று இந்தப் பகுதி மக்கள் விசனம் கூறுகின்றனர்.

உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட போது எந்த வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர்.

அடுத்து வரும் மழைகாலத் துக்கு முன் இந்த வீதிப் புனரமைப்பை மேற்கொண்டு மக்களின் சிரமங்களை நீக்கு மாறு கோரிக்கை விடப்பட் டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுமா?

காரைநகர் ஊரிக் கிராம மக்கள் தமக்கு குழாய் நீர் விநியோகத் திட்டத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது நிலவும் வெப்பமான சூழலை அடுத்து கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் தண்ணீர் நிலைகள் வற்றியுள்ளன. இதனால் இந்தக் கிராமத்தில் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. குடிதண்ணீர் கிணறுகள் இங்கு இல்லை. ஒரு சில உவர்நீர் கிணறுகளே காணப்படுகின்றன. அவையும் வரட்சியால் நீர் வற்றி வருகின்றன. இதனால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகின்றன.

குளிப்பதற்கும் அத்தியாவசிய தேவைகளுக்கும் நீண்ட தூரம் சென்றே உவர் நீரைக் கூடப் பெற வேண்டிய நிலை இங்கு காணப்படுகின்றது.

தற்போது காரைநகர் பிரதேச சபையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு குடிதண்ணீர் தினமும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. பவுஸர் மூலம் வழங்கப்படும் நீரைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தப் பகுதியில் உள்ள பொது இடம் ஒன்றில் அதிகாலை முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் கடற்றொழிலையும் கூலித்தொழிலையும் அவர்களில் அதிகமானோர் மேற்கொண்டு வருவதால் தங்கள் வீடுகளில் கிணறுகளை அமைக்க முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவர்களின் குடிதண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1985 காலப் பகுதியில் சீனோர் நிறுவனத்தால்



திக்கரைப் பகுதியில் இரு கிணறுகள் அமைக்கப் பட்டு நீர்த் தாங்கி நிறுவப் பட்டது. இதன் மூலம் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள இந்தக் கிராமத்துக்கு நீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுடன் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

மீண்டும் இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின் 1999 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராக இருந்த ஜே. எக்ஸ். செல்வ நாயகத்தின் முயற்சியால் அரச சார்பற்ற நிறுவன மான ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்ட நிறுவனத்தின் நிதி உதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் கிணறுகள் புனரமைக்கப்பட்டுக் குழாய் தண்ணீர் விநியோகப் பாதைகள் செப்பனிடப்பட்டுப் புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டுக் குழாய் தண்ணீர் விநியோகம் மீள ஆரம்பிக்கப்பட்டது. குழாய் தண்ணீர் விநியோகம் ஆரம் பிக் கப்பட்டதும் மக்களின் மீள்குடியமர்வும் இந்தப் பகுதியில் அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் கடந்த சில வருடங்களாக இந்தப் பகுதிக்கான குழாய் தண்ணீர் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தக் கிராம மக்கள் தண்ணீருக்குப் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதுடன் நீர் உள்ள பகுதிகளில் சென்று குடியேற வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் குழாய் நீர் விநியோகத்துக்காக பயன்படுத்தப்பட்ட கிணற்றில் தற்போது குறைந்தளவு நீரே காணப்படுகின்றது.

இந்த கிணற்றின் மூலம் குழாய் தண்ணீர் விநியோகம் எவ்வாறு சாத்தியப்படும் என்று இந்தக் கிராம மக்களைக் கருத்துக் கேட்ட போது, நன்னீராகக் காணப்படும் ஆழமான இந்தக் கிணற்றில் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரை தாராளமாக தண்ணீர் இருப்பதாகவும் ஜூலை தொடக் கம் செப்ரெம்பர் மாதம் வரையுமே நீர் குறைந்து செல்வதாகவும் கூறினர். எனவே நீர் உள்ள காலங்களில் தாராளமான நீர் விநியோகத்தையும் வற்றுகின்ற காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகத்தையும் மேற்கொள்ள முடியும் எனவும் அவ்வாறே கடந்த காலங்களிலும் இடம்பெற்றதாக அந்தப் பகுதி மக்கள் தெரி வித்தனர்.

எனவே இந்தக் கிராம மக்களின் உடனடித் தேவையாகவும் அத்தியாவசிய தேவையாகவும் காணப்படும் குழாய் நீர் விநியோக திட்டத்தை மீள ஆரம்பிக்க வேண்டும் என்பது இந்த மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையாக உள்ளது.

இந்த கோரிக்கையை நிறைவேற்ற அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் முற்படுவார்களா என்பதே இந்த மக்களின் ஏக்கமாக காணப்படுகின்றது. தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்தும் குழாய்நீர் விநியோகத்தை ஆரம்பிக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அந்த மக்களின் கவலை.

**காரையூரான்**

---

## விழிநீரில் உறவாடும் எங்கள் தெய்வத்துக்கு 8 ஆம் ஆண்டு நினைவலைகள்...

அமரர்

## வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்



உதயம்
12.09.1967

அஸ்தமனம்
29.02.2008

திதி: பூர்வபக்க அட்டமி (05.09.2011)

ஆண்டெட்டு ஆனதையா பூவுலகைப் பிரிந்து
ஆறவில்லை எம் துயரம் உமைதனைப் பிரிந்து
உங்கள் உடல் எமை விட்டு பிரிந்தாலும்
உங்கள் உயிர் எங்கள் மூச்சில் வாழுதப்பா
நேசம் நிறைந்த குல தெய்வமே - நீங்கள்
எமக்கு போட்ட அத்திவாரத்தில் தான்
என்றென்றும் உங்கள் ஆசியில்
தலை நிமிர்ந்து வாழ்கின்றோம்
மனக்கவலை தீர மருந்து ஒன்று கேட்டோம்
கண்ணீர் தான் மருந்தென்று கடவுளும் கூறிவிட்டான்
இளமையில் நாம் வாழ்ந்த இனிய நினைவுகளை
நாம் நினைத்து வாழ்கின்றோம் அப்பா!
அன்புடன் வளர்த்து அறிவு தனை நிதம் ஊட்டி
பண்பாக வளர்த்த பாசமிகு அப்பாவே!
எம்மருகில் நீங்கள் இல்லை என்ற குறைதான்
இதயத்தில் நாம் சுமந்து எப்போதும்
நினைக்கின்றோம்
சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த
ஒளி விளக்கை அணைத்து விட்டான் - காலனவன்
அவனியைப் பிரிந்து ஆண்டெட்டு ஆனாலும்
எங்கள் துயர் ஒரு துளிகூட ஆறாதையா
உங்களின் எண்ணப்படி நாம் உயர்ந்து நிற்கின்றோம்
உங்கள் ஆசி வேண்டி எச் செயலும் செய்கின்றோம்
என்றென்றும் உங்கள் ஆசி எமக்கு கிடைக்க
கண்ணீரை காணிக்கையாக்கி ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் பிரிவால்
வாடி நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமகள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**திருமதி**
**சபாரத்தினம் ரதிதேவி**

பிறப்பு 02.02.1947 | இறப்பு 15.09.2010

ஆருயிர் அன்னையே!
அன்பின் திருவுருவாய்
பாசத்தின் சிகரமாய் விளங்கி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
தவிக்கவிட்டு எங்கு சென்றீரோ?
உங்கள் பிரிவால் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கும் :
கணவன், மகன்மார், மகள்மார்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

தகவல்-
நந்தருபன்(மகன்) - பிரான்ஸ்.
0033618666075.
சுன்னாகம் - 0213735238.

---

## மரண அறிவித்தல்

### தம்பிஜயா இரட்ணராஜா

(முன்னாள் முகாமையாளர், கதிர் ஹாட்வெயாஸ், யாழ்ப்பாணம்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இல,49 பென்ரிக்கோஸ் லேன் கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா இரட்ணராஜா நேற்று 04.09.2011 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-அமிர்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-ராசம்மா தம்பதியரின் மருமகனும் திருமதி இராசலட்சுமியின் அன்புக்கணவரும், சிறிரஞ்சினி (சுவீற்றி-சென். ஜோன்ஸ் கல்லூரி), ரஞ்சி(குளோபல் ஹாட்வெயர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயபதி,லக்ஷி ஆகியோரின் அன்பு மாமனும், பிரியதர்சினி, பிரசாத், றெபோன் ஆகியோரின் அன்புப்பேரனும், வில்வராஜா, ரட்ணராணி, வில்வராணி, யோகராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும், கனகாம்பிகை, அருளம்பலம், காலஞ்சென்ற பசுபதி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2011) திங்கட்கிழமை மு.ப .10 மணிக்கு இல,68 குறொசெட் லேன், கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் சென்.ஜோன்ஸ் சுண்டிக்குழி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

68, குறொசெட் லேன்,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரி மாணவருக்கு மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், செப் 5

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தால் பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறி ஆசிரிய மாணவர்களுக்கான மீட்டல் நாள் பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இதற்கான நேர சூசியைப் பிராந்திய நிலையத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

## காணி விற்பனைக்கு

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந் து ஏறத்தாழ 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776090931, 0773238033

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் புகையிரதக் கடவைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774116222

## தவறிவிட்டது

பிட்டியெல்லை களபூமி காரைநகர் எனும் முகவரியுடைய கிருபானந்தமுருகன் சேந்தன் என்பவரின் தேசிய அ. அ. (911333180 V) மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், BOC வங்கியின் ATM காட் மற்றும் L. தயாரூபனின் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரத் துக்கான அடிக்கட்டைத் துண்டு என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 0778806944.

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் - 2011

### தற்காலிக கடை இடஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 26.09.2011 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிகமாகக் கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. கடைகள் தொகுதி வாரியாகப் பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம் 2. இனிப்புவகை
3. தேநீர்க் கடை 4. மணிக் கடை 5. கச்சான் கடலை

**முக்கிய குறிப்பு:**

* முதல் மூன்று கடைத் தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடியகூறு விலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
* அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தைப் பெற்று தொடர்பான வாடகைப் பணத்தையும் முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
* விவரங்கள் வழங்கவேண்டிய படிவங்களை கோயில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 10.09.2011 வரையில் ஏற்றுக் கொள்ளப்படும்.
* ஏலம் போடும் நாள் 10.09.2011 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி

துன்னாலை வடக்கு. தொலைபேசி: 0213210983

புலோலி, 01.09.2011

அறங்காவலர் சபை (சி/3574)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற் பனைக்குண்டு.

தொடர்பு: 0776146434 (காணி பிரித்தும் கொடுக்கப்படும்)

## கோழிக் குஞ்சு விநியோகம்

No-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள், 07.09.2011இல் விநியோகிக்கப்படும்

றாஜீவ்,

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (7516)

## சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித்- மஞ்சுநாத சுவாமி

தொ.பே.இல: 0778949044

வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.

Skype Contect- PARAMASHIVAN 1

SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

## கோழிக் குஞ்சு விநியோகம்

2.9.2011 இல் விநியோகிக்க இருந்த பைரகா புறொயிலர் குஞ்சுகள் 06.09.2011இலும் NEEL FARM சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 07.09.2011 இலும் விநியோகிக்கப்படும்.

விவரங்களுக்கு

S.கிருஷ்ணகுமார்,

விதானை வளவு, மானிப்பாய். T.P:0772338084

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு கீழ்க்கண்ட வேலைகளுக்கு 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. முழுவிவரம், தொ.பே. இலக்கம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

* வீட்டுத்தோட்ட பராமரிப்பாளர்/ காவலாளி (பகல்) (காலை 6மணிமுதல் மாலை 5 மணிவரை) சம்பளம் ரூபா 10,000
* இரவுக் காவலாளி - சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு: விளம்பர இல- 4169,

மே/பா. உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பணிநிலை வேண்டுகை

யாழ்.நகரில் பிரபல்யமான அச்சகத்துக்கு பணியாளர்கள் தேவை

* கணினி இயக்குநர்கள் (இருபாலாரும்)
* முகாமையாளர்கள் - பெண்கள்
* புத்தகம் கட்டுநர் - பெண்கள் (பழக விரும்புபவர்களும்)
* அலுவலக உதவியாளர்கள் - ஆண்கள்
* இயந்திர இயக்குநர்கள் - ஆண்கள் (பழக விரும்புபவர்களும்)

தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்

கீழ்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்

T.P.No: 0776574492, 0757328637

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

லண்டன், கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க், ஜேர்மனி, இத்தாலி, அவுஸ்ரேலியா, நோர்வே, UAE

72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

கடலுணவு வகைகள், மருந்து பொருட்கள், என்பவற்றையும் அவுஸ்ரேலியாவிற்கு உணவு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்.

800/=

நிபந்தனைக்குட்பட்டது. ARRUL GLOBAL EXPRESS இல. 01 பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113

# க.பொ.த உயர்தர மாணவர் மற்றும் பெற்றோருக்கான கலந்துரையாடல்

NIBM open day

* ✓ உயர் கல்வி சம்பந்தமான ஆலோசனைகள்
* ✓ விரிவுரையாளர்களுடனான சந்திப்பு
* ✓ இலவச கணினி கருத்தரங்கு - முற்பகல் 10.00 மணி
* ✓ அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள் பற்றிய விளக்கம்

இடம் : NIBM யாழ் பிராந்திய நிலையம் (யாழ் இந்து கல்லூரி மைதானம் முன்பாக)

அனுமதி இலவசம்

காலம் : 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

077 0716974 , 021 222 0360

NIBM BUILDING COMPETENCIES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 வருடங்களாக அருளாட்சி புரியும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஓலையால் வேயப்பட்டு வந்த நாவாந்துறை சென். நீக்கிலஸ் ஆலய மேற்பகுதி காலத்துக்குக் காலம் வீசும் பெருங்காற்றால் சேதமடைந்து வந்ததையடுத்து அருட்திரு. ஓவன் அடிகள் ஆலயத்துக்கு ஓட்டால் கூரையமைத்து பீடப்பகுதிக்கு சிமெந்து நிலம் அமைத்து அழகுபடுத்தினார். புனித பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த குருக்கள் திருப்பலி வழிபாடுகளை நிறைவேற்றி வந்தனர்.

அருட்திரு வை.கறோவ் அடிகள் பணியாற்றிய 1961 முதல் பீ.எம்.இம்ம னுவல் அடிகள் பணியாற்றிய 1983 வரை மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய ஆலயங்கள் இந்தக் கோயில் பங்குடன் இணைந்திருந்தன.

இந்தப் பகுதி மக்களின் ஆன்மிக, கல்வி வளர்ச்சி களைக் கருத்தில் கொண்டு மறைந்த யாழ்.ஆயர் மேதகு வ.தியோகுப் பிள்ளை ஆண்டகையின் வேண்டுகோளுக் கிணங்க அருட்திரு பெனாட் கொண்சன்ரைன் அடிகள் பங்குத் தந்தையாக இருந்த போது. 1974 ஆம் ஆண்டு அருட் சகோதரி மேரி அஞ்சலா பெர்ணான்டோ தலை மையில் நல்லாயன் கன்னியர் சபை இந்தப் பகுதியில் தமது பணி இல்லத்தை ஆரம் பித்தனர். ஆலய வளாகத் தில் அமைந்துள்ள நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மாணவர்களின் கல்வியை வளர்ப் பதோடு ஆலயத் துக்கும் பெருமை சேர்த்து வருகிறது.



மீன்பிடித்தொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட இந்த ஊர் மக்கள் தமது பாதுகாவலரின் ஆலயத்தையும் திருவிழாவையும் சிறப்பிக்க நிதி வளத்தையும், உடல் உழைப்பையும் வாரி வழங்கி வருகின்றனர். புனித நீக்கிலா ரும் தொழில் துறைகளை ஆசீர்வதித்து மக் களை பேரா பத்துகளில் நின்று பாதுகாத்து வருகின்றார். வருடந் தோறும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி தமது பாதுகாவல ருக்குத் திருவிழா எடுத்து நன்றி தெரிவிக்கின்றனர்.

அருட்திரு மேரியோசப் அடிகளாரினால் 1970 இல் ஆரம்பிக்கப்பட்ட மரியாயின் சேனை சிறப்புடன் இயங்கி வருகின்றது. மற்றும் அருட்பணிச் சபை, வழிபாட்டுக் குழு, பாடகர்குளாம் பீடப் பணிப்பாளர் சபை பக்திச் சபைகள் இளைஞர் ஒன்றியம் என்பன ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாக செய லாற்றுகின்றன. பங்குத் தந்தையார்களான அருட்திரு. வீ.ஆர்.தார்சிசியஸ், எம்.எக்ஸ். கருணா ரெட்ணம், எம்.எஸ் நல்லையா ஆகியோரின் வழிநடத்தலில் ஆலயம் பெருவளர்ச்சி கண்டது.

வருடந்தோறும் மார்கழி மாதம் 6 ஆம் திகதி புனித நீக்கிலார் மற்றும் புனித மரியாள் திருச்சொரூபங்களை கடலுக்கு எடுத்துச் சென்று கடலையும், வள்ளங்கள், தொழில் உபகரணங் களை ஆசிர் வதிக்கும் முறை பின்பற்றப்பட்டு வருகின் றது. இந்தச் செயற்பாடுகள் மனநிறை வையும் இறை பத்தியையும், நன்றி உணர்வையும் வளர்ப்பதாக மூத்த தொழிலாளி ஒருவர் கூறினார்.

புனிதர் பவனி வரும் அழகிய தேர் பக்தர் ஒருவரின் குடும்ப அன்பளிப்பாக 2000ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இந்த கலை நுட்பம் மிகுந்த தேரும் வேறு பல பழைமை வாய்ந்த திருப் பண்டங்களும் கடந்தகால யுத்தத்தால் சேதமடைந்தன.

சனத்தொகைப் பெருக்கமும் பக்தர்க ளின் வருகையின் அதிகரிப்பும் பழைய கட்டடம் சேதமுற்று வந்தமையும் புதிய ஆலயம் கட்ட வேண்டுமென்ற தேவையை உணர்த்தியது. அதன் ஆரம்ப கட்டமாக 2000 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு. பீற்றர் துரைரட்ணம் அடிகளாரின் பெருமுயற்சியால் புலம் பெயர் பங்கு மக்களிடமும் உள்ளூர் மக்க ளிடமும் 25 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டது. நாட்டின் அசாதாரண சூழல் காரணமாகப் பணி கள் முன்னெடுப்பது தடைப்பட்டது.

பின்னர் அருட்திரு. எம்.வீ.ஈ.இரவிச் சந்திரன் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலப்பகுதியில் 2008 ஆம் ஆண்டு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யால் அடிக்கல் நடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டன. பழைய ஆலயக் கட்டடம் போட்டிக்கோ தவிர்ந்த அனைத்துப் பகுதியும் இடித்து அகற்றப்பட் டது. பங்கு மக்களின் சிரமதான உதவிகள் பணச் செலவு களை பெரிதும் மட்டுப் படுத்த உதவியன.

ஆலயக் கட்டுமானப் பணிகளில் பங்கு மக்கள் நன் கொடையாளர்கள், கட்டடப் பணியாளர்கள், புலம்பெயர் உறவுகள், இளைஞர்கள், அன்பிதயங்களின் ஒத்துழைப் புடன் புதிய தோற்றத்துடன் நாவாந்துறை நீக்கிலஸ் ஆலயம் நிமிர்ந்து நிற்கின்றது. இந்த ஆலயம் எழுந்து நிற்பது போல் இந்த மக்களின் இறை விசுவாச மும் ஆழமான அத்திபாரத்தில் கட்டப்பட்ட உறுதிமிக்கதாக உயர்ந்து நிற்பதை இந்த ஆலயம் உணர்த்து கின்றது. இந்த புதிய ஆலயம் பிரமாண்டமான 54 அடி உயரம் பீடக் கோபுரத்தையும் 150 அடி நீளத்தையும் 55 அடி அகலத் தையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்பக்கத் தோற்றத்தை இரட்டைக் கோபுரங்கள் கொண்டதாக எதிர்காலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தற்போதைய பங்குத் தந்தை அருட்திரு. பா.பி.இராஜசிங்கம் அடிகள் தெரிவித்தார்.

இந்தப் பகுதி மக்கள் தமது உழைப்பால் இறை வனை மேன்மைப்படுத்துவ தோடு பாரம்பரிய, நவீன கலை வடிவங்களாலும் இறை புகழ் பாடுவதில் வல்லவர்கள்.

நீண்ட கத்தோலிக்க பாரம்பரியங்களைக் கொண்ட ஆன்மிக எழுச்சிக்குச் சான்றாகப் பல துறவியர்கள் இங் கிருந்து உருவாகியுள்ளனர். அருட்திரு ஏ.அமல தாஸ் (அ.ம.தி) ம.மேரிஸ்ரெலா, விஜய, இ.நிக்கொலா, மேசி செல்வ நாயகம், விக்ரறின் செல்வதி, அன்ரனிற்றா அன்ரன் ஆகி யோர் இறைவனின் தோட்டத்தில் பணிபுரிகின்றனர்.

இந்தப் பகுதி மக்கள் தமது உழைப்பால் இறை

**எஸ். ஜேசுதாஸ்**

வனை மேன்மைப்படுத்துவதோடு மட்டுமல்லாது, பாரம்பரிய, நவீன கலை வடிவங்களாலும் இறைபுகழ் பாடு வதில் வல்லவர்கள் இங்குள்ள பல அண்ணாவி மக்களும் நடிகர்களும் தமிழுக்கும் சமயத்துக்கும் கலைத் தொண்டாற்றியுள்ளனர். திருவிழாக் காலங் களில் கவி, நடைசாரி, உரைநாடகங்கள், தென்மோடி நாட்டுக் கூத்து என்பன இடம்பெறுவது வழக்கமாகும்.

தாவீது அந்தோனி அண்ணாவியார் 1955 ஆம் ஆண்டில் தீத்தூஸ் சகுனகன்னி நாட்டுக்கூத்துக் களையும் 1956 இல் அ.சல்மோன் அண்ணாவியார் நீ.பர் னாந்து தருமப்பிரகாசனையும் 1965 இல் அ.சலமோன் அண்ணாவியார் யுவானியார் நாட்டுக் கூத்தையும் மேடை யேற்றி யதாக அறிய முடிகிறது.

பிற்காலத்தில் அண்ணாவியார் கலா பூஷணம் நீ.வின்சென் டிபோல் நீண்ட காலமாக பல தென்மோடி இசை நாட கங்களை எழுதி மேடையேற்றி வந்தார். இவர் 17 தென்மோடி நாடகங்களை எழுதியதோடு 50 இற்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். அந்த நாள் களில் இரவு 8 மணி முதல் மறுநாள் காலை 5 மணிவரை கூத்து இடம் பெறும். நடிகர்கள் வரிசையில் பா.எட்வேட், தொ.நீக் கிலஸ், ஆ.மனுவற்பிள்ளை, பெ.யோக்கப், தொ.அருள்ராசா, பெ.குமாரகுலசிங்கம் போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம். தாவீது அந்தோனி பாவிலுப்பிள்ளை, இராஜசிங்கம், அல்பிரட் ஜெயராசா, சூசை ஜெஸ்ரின் ஆகியோர் விளங்குகின் றனர்.

(முற்றும்)

## 7 ஆம் ஆண்டு நினைவில்



தோற்றம்
09. 12. 1928

மறைவு
23. 08. 2004

### அமரர் செல்லையா தியாகராஜா

(ஓய்வு பெற்ற மதுவரி உதவி ஆணையாளர்)
திதி: 2011.09.05

*அன்பு அப்பாவே!*
*நீங்கள் மறைந்த காலங்கள் ஓடினாலும்*
*நீங்கள் பொழிந்த பாசமழை*
*எம் இதயங்கள் மீது*
*தூறலாய் தூவ*
*நீங்கள் வழங்கிய ஆயிரம் ஆசிகள்*
*எம்மை வாழ வைக்க*
*என்றும் உமக்காய் - எம்*
*வாழ்வு*

உங்கள் நினைவுகளுடன் ஏழாண்டுகள் அல்ல ஏழேழு ஜென்மங் களுக்கும் நாம் வாழவேண்டும் என எல்லாம் வல்ல உங்கள் நல்லைக் கந்தனைக் வேண்டி நிற்கும்

**-உங்கள் குடும்பத்தினர்-**

இல.116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

VCare
இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
DR.HAIR Rx
V Care (Pvt) Ltd.
தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!
தலைமுடி உதிர்தல், ஆண்,பெண் வழுக்கை, பொடுகு, இளநரை, புளுவெட்டு, Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை, இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
VCARE HAIR LOSS DISORDERS RESEARCH LABORATORY


Dr. Slim
NO Medicine Side effect
உடல் பருமனை எண்ணி இனி கவலை வேண்டாம்

இச் சிகிச்சை முறையை யாழ் மக்களுக்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தி சேவை வழங்குவதில் பெருமையடைகின்றோம்
தலைமுடியியல் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு

எதிர் வரும் 11, 12, 13, 14. ஆகிய தினங்களில் பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடை பெற உள்ளது.
முன்பதிவுகளுக்கு : 021 222 0288
வவுனியாவில் எதிர்வரும் 17, 18, தினங்களிலும் நடைபெறும்.
இலங்கையில் முதல் முறையாக தலைமுடியியல் பிரச்சனைகளை ஆராயிச்சி செய்யும் ஆய்வுகூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
Dr. Pimple
Good Bye
முகப்பருக்களுக்கு International Skin Peeling சிகிச்சை முறைமூலம் நிரந்தரத்தீர்வு

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715,
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288
Hotline - 011 - 4874854
Head Office - Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த இந்து ஆலயங்களுக்குப் பதிலாக பௌத்த விகாரைகளை நிர்மாணிக்கிறது அரசு



## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 4

போரால் அழிவடைந்தஇந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்கு இலங்கை அரசு, அனுமதிக்காமல் அதற்குப் பதிலாக பௌத்த விகாரைகளை அந்த இடங்களில் நிர்மாணிக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழகம், ராஜபாளையத்தில் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆயிரத்து 400 இந்து ஆலயங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆலயங்கள் அழிக்கப்படுவது தமிழ் மக்களின் கலாசாரத் திற்கு அச்சுறுத்தலாகவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் கூடச் செய்துகொடுக்கப்படவில்லை . தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இலங்கை அரசிற்கு இந்திய அரசு நிதி வழங்கியுள்ளது.ஆனால் இலங்கை அரசு இதுவரை ஆயிரம் வீடுகளைக் கூட நிர்மாணிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவதற்காக ராஜீவ்காந்தி - ஜே.ஆர். ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



தனியார் ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த ரொஷேன் சானகவின் மூன்றாம் மாத நினைவுநாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதனை முன்னிட்டு கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் ரொஷேன் சானகவின் உறவினர்கள் கலந்துகொண்டு அனுஷ் டானங்களில் ஈடுபட்டனர்.

# சொத்து விவரங்களை வெளியிடாத அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, செப்.5

தமது சொத்துக்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தவறிய அரசியல்வாதிகள் மற்றும் அரச ஊழியர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடருவதற்கு தேசிய இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோக விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக தங்களது சொத்து விவரங்களை இதுவரை வெளியிடாத அரச ஊழியர்கள் பற்றிய விவரங்களைச் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தங்களது சொத்து விவரங்களை வெளியிடுமாறு கோரியும் அதனை உதாசீனம் செய்துள்ளதையடுத்தே ஆணைக்குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மோசடியான வழிகளில் சொத்துக்கள் சேர்த்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நூறு அரச ஊழியர்களுக்கு எதிரான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# மஞ்சள் கோடுகளால் வீதிகளைக் கடவுங்கள்; பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து

கொழும்பு, செப். 5

வீதியைக் கடக்கும்போது, பாதசாரிகளுக்கான மஞ்சள் கோடிடப்பட்ட பாதையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை கொழும்பு நகரப் போக்குவரத்துப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பாதசாரிகள் வீதிகளைக் கடக்கும்போது பாதுகாப்பற்ற முறையில் வீதியின் குறுக்கால் செல்வதை விடுத்து, பாதசாரிக் கடவைகளைப் பயன்படுத்தி வீதிகளைப் கடப்பதை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர். இந்த செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கண்ட இடங் களில் வீதியைக் கடப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதசாரிக் கடவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வீதி விபத்துகளையும் வாகன நெரிசல்களையும் தவிர்க்க உதவுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர்.

# கிறீஸ்பூதம் விவகாரத்தில் அப்பாவி நபர் நையப்புடைப்பு

கொழும்பு, செப். 4

எல்ல, பள்ளகெட்டுவ பிரதேசவாசிகள் கிறீஸ் பூதம் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவரை நையப்புடைத்துள்ளனர்.

இந்த நபரைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர் ஓர் அப்பாவி என்று தெரியவந்துள்ளது.

எம்பிலிப்பிட்டிய பிரதேசவாசியான இந்த நபர் எல்ல, பள்ளகெட்டுவ உடவாடியிலுள்ள தனது நண்பர் ஒருவரின்வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்.

இந்தப் பிரதேசத்துக்குப் புதிய முகமாக இருந்தபடியால் பிரதேசவாசிகள் அவரைப் பிடித்து தாக்கியபின் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசவாசிகள் இவரைப் பிடித்தபோது அவரிடம் இரண்டு அசிட் போத்தல்கள் இருந்துள்ளன.

அதனாலேயே அவர் மீது சந்தேகம் எழுந்துள்ளதால் அவரைத் தாக்கியுள்ளோம் என்று பிரதேச மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் அவரிடம் அசிட் போத்தல்கள் பற்றி விசாரித்த போது நண்பரின் வீட்டில் பொருத்தப்பட்டிருக்கும் சூரிய ஒளி மின்சார பெற்றரிக்கு ஊற்றுவதற்காக நண்பரின் வேண்டுகோளுக்கிணங்க வாங்கிச் சென்றதாகத்தெரிவித்துள்ளார்.

எல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.எம்.பீ. பண்டாரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

(ச-5)

## தவறிவிட்டது

NPUY 2069 (2069) என்ற மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0773604703 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C/3580)

## கோழிக் குஞ்சு விநியோகம்

புறொயிலர் குஞ்சுகள், முட்டையிடும் சிவப்புப் பேட் டுக் குஞ்சுகள் 07.09.2011 இல் பெற்றுக் கொள்ளலாம். பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
திருமகள் களஞ்சியம், 668, கே.கே.எஸ். வீதி,
யா/ இந்துக் கல்லூரிக்கு அருகில்
யாழ்ப்பாணம். தொ.பே: 0212223270,
0772238522.

## தவறிவிட்டது

A-9 பாதையில் பேருந்தில் இயக்கச்சிக்கும் பளைக்குமிடையில் தேசிய அ.அட்டை (490120289 V) மற்றும் ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773203493 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

*சன்மானம் வழங்கப்படும்.*

## மரண அறிவித்தல்



### நாகராசா சேதுபதி

கொக்குவில் கிழக்கு பொற்பதி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா சேது பதி கடந்த 03.09.2011 சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா- தாட்சாயினி தம்பதியரின் அன்பு மகனும் அம்பிகாபதியின் அன்புக் கணவரும் வித்தியா, கணேன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தகௌரி, கலாகரன், ஞானசோதி, உமாவதி, கமலவதி, ஜெகசோதி, சீதாலக்சுமி, ரகுபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பொற்பதி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(7588)

## 16 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1907
★
04
★
18



மறைவு
1995
★
09
★
02

### அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபாலதிபர், கோப்பாய்)

*திதி:-ஆவணிமாதம் பூர்வபட்ஷ அட்டமி (5-09-2011)திங்கட்கிழமை*

*எம் அருமை அப்பாவே! பதினாறு ஆண்டென்ன பதினாறாயிரம் ஆண்டுகள்தான் உருண்டாலும் உங்களது நினைவுகள் எங்களை என்றும் விட்டு அகலா! உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கைதடி தெற்கு கைதடி,
க.குலராசன்-மகன்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(7590)

உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

### கடந்த 27.08.2011 சனிக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்



### சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் சண்முகநாதக் குருக்கள்

(வரதராஜக் குருக்கள்)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய பரம்பரை பிரதமகுரு

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கிரியைகள் தலங்காவில் பிள்ளையார் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

| | | |
|---|---|---|
| தசாகம் | 05.09.2011 | திங்கட்கிழமை முற்பகல் 10 மணி |
| ஏகாதிஷ்டம் | 06.09.2011 | செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி |
| சபீண்டீகரணம் | 07.09.2011 | புதன்கிழமை முற்பகல் 10 மணி |
| கிருஹயக்ஞயம் | 08.09.2011 | வியாழக்கிழமை முற்பகல் 10 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி 08.09.2011 இல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தலங்காவில் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. 0776150965; 0213737759

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவைப் போல் ஈழத்தமிழருக்கு எவரும் உதவி செய்யவில்லை

## சீமான் புகழாரம்



புதுச்சேரி, செப்.5

ஈழத்தமிழருக்கு இதுவரைக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாபோல் வேறு யாரும் உதவிகளைச் செய்ததில்லை என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நேற்றுமுன்தினம் உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

ஈழத்தமிழருக்கு இதுவரைக்கும் இவரைப்போல் வேறு யாரும் உதவிகளைச் செய்ததில்லை. மூன்று உயிர்களை எங்களுக்கு காப்பாற்றித் தந்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கிலாரி கிளிண்டன் தமிழகம் வந்திருந்தபோது ஒரு மணித்தியாலம் பேசிக் கொண்டிருந்தார். அதில் 45 நிமிடங்கள் ஈழத்தமிழர்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்.

ஈழ விடிவு என்பது முதல்வர் கையில்தான் உள்ளது. இந்தியாவின் பிரதமராக விருப்பப் படுவதற்கு இந்திராகாந்தியின் பேரன் ராஜீவ் காந்தியின் மகன் என்ற பெயரைத் தவிர என் தம்பி ராகுல்காந்திக்கு வேறு என்ன தகுதி இருக்கிறது.

கருணாநிதி, இந்த மூன்று உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அறிக்கை விடுகிறார். அவர் ஆட்சியில் இருக்கும் போது இவர்களைக் காப்பாற்ற என்ன செய்தார்?

முத்துக்குமார் இலங்கையில் யுத்த நிறுத்தம் வேண்டி தீக்குளித்து இறந்தபோது நாம் போராடியபோது, வீதியில் இறங்கி கொடி பிடித்தபோது பொலிஸாரை விட்டு எங்கள் மீது வழக்கு போட்டு எங்களைத் தடுத்தீர்கள்.

அன்று நீங்கள் எங்களை விட்டிருந்தால் போராட்டம் நடத்தி போரை நிறுத்தியிருப்போம். அதனைச் செய்ய எங்களை விடவில்லை. அதனால் ஆட்சியை இழந்தார். ஜெயலலிதா முதல்வரானார். தோழி செங்கொடி தீக்குளித்து இறந்தார். இந்த மூன்று உயிர்களை தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்ற வீதியில் இறங்கிப் போராடினோம். எங்கள் மீது எந்த வழக்கையும் போடவில்லை. அதற்கு பதிலாக மூன்று உயிர்களைக் காப்பாற்றித் தந்துள்ளார். அவர்தான் தமிழினத்தின் தலைவி என்றார்.

(வ)

# ராஜீவ் கொலைக்குற்றவாளிகளுக்கு ஆயுள்நாள் சிறைத் தண்டனை விதிக்குக!

## மணிசங்கர் அய்யர் வலியுறுத்து



கும்பகோணம், செப்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண த ண்டனை விதிக்கப்பட்ட பேரறி வாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவருக்கும் தண்டனை நிறை வேற்றக் கூடாது . அதிற்குப் பதிலாக இந்த மூவர் உள்ளிட்ட ராஜீவ் காந்தி கொலை வழக் கில் தண்டனை அனுபவித்து வரும் 32 பேரை யும் அவர்கள் இயற்கையாக சிறையிலேயே மரணம் அடையும் வரை தண்டனை அளிக்க வேண்டும்- என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் மணிசங்கர் அய்யர் தெரி வித் துள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கலந்துரையாடல் கூட்டத்துக்கு தலைமை வகித்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

தீவிரவாதி அஜ்மல் கசாப்பையும் இதுபோலவே வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்க வேண்டும்.

உலகில் உள்ள 139 நாடுகளில் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. 23 நாடுகளில் தான் இந்தத் தண்டனை உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 22 நாடுகளில் 67 பேரை தூக்கிலிட்டுள்ளனர். இந்தியாவில் ஒருவர்கூட தூக்கிலிடப் படவில்லை.

ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வேண்டாம் என்றால், அவர்கள் ஆயுள் தண்டனை பெற்று மீண்டும் வெளியே வந்தால், அவர்களால் வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே, அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் - என்றார்.

(வ)

# லோக்பால் வரம்புக்குள் சி.பி.ஐ.யை இணைத்துக்கொள்ள எதிர்ப்பு

லோக்பால் வரம்புக்குள் சி.பி.ஐ.யையும் கொண்டுவர வேண்டும் என்று ஹசாரே குழுவினர் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு சி.பி.ஐ எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஊழலுக்கு எதிரான, பலமான லோக்பால் மசோதா கொண்டு வர வேண்டும் என்பதற்காக காந்தியவாதி அன்னா ஹசாரே 12 நாள் தொடர் உண்ணா விரதம் இருந்தார்.

அவரது மூன்று முக்கிய கோரிக்கைகளையும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஏற்றுக் கொள்ள வைத்து தீர்மானம் நிறைவேறச் செய்து வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட லோக்பால் வரைவு மசோதாக்கள் நாளை மறுதினம் நாடாளுமன்ற நிலைக்குழு முன் பரிசீல னைக்கு எடுக்கப் படவுள்ளது. இதில் லோக்பால் வரம்புக்குள் சி.பி.ஐ அமைப்பையும் சேர்க்க ஹசாரே குழு வலியுறுத்தி வருகிறது. லோக்பால் அமைப் புக்குள் சி.பி.ஐ.யை இணைப்ப தற்கு சி.பி.ஐ தயாரிப்பாளர் ஏ.பி.சிங் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சி.பி.ஐ தயாரிப்பாளர் ஏ.பி.சிங் கூறுகையில்:

பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் கொலை, ஆள் கடத்தல், வன்முறை ஆகிய சம்பவங்கள் தொடர்பான பல வழக்குகளை சி.பி.ஐ விசாரணை செய்து வருகிறது.

இந்தநிலையில் சி.பி.ஐ.யை லோக்பால் வரம்புக்குள் கொண்டு வந்தால் எந்த இடத்தை சோதனை செய்வதாக இருந்தாலும் அது குறித்து 30 நாள்களுக்கு முன்பாக நோட்டீஸ் அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அவ்வாறு நோட்டீஸ் அளித்து சோதனை செய்வது சிக்கலை ஏற்படுத்தும். லோக்பால் கோடிட்டுக் காட்டும் வழியில் நடப்பதற்கு சி.பி.ஐ தயாராக உள்ளது. எனவே ஒரு வழக்கை விசாரணை செய்ய லோக்பால் பரிந்துரைக்கலாம்.

ஆனால் அது குறித்து எழுத்துப்பூர்வமாக கேள்வி கேட்கக் கூடாது. அவ்வாறு லோக்பால் கேள்வி கேட்பது அரசு ரகசிய காப்பு சட்டத்தின் கீழ் சி.பி.ஐ விசாரணை செய்வது பாதிக்கப் படும் - என்றார்.

(வ)



மறவமங்கலத்தில் இந்திய யூனியன் வங்கிக் கிளையை உள்துறை அமைச்சர் சிதம்பரம் திறந்து வைத்து மாணவிகளுக்கு கல்விக்கடன் வழங்கினார். அருகில் வங்கித் தலைவர் நாயர், சட்டபேரவை உறுப்பினர் குணசேகரன் நிற்கின்றார்.

# மன்மோகனின் சொத்து; 4.8 கோடி ரூபா என அறிவிப்பு

டில்லி, செப்.5

இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு இந்திய ரூபாவில் 4.8 கோடி சொத்து இருப்பதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



பிரதமருக்கு சொந்தமாக தெற்கு டில்லியில் வசந்த் குஞ்ச் என்ற பகுதியில் ஒரு பிளாட் டும், சண்டிகரில் ஒரு வீடும் உள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் மாருதி கார் ஒன்றும் 150 கிராம் அளவுக்கு தங்க நகைகள் ஆகியவை உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபோல் ஏனைய அமைச்சர்களின் சொத்து விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதில், ராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணிக்கு மிகவும் குறைவான சொத்துகள் இருப்பதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த விவரங்கள் பிரதமரின் http://pmindia.nic.in தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் சில தகவல்கள் முழுமையாக இல்லை என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# பொதுக் கூட்ட மேடையில் காங்.பிரமுகர் திடீர் மரணம்

மத்திய உள்துறை அமைச்சரின் பிறந்த நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட காங்கிரஸ் பிரமுகர் ஒருவர், திடீரென மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

கரூர் மாவட்ட காங்கிரஸ் குழு சார்பில் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் பிறந்த நாளை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி சார்பில் கரூர், காமாட்சியம்மன் கோயில் பகுதியில் பொதுக் கூட்டம் நடந்தது. இதில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அழகிரி தலைமை தாங்கினார்.

இறுதியாக கூட்டத்தில் நன்றி தெரிவித்து கரூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பிச்சைமுத்து பேசினார். மேடையில் பேசிக் கொண்டிருந்த போது அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. பொதுக்கூட்ட மேடையிலேயே பிச்சைமுத்து உயிர் பிரிந்தது.

# ராமேஸ்வரம் கடல் பகுதியில் பலத்த சூறைக்காற்று; மீன்பிடிக்கத் தடை

ராமேஸ்வரம் கடல்பகுதியில் தொடர்ந்து 7ஆவது நாளாக நேற்றும் சூறைக்காற்று வீசுவதால், மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடல்காற்று அதிகமாக வீசுவதால் மீனவர்கள் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் என்பதால் மீன்பிடி அனுமதித் துண்டுகள் கொடுக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடல் காற்று வீசுவது குறைந்தால் இன்று அனேகமாக மீன்பிடிக்க அனுமதித் துண்டுகள் வழக்கம் போல் வழங்கப்படும் என்று எதிர் பார்ப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.கடந்த ஒரு வார காலமாக கடலுக்குள் சென்று மீன்பிடிக்காததால் மீனவக் குடும்பங்கள் உணவுக்கு மிகவும் சிரமப்படுவதாகவும், வருமானம் எதுவுமின்றி அவதிப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

(வ)

# மூவரின் தூக்கை மத்திய அரசு ரத்துச் செய்ய வேண்டும் - சரத்குமார் கோரிக்கை

தமிழக அரசு கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மத்திய அரசு ஏற்று பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரது தூக்கு தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும்-என்று சமத்துவ மக்கள் கட்சித் தலைவரும், சட்டப் பேரவை உறுப்பினருமான ஆர். சரத்குமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் மூவரின் கருணை மனு, இந்திய ஜனாதிபதியால் நிராகரிக் கப்பட்டுத் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்ட நிலையில், இதனை மாற்றும் அதிகாரம் தமிழக முதல்வருக்கு இல்லை என்பதைத் தெளிவாக்கி சட்டப் பேரவையில் முதல்வர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கடிதமூல கோரிக்கை

கொழும்பு, செப்.5

இறுதி யுத்தத்தின்போது சரணடைந்தவர்களுக்குப் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் ஒன்றிணைத்ததுபோல் யுத்தத்தின் காரணமாகச் சிறைக்குள் வாடிக் கொண்டிருக்கும் எங்களைப் போன்ற அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும். இவ்வாறு புதிய மகஸின்சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சி.இரகுபதிசர்மா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளமை வருமாறு:

30 வருடகாலமாக நாட்டிலிருந்த அவசரகாலச் சட்டத்தை நீக்கியமை தொடர்பில் ஜனாதிபதிக்குத் தமிழ் அரசி யல் கைதிகள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கைது செய்யப்பட்டுள்ள பெரும்பாலான தமிழ் அரசியல் கைதிகள் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்காரவாதத் தடைச்சட்டம் என்பவற்றாலேயே கைது செய்யப்பட்டவர்கள்.

இங்கு இளைஞர், யுவதிகள், கணவன்- மனைவி என்று உறவுகளை, பிள்ளைகளைப் பிரிந்து நீண்ட காலமாகத் தனிமையில் இருந்து வருகின்றோம். இதனால் நாங்கள் படுகின்ற வேதனைகள் ஏராளம். தற்போது தங்களால் நீக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் எங்களுக்கு ஆறுதல் தருகின்றது.

நாங்கள் உண்ணாவிரதம் இருந்து எந்தப் பயனும் ஏற்படவில்லை. மாறாக நோயாளிகளானதுதான் மிச்சம். நீங்கள் காலப்போக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்குவீர்கள் என்று நம்புகின்றோம்.

நாங்கள் எந்தவித அரசியல் பின்னணியும் இல்லாதவர்கள். யுத்தத்தின் காரணமாகவே கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றோம். எங்களை விடுதலை செய்யும் பெரும் சக்தி உங்களின் கையில்தான் உள்ளது.- என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

# பரீட்சைப் பெறுபேறுகளின் இரண்டாவது பிரதிகளை வழங்குவதற்கு அனுமதி

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களின் ஜி.சீ.ஈ.சாதாரணம், ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் இரண்டாவது பிரதியை இலவசமாக பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ் கல்வியிலாளர் ஒன்றியம் கல்வி அமைச்சிடம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சு இந்த அனுமதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை அதிபர்கள் கோரிக்கைவிடும் பட்சத்தில் கடந்த கால ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சை பெறுபேறுகள், மற்றும் ஜி.சீ.ஈ உயர்தர பெறுபேறுகளின் இரண்டாவது பிரதியை இலவசமாக வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தநடவடிக்கைகள் மற்றும் காரணங்களால் பரீட்சை பெறுபேறுகள் அழிவடைந்தும் காணாமலும் போய்விட்டன. இதனால் மாணவர்கள் தமது பரீட்சை முடிவுகளை உரிய முறையில் அத்தாட்சிப்படுத்துவதற்கு பாடசாலைகளில் இருந்து ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான அதிபரின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் இல்லாமையால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் உயர்கல்வியை பெறுவதற்கே பொருத்தமான வேலை வாய்ப்பை தேடிக் கொள்வதற்கோ முடியாத நிலை காணப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக தமிழ் கல்வியாளர் ஒன்றியம் கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்து பரீட்சை பெறுபேற்றின் இரண்டாவது பிரதியை இலவசமாக வழங்கி உதவ வேண்டும் என்று கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-11)



நெடுந்தீவு மாவிலத்துறை புனித சவேரியார் கோயில் வளவில் நெடுந்தீவு கடற்படையினரால் கட்டப்பட்டுள்ள ஆடைகள் உற்பத்தி நிலையம். (த-7)

# மகாஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.5

தேசிய லொத்தர் சபையின் மகாஜன சம்பத 2440 ஆம் இலக்க சீட்டிழுப்பில் 'P' என்ற ஆங்கில எழுத்தும் 4/0/9/6/8/8 என்ற இலக்கங்களும் வெற்றிக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வலமிருந்து இடமாக சுப்பர் பரிசு எதுவும் வெல்லப்படவில்லை.

4/0/9/6/8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக 20 லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/9/6/8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/6/8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 143 பேருக்கு மூன்றாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1400 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14019 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

'8' என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 139440 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

இடமிருந்து வலமாக 4/0/9/6/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/0/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 142 பேருக்கு எட்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/0/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1404 பேருக்கு ஒன்பதாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.


4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13913 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'P' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 55824 பேருக்கு பதினொராம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.(ம-313)



கரண்டி,
முள்ளுக் கரண்டி
குறைந்த விலையில்
ரூபா-90/-இல் இருந்து
டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை, லிபட்டி பிளாசா
2439422

# மரண அறிவித்தல்



## வடிவேலு நடராசா (J.P)

பருத்தியடைப்பு-ஊர்காவற்றுறையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு நடராசா நேற்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியலட்சுமி(அருந்ததி) இன் அன்புக் கணவரும், ஜெயராசா(J.P ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்க முன்னாள் முகாமையாளர், திருகோணமலை) ஸ்ரீ.சண்முகாநந்தா ஆண்கள் இல்ல முகாமையாளர்), புஸ்பராஜா (பாதை ஓட்டுனர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஊர்காவற்றுறை), ஆனந்தராசா (J.P, கிளை முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச), பிறேமராசா (லண்டன், இலத்திரனியல் பொருளியலாளர், அமெரிக்க வங்கி, லண்டன் கிளை), கலாவதி(லண்டன்), மதனராசா(லண்டன், முன்னாள் ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), நவனிதராசா(பிரான்ஸ்), கலைமதி(திருகோணமலை), புஸ்பதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன்- யோகேஸ்வரி (இளைப்பாறிய தலைமை ஆசிரியை) யின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பழனிநாதன், ஆனந்தநாதன், அமிர்தசெல்வநாயகி, இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சந்திரமாலா, மதுராவதி, காலஞ்சென்ற இராஜமதி மற்றும் ரோகினியம்மா, சூரியகலா (லண்டன்), காலஞ்சென்ற சந்திரரூபன் மற்றும் மரியரோஸ்(லண்டன்), சரஸ்வதி, கௌரி(பிரான்ஸ்), கிருஷ்ணகிரிநாதன், நந்தகுமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சந்திரராஜன், தனுசியா, முகுந்தராஜா (கனடா), சஞ்சீவராஜா(லண்டன்), சுஜீவராஜா, அஜந்தா, ஜதுவரன், ஹரிவர்மன், ரவிவர்மன், அர்வின், டிஷானா, தீபிகா, கமல்ராஜ், சர்வேஸ்வரன், விதுஷினி, யூயினி, பிறேமானந், துஷானி, மயூரன், உமேஸ், சப்தானா, சசிகரன், அர்வினா, சேனுக்கா, தேனுகன், புவிதன் ஆகியோரின் பேரனும், யதுர்த்திகா, செசானா, டக்சேயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன கிரியைக்காக ஊருண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தி,
கிழக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

இலங்கையில் முன்னணி
காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான
யூனியன் அஷ்யூரன்ஸ் PLC யின்
யாழ்ப்பாணக் கிளைக்கான

union assurance
Trust in your tomorrow, today

A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான

வேலை வாய்ப்பு

வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா?
தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு
யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக
நீங்கள் அடையும் நன்மைகள்

★ அதி உயர் வருமானம் உழைக்கும் வசதி
★ ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டுச் சுற்றுலா வசதி
★ வீடமைப்புக் கடன் வசதி
★ மோட்டார் சைக்கிள் / கார் போன்ற வாகன வசதிகள்
★ ஒவ்வொரு வருடமும் தங்கப்பதக்கங்களை வெல்லும் அரியவாய்ப்பு
★ உயர்தர அறிவுசார் பயிற்சி நெறிகள்

Note "விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை"

இடம்: யூனியன் அஷ்யூரன்ஸ் PLC
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 07.09.2011 புதன்கிழமை
நேரம்: 9.30 மணி

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
K.P.JEGAN
A.RAJEEVAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வெளியுறவுத்துறை ஆவணங்கள் முழுமையாக 'விக்கிலீக்ஸால்' வெளியீடு

வாஷிங்டன்,.செப். 05

விக்கிலீக்ஸ் இணையதளம் தன் வசமிருந்த மேலும் இரண்டரை இலட்சம் அமெரிக்க வெளியுறவு இரகசிய ஆவணங்களை சனிக்கிழமை முழுமையாக வெளியிட்டது.

இதனால், அதன் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் ஆஸ்திரேலிய அரசால் கைதுசெய்யப்படக் கூடுமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளியுறவு இரகசிய ஆவணங்களை இலட்சக் கணக்கில் வெளியிட்டு பிரபலமடைந்த 'விக்கிலீக்ஸ் 'இணையதளம் பிரிட்டிஷ் தலைநகர் லண்டனிலிருந்து வெளிவரும் 'சுதி கார்டியன்' அமெரிக்காவின் நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் 'தி நியூயோர்க் டைம்ஸ்' ஜேர்மனியின் 'சுடெர் ஸ்பைஜல்', ஸ்பெயினின் 'எல் பைஸ், பிரான்சின் 'லீ மாண்ட்' ஆகிய பத்திரிகைகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது.

அதன்படி அமெரிக்க இரகசிய ஆவணங்கள் இந்தப் பத்திரிகைகள் மூலம் முதலில் வெளியாகும். அதன்பின் விக்கிலீக்ஸ் இணையதளத்தில் இந்த ஆவணங்கள் வெளியாகும். ஆனால் கடந்தாண்டு டிசம்பரில் விக்கிலீக்ஸ் இணையதளம் தரும் தகவல்களின் ஆதாரங்கள் குறித்து சந்தேகம் கொண்ட 'தி கார்டியன்' அதனுடனான தனது உறவை சட்டப்படி முறித்துக் கொண்டது.

இந்நிலையில், சமீபத்தில் விக்கிலீக்ஸ் வெளியிடாமல் வைத்திருந்த அமெரிக்க வெளியுறவு இரகசிய ஆவணங்கள் குறித்த கடவுச்சொற்களை கார்டியன் பத்திரிகை வெளியிட்டு விட்டது என அசாஞ்ச் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, வெளியிடாமலிருந்த இரண்டு இலட்சத்து 51ஆயிரம் அமெரிக்க இரகசிய ஆவணங்கள் சனிக்கிழமை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியிடப்பட்டன. இவற்றை எவ்வித கடவுச்சொற்களும் இன்றி நேரடியாக இணையதளத்தில் எவரும் பார்க்கலாம். இவற்றுக்கு எந்தப் பத்திரிகையும் உரிமை கோர முடியாது.

இதனால், கடுப்பாகிப் போன 'தி கார்டியன்' உள்ளிட்ட ஐந்து பத்திரிகைகளும் சனிக்கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையில், விக்கிலீக்சின் இந்த நடவடிக்கை எங்களை வருத்தப்படுத்தியுள்ளது. தற்போது வெளியான ஆவணங்களுக்கும் எங்களுக்கும் எவ்வித சம் பந்தமுமில்லை. இவை அனைத் தும் முழுக்க முழுக்க அசாஞ்சின் நடவடிக்கையே என விளக்கம் அளித்துள்ளன.

இந்நிலையில், வெளியான ஆவணங்களில் ஆஸ்திரேலிய உளவுத்துறை தொடர்பாகவும் ஓர் ஆவணமிருப்பதால் அசாஞ்ச் ஆஸ்திரேலிய அரசால் விரைவில் கைதுசெய்யப்படலாமென 'தி கார்டியன்' பத்திரிகை கூறியுள்ளது.

# இத்தாலி அரசின் சிக்கன நடவடிக்கைக்கு எதிர்ப்பு

## சிறு நகரம் தனியாகப் பிரிவு

ரோம், செப். 05

இத்தாலி அரசின் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து ஒரு சிறு நகரம் தன்னை விடுதலையடைந்தது என அறிவித்து புதிய நாணயங்களையும் வெளியிட்டுள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இத்தாலி, ஐரோப்பிய யூனியனிடமி ருந்தும் ஐரோப்பிய மத்திய வங்கியிடமிருந்தும் பல்வேறு நிதியுதவிகளைப் பெற்றுள்ளது.

அதற்கு ஈடாக பல நிர்வாகங்களில் பல செலவுகளை அது குறைக்கவேண்டும். அதன்படி சிறிய உள்ளூர் நிர்வாகங்களை பெருநகர நிர்வாகங்களுடன் இணைத்து வருகிறது இத்தாலி அரசு.

இதற்கு ப்ரோசினோன் மாகாணத்தைச் சேர்ந்த பலெட்டினோ என்ற சிறு நகரம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. மொத்தம் 550 பேர் மட்டும் வாழும் இந்நகரின் நிர்வாகத்தை ட்ரெவி என்ற அண்டை நகர நிர்வாகத்துடன் இணைக்க திட்டமிடப்பட்டது.

இதனால் நகர மேயர் லூகா செல்லாரியின் பதவி பறிபோகும் நிலையேற்பட்டது. இதையடுத்து, செல்லாரி பலெட்டினோ விடுதலை அடைந்தாரென அறிவித்தார்.

'சுபயோரிட்டோ' என்ற பெயரில் புதிய நாணயங்களையும் அச்சடித்தார். இந்த நாணயங்கள் உடனடியாக அந்நகரில் புழக்கத்துக்கு விடப்பட்டன. வெளியூர் சுற்றுலாப் பயணிகள் மூலம் இந்த நாணயங்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

இந்த அதிரடி நடவடிக்கையால் பலெட்டினோ ஐரோப்பா, ரஷ்யா முழுவதும் பிரபலமாகி வருகிறது. ஒரு காலத்தில் இத்தாலி முழுவதும், இதுபோன்ற சுயேச்சை சிறு நகரப் பகுதிகளாகவே இருந்தன. ''இத்தாலியால் நான்கு பக்கமும் சூழப் பட்டுள்ள சான் மரினோ போன்ற சிறு நாடுகள் இருக்கும் போது பலெட்டினோவால் வாழ முடியாதா?''எனக் கேள்வி எழுப்புகிறார் மேயர் செல்லாரி.



ஆஸ்திரேலியா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா.,பொது செயலாளர் பான்கிமூன் கான்பெரா நகரில் பிரதமர் ஜூலியா கில்லார்டை சந்தித்து உரையாடுகிறார்.

# கைப்பற்றப்பட்ட கடாபியின் இரகசிய ஆவணங்கள் ஆய்வு

லிபியாவிலிருந்து தப்பியோடிய கடாபியும், அவரது ஆதரவாளர்களும் தப்பியோடும் அவசரத்தில் தங்களது இரகசிய ஆவணங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த ஆவணங்கள் பல ஆண்டுகளாக எவரும் நெருங்க முடியாத நிலையில் பயங்கர பாதுகாப்புடனிருந்தன. தற்போது இந்த ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன.

இந்த ஆவணங்கள் தலைநகர் திரிபோலியில் இராணுவ புலனாய்வு மையமுள்ள கட்டடத்தில் இருந்தன. இந்த வளாகத்தில் ஒரு கட்டடம் நேட்டோ வான்வழித் தாக்குதலில் நொறுங்கியது.

இதர கட்டடங்கள் சேதமடையாமலிருந்தன. இதில் கடாபியின் அடக்குமுறை ஆட்சி தெரியவந்தது. அதில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் படிப்பதற்கு சிரமமாகவிருந்தன. சில ஆவணங்களில் குறிப்பிட்ட நபர்களை அழிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அலுவலக நிர்வாகம் அப்துல்லா அல் செனுசிக்குரியதாகும். இவர் கடாபியின் மைத்துனராவார். இவர் மனித இனத்திற்கெதிராக கொடுமை செய்தவர். இவரை கைதுசெய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தேடுகிறது.

சில ஆவணங்களில், சில அரசியல் தலைவர்களை குறிப்பிட்டு 'அலையும் நாய்கள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடாபியின் சொத்துகள் மற்றும் நண்பர்கள் விவரமுமுள்ளன. தலைநகர் திரிபோலியில் 1996 ஆம் ஆண்டு அபு சலிம் சிறையில் ஆயிரத்து200 அரசியல் கைதிகள் கொல்லப்பட்ட விவரமுமுள்ளது.

# அமெரிக்காவுக்கு அருகில் பெரும் பூகம்பம்

வாஷிங்டன், செப். 05

அமெரிக்காவின் அலஸ்கா மாநிலத்திற்கு அருகில் பசுபக் சமுத்திரத்தில் 7.1 ரிச்டர் அளவிலான பாரிய பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இப்பூகம்பத்தினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

எனினும் அலஸ்கா பிராந்தியத்தின் அலூஷியன் தீவுகளின் சில பகுதிகளில் ஆழிப் பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 21 பயணிகளுடன் சிலி விமானம் மாயம்

சண்டியாகோ, செப். 05

சிலியைச் சேர்ந்த காஸா 212 என்ற விமானமொன்று இருபத்தொரு பயணிகளுடன் பசிபிக் பெருங்கடல் பகுதியிலுள்ள ஜூலியன் பெர்னாண்டஸ் தீவின் மேற்பகுதியில் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளது.

காணாமல் போன விமானம் கடுமையான காற்றின் காரணமாக கடலில் விழுந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

கடலில் விமானம் மூழ்கியதால் அதில் பயணம் செய்த இருபத்தொரு பயணிகளும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. பயணிகளின் பொருள்கள் கடலின் மேற்பகுதியில் மிதக் கின்றன என தீவின் மேயர் தெரிவித்துள்ளார்.

# துருக்கியிலிருந்து இஸ்ரேல் தூதரை வெளியேற்ற உத்தரவு

அங்காரா, செப். 05

இஸ்ரேல் தூதுவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு துருக்கி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு காஸா பகுதியில் சென்று கொண்டிருந்த துருக்கி அரசுக்கு சொந்தமான கப்பல் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்திற்கு துருக்கி அரசு கண்டனம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் இஸ்ரேல் அரசை மன்னிப்புக் கோர வலியுறுத்தியது.

இத்னையடுத்து, துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் அகமது டாவூடோக்லு வெளியிட்டுள்ள அறிக்கையில், தூதரகத்திலுள்ள இரண்டாம் கட்ட அதிகாரிகளை தவிர உயர் மட்ட அதிகாரிகள் உடனடியாக வெளியேற தான் உத்தரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

# இரு பத்திரிகையாளர்கள் மெக்ஸிக்கோவில் கொலை

மெக்ஸிக்கோ நகர், செப். 05

வட அமெரிக்க நாடான மெக்ஸிகோவில் இரண்டு பெண் பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் காண்டரலினே என்ற அரசியல் பத்திரிகையின் நிறுவனராவார். மெக்ஸிக்கோ சிட்டி நகரிலுள்ள பூங்காவொன்றில் கொலை செய்யப்பட்ட நிலையில் இரண்டு பெண்களின் சடலங்கள் கிடக்கின்றன என பொலிஸாருக்குத் தகவல் வந்தது.

இதையடுத்து, பொலிஸார் நடத்திய விசாரணையில் கொலை செய்யப்பட்டவர்கள் மார்சலா யார்சே(வயது-45), ரோஸியோ கோன்சாலெஸ்(வயது-48) என்ற இரு பத்திரிகையாளர்களென்பது தெரியவந்தது.

# அமெரிக்க உளவுத்துறை கடாபி அரசுடன் தொடர்பு : இரகசிய ஆவணம் சிக்கியது

திரிபோலி, செப். 05

திரிபோலியிலுள்ள உளவுத்துறை அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் அமெரிக்க உளவுத்துறைக்கும், கடாபி அரசுக்குமிடையில் இரகசியத் தொடர்புகள் இருந்தமை தெரியவந் துள்ளது.

இது அமெரிக்காவுக்கும், லிபியா இடைக்கால அரசுக்கும் இடையிலான உறவுகளை சீர்குலைக்கும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

திரிபோலி மீது நேட்டோ விமானப் படைகள் நடத்திய குண்டு வீச்சில் சேதமடைந்த கட்டடங்களுள் லிபிய உளவுத்துறை அலுவலகமுமொன்று. மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த அலுவலகத்திலிருந்து சில ஆவணங்களைக் கைப்பற்றி அவற்றிலுள்ள தகவல் களை வெளியிட்டுள்ளது.

அவற்றின்படி கடாபியின் ஆட்சியில் லிபிய உளவுத்துறை, அமெரிக்காவின் சி.ஐ.ஏ, பிரிட்டிஷின் எம் 16 உள்ளிட்ட பல நாடுகளின் உளவுத் துறையுடன் தொடர்பிலிருந்தது. ஆனால் கடாபி தான் மேற்குலகிற்கு முழு எதிரியாக தன்னைச் சித்திரித்துக் கொண்டார்.

லிபியாவைச் சேர்ந்த பயங்கரவாதிகள் பலர் அமெரிக்காவிடம் இருந்தனர். அவர்களை மீண்டும் லிபியாவுக்குக் கொண்டு வந்து விசாரிப்பது குறித்து சி.ஐ.ஏ லிபிய உளவுத்துறையுடன் இணைந்து செயற்பட்டது.

கடந்த 2004இல் இதற்காக ஒரு [illegible] திரிபோலியில் [illegible] சி.ஐ.ஏ ஆலோசித்தது. கடாபி எதிர்ப்பு இராணுவத்தின் தளபதி அப்துல் ஹக்கீம் பெல் ஹாஜ் ஒரு காலத்தில் அல்- குவைதாவுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்பட்ட சுலிபியா இஸ்லாமிய போராட்டக் குழுவில் இருந்தவர்.

அவர்தான் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சி.ஐ.ஏ.யால் சித்திரவதை செய்யப்பட்டார் எனவும், பின் லிபியாவுக்கு திருப்பியனுப்பப்பட்டார் எனவும் தெரிவித்துள்ளார். அவரைத் திருப்பி அனுப்ப 2004 மார்ச்சில் சி.ஐ.ஏ.வுக்கும், லிபிய உளவுத்துறைக்குமிடையில் தகவல் பரிமாற்றம் நடந்துள்ளது.

அதே போல், பிரிட்டிஷ் எம் 16இற்கும், அப்போதைய லிபிய உளவுத்துறைத் தலைவர் மூசா குசாவுக்குமிடையிலும் தகவல் தொடர்பு நடந்துள்ளது. பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சகமும், சி.ஐ.ஏ.வும் இது குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குமாரசாமி ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டியில்

# பலத்த போராட்டத்தின் பின்னர் பற்றீசியன்ஸ் வி.க வெற்றிபெற்றது

வலி வடக்கு செப் 04

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசுவாமியின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பற்றீசி யன்ஸ் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 07விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. லிவிங்டன் 40, ரியுடர் 38, நோபேட் 26, கிளிங்டன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பகீரதன் 04 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக் களையும் லக்சுமிகாந்தன் மணிவண்ணன், சுஞ்சித் முறையே 07, 12, 44 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. ஐனார்த்தனன் 30, மதுசன், கார்த்திக், லட்சுமி காந்தலா 20 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எரிக் பிரதாப் 04 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் அஜித்டார்வின் 04 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கிளின்ரன் 36 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் லிவிங்டன், நோபேட் முறையே 19 29 ஓட்டங்களைக்கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (எ-86)

# விளையாட்டு உபகரணம் வழங்கல்

வலி-வடக்கு, செப் 5

வட மாகாணக் கல்வி அமைச்சால் வட மாகாண ஆளுனரின் ஆலோசனைக்கமைவாக பாடசாலை மட்டத்தில் சிறந்த விளையாட்டு வீர வீராங்கனை களை உருவாக்கும் முகமாக விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மாவட்ட ரீதியாக பாடசாலை கள் தெரிவு செய்யப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்களினால் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மாகாண மாவட்ட அடிப்படையில் பெற்ற விளையாட்டுப் பெறுபேறுகளுக்கு ஏற்ப மன்னார் முருங்கன் மகாவித்தியாலத்துக்கு 60 சட்ட வேலிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலைக்குச் சட்டவேலிகள் வழங்கப்பட்டமை எதிர்காலத்தில் சிறந்த தடை தாண்டல் வீர வீராங்கனைகளை உருவாக்க இது வழி சமைக்கும் என பாடசாலை சமூகம் கருத்துக் கூறியுள்ளது. (எ-86)

# லீக்கின் உதைபந்தாட்ட போட்டி நாளை குருநகர் சென்றோக்ஸ் மைதானத்தில்

யாழ்.செப்.5

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை செவ்வாய்க்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

பாசையூர் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தினை (A பிரிவு) எதிர்த்து குரு நகர் பாடுமீன் (மஞ்சள்) விளை யாட்டுக்கழகம் பிற்பகல் 3.45 மணிக்கும் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழ்கத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மாலை 5மணிக்கும் மோதவுள்ளன. (எ-23)

# பழுத்தூக்கும் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும் கொண்டுவரவேண்டும்

வலி-வடக்கு, செப்.5

இலங்கை கல்வி அமைச்சால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான பழுத்தூக்கும் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலைகள் பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வட மாகாணத்தில் பல்க லைக்கழகம் உட்பட வெளிக் கழகங்களில் பாரம் தூக்கும் போட்டிகள் இடம்பெறுகின்ற போதிலும் இந்தப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயிற்சிகள் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை.

இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்ட மட்டத்தில் பல்கலைக் கழகம் உட்பட ஏனைய விளையாட்டுக்கழகங்களிலும் வீரர்கள் காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மட்டத்திலும் இதனைக் கொண்டுவரவேண்டும் என இந்த நிகழ்வுடன் தொடர்புடைய வீரர்கள் கூறுகின்றார்கள்.

எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-86)

# வவுனியா உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், செப். 5

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் வவுனியா உதைபந்தாட்ட லீக் அணி வெற்றிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி மோதியது. இதில் வவுனியா உதைபந் தாட்ட லீக் அணி 4:3 என்ற கோல் கணக்கில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (எ-3)

# கரப்பந்தாட்டப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், செப்.5

கைதடி வடக்கு நவ சன சமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து அமரர் அலெக்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு.

தென்மராட்சி ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான போட்டியில் மட்டுவில் சிறி முருகன் விளையாட்டுகழகத்தை எதிர்த்து மட்டுவில் வளர் மதி விளையாட்டு கழகமும் யாழ்.மாவட்ட ரீதியிலான கழ கங்களுக்கு இடையிலான போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி விக்கினேஸ்வர விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(எ-23, 288)

# தேசிய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.5

கல்வி அமைச்சு நடத்தும் 2011 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 8,9,10 ஆம் திகதிகளில் பதுளை வின்சன் விளையாட்டரங் கில் நடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவுக்காக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கிழக்கு மாகாணச் சம்பியனான கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி அணியும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கிண்ணியா மத்திய கல்லூரி அணியும் பங்கு பற்றுகின்றன. இதேவேளை 19 வயதுப் பிரிவுக்காக இந்த மாவட்டத்தில் இருந்து கிண்ணியா மத்திய கல்லூரி அணியே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யூனியன், பாரதி கழகங்கள் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை குருநகர் சென். றோர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம், பாரதி விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழக அணி மோதியது

இதில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களை பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் பாரதி விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் சென். றோக்ஸ் 'பி' பிரிவு அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

### உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் நடத்திய

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், செப்.5

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கிடையே உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் கடந்த சனிக்கிழமை நடத்திய உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதல்நாள் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வெளியாகியுள்ளது-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பரந்தன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் திருநகர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாம்நாள் இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூநகரி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நான்காவதாக ஆட்டத்திம் கிரஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகத்துக்கும் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெறவிருந்தது.

இதில் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக அணியினர் மைதானத்துக்கு சமுகம் கொடுக்காததினால் கிரஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங்கப் பட்டது. (எ-23)

# பாடசாலைகளுக்கிடையே சதுரங்கப் போட்டிகள்

அகில இலங்கை பாடசாலை களுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் எட்டாம் திகதி பதுளை மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

மாகாண மட்டத்தில் நடத் தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பொற்ற பாடசாலை அணிகள் இதில் கலந்துகொள்கின்றன.

திருகோணமலை மாவட் டத்தில் இருந்து 15 வயது ஆண் கள் பிரிவில் ஸ்ரீ.கோணேஸ் வரா இந்துக் கல்லூரியும், பெண் களுக் கான 15 வயது, 19 வயது பிரி வில் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியும் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் சிம்பாப்வே அணி

இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் சிம்பாப்வே அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 135 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. அந்த அணி சார்பாக தைபு 58 ஓட்டங்களையும், யார்விஸ் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டுள்ளனர். பாகிஸ்தான் அணியை விட சிம்பாப்வே அணி 81 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடி வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் களமிறங்கிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 412 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிம்பாப்வே சார்பாக மயோ ஆட்டமிழக்காமல் 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.



4 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஹபீஸ்

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக அஜ்மல், ஓ.ா தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 357 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. யுனிஸ்கான் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

நேற்றைய தினம் தனது ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் அணி சிறப்பாக ஆடி சிம்பாவேக்கு நெருக்கடி கொடுத்தது. நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய யுனிஸ்கான் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி 466 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் சிம்பாப்வே அணியைவிட 54 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக மொஹமட் ஹபீஸ் 119 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.


பந்து வீச்சில் லம்ப் 3 விக்கெட்டுக்களையும், மொப்வூ, பிறிஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாப்வே அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாறியது. முதலாவது இன்னிங்ஸில் அபாரமாக ஆடிய மயோ 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியனுக்கு நடையைக் கட்டினர்.

பாகிஸ்தானின் பந்து வீச்சில் மொஹமட் ஹபீஸ் சிறப்பாக பந்து வீசி சிம்பாப்வேயை திணறடித்தார். 69 ஓட்டங்களுக்கு சிம்பாப்வே 8 விக்கெட்டுக்களை இழந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த தைபு மற்றும் யார்விஸ் இருவரும் கடுமையாகப் போராடி அணியை மீட்டெடுக்க முயன்றனர். பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளித்து ஆடிய தைபு டெஸ்ட் அரங்கில் தனது 11 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் சிம்பாப்வே அணி 135 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்து துடுப்பெடுத்தாடி வருகின்றது. தைபு 58 ஓட்டங்களையும், யார்விஸ் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டுள்ளனர். ஹபீஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று இறுதி நாள் ஆட்டமாகும். (15)

தவறிடிச்சே....



யுனிஸ்கான் 88 ஓட்டங்களுடன்

# இந்தியக் கழுதைகள் களத்தடுப்பு மன்னிப்பு கேட்க வேண்டும்



இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 20- 20 ஆட்டம் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்றது. அப்போது பீற்றர்சன் அடித்த பந்தை பார்தீவ் பட்டேல் பிடியெடுக்கத் தவறினார். அந்த நேரத்தில் வர்ணனை செய்து கொண்டிருந்த நஸார் உசேன், இந்தியா, இங்கிலாந்து அணிகளின் களத்தடுப்பை ஒப்பிட்டால், இங்கிலாந்தின் களத்தடுப்பு சிறப்பாக உள்ளது. இந்திய அணியிலும் 3 அல்லது 4 சிறந்த களத்தடுப்பாளர்கள் உள்ளனர். அதே சமயம் 2 கழுதைகளும் களத்தடுப்பு செய்கிறது என்று குறிப்பிட்டார்.

அவரின் இந்தக் கருத்து இப்போது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. இதுகுறித்து முன்னாள் அணித் தலைவரும், தற்போதைய எம்.பி.யுமான முகமது அசாருதீன் கூறுகையில், நஸார் உசேனை மன்னிப்பு கோருமாறு வலியுறுத்த வேண்டும். இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த அவர், இதுபோன்ற கருத்துகளைத் தெரிவித்திருக்கக்கூடாது. வர்ணனை செய்ய பல வழிகள் உள்ளன. அப்படி இருக்கையில் முன்னாள் வீரரான நஸார் உசேன் இதுபோன்று சொல்வது சரியான்தல்ல என்றார்.

வர்ணனையாளர் குழுவில் இருந்து நாசர் உசேன் நீக்கப்படுவாரா என்று கேட்டபோது, அது குறித்து தனக்குத் தெரியாது. ஆனால் மன்னிப்புக் கோருமாறு அவரை வலியுறுத்த வேண்டும் என்று அசாருதீன் கூறினார். (15)

# காயத்தால் அவதிப்படும் இந்தியா

இந்தியாவின் மாஸ்டர் பட்ஸ்மன் சச்சின் டெண்டுல்கருக்கு கால் கட்டை விரலில் காயம் ஏற்பட்டுள்ளதால் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் விளையாடவில்லை. காயம் தொடர்பாக சச்சின், அறுவை சிகிச்சை நிபுணரை சந்திக்கவுள்ளார். அதன் பிறகே அவர் அடுத்து வரும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவாரா, இல்லையா என்பது தெரியவரும்.

இதே வேளை முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடிய ரோகித் சர்மா காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக மனோஜ் திவாரி அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முன்னணி வீரர்களான சேவக், கம்பீர், யுவராஜ், சகீர்கான் ஆகியோர் காயம் காரணமாக விளையாடாத நிலையில், இப்போது சச்சினுக்கு காயம் ஏற்பட்டிருப்பது இந்திய அணிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (15)

# தங்கம் வென்ற வேகம்




100 மீற்றர் ஓட்டத்தில் வெளியேறிய போது

தென்கொரியாவில் நடைபெறும் உலக மெய்வன்மை சம்பியன் தொடர் போட்டிகளின் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா வீரர் உசைன் போல்ட் தங்கப்பதக்கம் வென்றார்.

100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளராக உசைன் போல்ட் விளங்குகிறார். எனினும் இந்த முறை உலக மெய்வன்மை சம்பியன் தொடர் போட்டிகளில் 100 மீற்றர் இறுதிப் போட்டியில் உரிய நேரத்திற்கு முன்பே ஓட ஆரம்பித்தால் அவர் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

எனினும் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் அவர் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார். இந்தப் போட்டியில் உசைன் போல்ட் 19.40 விநாடிகளில் ஓடி முடித்தார். அமெரிக்காவின் வால்டர் டிக்ஸ் 19.70 விநாடிகளில் ஓடி வெள்ளிப்பதக்கத்தையும் பிரான்ஸின் கிறிஸ்டோப் லெமைட்றே 19.80 விநாடிகளில் ஓடி வெண்கலப் பதக்கதையும் வென்றனர்.

இதற்குமுன்னர் 2009 ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற உலக மெய்வன்மைச் சம்பியன் தொடர் போட்டிகளிலும் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட் தங்கப் பதக்கம் வென்றிருந்தார். 1987 ஆம் ஆண்டு கல்வின் ஸ்மித் இரண்டாவது தடவையாகவும் 200 மீற்ற்ர் ஓட்டத்தில் சம்பியனாகியதன் பின்னர், தொடர்ச்சியாக இரு தடவை 200 மீற்றர் உலக சம்பியன் தொடர் பட்டத்தை வென்ற முதல் வீரர் உசைன் போல்ட் ஆவார். (15)




200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் வென்ற போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ
23.11.1946

நெஞ்சம் நெகிழ
28.08.2009

திருமதி
**சுந்தரலிங்கம் பாக்கியலட்சுமி**

திதி- ஸப்தமி

எம் அன்னையே உங்கள் நினைவைச் சுமையாக்கிவிட்டு
வந்த கடன் முடிந்து வானுறையச் சென்ற
எங்கள் குடும்பக் குல விளக்கை
என்றென்றும் நினைத்திருக்கும்

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### கேதீஸ்வரன் சிவலிங்கம் (செல்வா)



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான கேதீஸ்வரன் சிவலிங்கம் (செல்வா) நேற்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் சுஜாதாவின் அன்புக் கணவரும், பவித்திரனின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன்- இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பலதா, புஸ்பராணி, புஸ்பவதனி, சண்முகலிங்கம், ஜெயலிங்கம், புஸ்பரதி, புஸ்பலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 க்கு இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி, சுதுமலை
வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
வி.கேதீஸ்வரன்(தந்தை)

### க.செ.துரைரத்தினம் (சாந்தா)



கருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க.செ.துரைரத்தினம் (சாந்தா) நேற்று (04.09.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.செல்லத்துரை- செ.அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், செல்வரத்தினம்(U.K), Dr.செல்வமலர் (ஆஸ்திரேலியா), விவேகானந்தன்(வவுனியா), இன்பமலர் (ஆஸ்திரேலியா), ஸ்ரீகாந்தன்(ஆஸ்திரேலியா), நித்தியானந்தன்(ஆஸ்திரேலியா), நிர்மலகாந்தன் (U.K), யோகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் கருவேலடி ஒழுங்கை இல்லத்தில் இன்று (05.09.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# படைகளை பணியில் ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் இடத்தில் அரசியல் வாதிகளுடன் அதிகாரிகள் கலந்துரையாடுகின்றார்கள். தமது இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கு அவர்களின் தயவுதேவைப்படுகின்றது. இதனால் பொதுமக்களின் நம்பிக்கை குறிப்பாக அரசியல் தொடர்பு இல்லாதவர்கள் மத்தியில் சீர்குலைந்து விட்டது. அதன் விளைவு சட்டத்தை கையில் எடுக்கும் நிலையேற்பட்டது. அண்மையில் அவ்வாறான சம்பவங்களை ஆங்காங்கே பார்த்துள்ளோம். பொலிஸாரைப் போல சமூகங்களுடன் செயற்படுவதற்கு பயிற்றப்படாத படையினரின் செயற்பாடுகள் நிலைமையை மோசமாக்கியுள்ளது. சமீபகால சம்பவங்கள் சீருடையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு நிலையில் பெரிய விரிசலுக்கு இடமளித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. இது கிழக்கில் வேறு ஒரு திருப்பத்தை உருவாக்கியுள்ளது. அங்கே இராணுவம் இளைஞர்களைப் பதிவு செய்வதில் ஈடுபட்டுள்ளது. முகாம்களுக்குவந்து தமது சொந்த விவரங்களை வழங்கும்படி அவர்கள் கேட்கப்படுகிறார்கள்.

ஜனதாவிமுக்தி பெரமுனையின் அரசியல் உயர்மட்ட குழுவின் கடந்தவார மாநாட்டில் அவசரகாலம் நீக்கப்பட்டதன் பின்னரும் இராணுவம் பணியில் அமர்த்தப்பட்டிருப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. அந்தக் கட்சியின் கம்பஹா நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் தஹேரத் பத்திரிகைகளுக்கு கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவது என்ற விடயமானது பொதுமக்களை ஏமாற்றும் செயலாகும். அவசரகாலத்தை நீக்கிவிட்டதாக அரசாங்கம் கூறிக் கொண்டாலும் வேறுவிதமாக அதே சட்டப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டுள்ள எந்த ஒரு வரும் விடுதலை செய்யப் படவில்லை உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை. வடக்கில் இராணுவ சோதனைச் சாவடிகள் அகற்றப்படவில்லை. எனவே இதனால் பொதுமக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை.

### ஜெனிவா மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்

ஜெனிவாவில் இந்த மாதம் ஆரம்பமாகும் மனித உரிமைகள் பேரவையில் ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை மறுதலிக்கவும் பிரச்சினை கிளப்பும் நாடுகளை வாயடைக்க செய்யவும் இலங்கைப் பிரதிநிதிகள் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளது. பெருந்தோட்ட தொழில்கள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் இலங்கை குழு செல்கின்றது. இந்தக்குழுவினர் மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு கோல்பேஸ் ஹோட்டலில் இரவு விருந்தளித்தனர். பங்களாதேஷ், கியுபா, சீனா, இந்தியா, இந்தோனேஸியா, மாலைதீவு, நோர்வே, கட்டார், ரஷ்ய ஒன்றியம், சவூதியரேபியா, சுவிற்சர்லாந்து, தாய்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகள் இதில் கலந்து கொண்டன. இலங்கை பிரச்சினையை உலக பருவகால ஆய்வுகளின்போது எடுத்துக் கொள்ளச் செய்வதற்கான முயற்சி இது என்று இலங்கைக் குழுவின் உறுப்பினர் ஒருவர் அதிகார பூர்வமற்ற முறையில் தகவல் வெளியிட்டுள்ளார். இந்தப் பருவகால ஆய்வு கள் 2012 இல் இருந்து 2016 வரை நடை பெறும். இந்த இடைக்காலத்தில் மனித உரிமைகள் பேரவையின் பல மாநாடுகள் நடந்து முடிந்துவிடும்.

அவசரகால நிலைமை அகற்றப்பட்டமையானது இலங்கை விமர்சகர்களைப் பொறுத்தவரை மிகக் குறைந்த, காலம் கடந்த நடவடிக்கை என்பதாகும். அது செயல்படுத்தப்பட்ட முறை அதனை இன்னும் மோசமாக்கியுள்ளது. அவசர கால நிலைமையை வாபஸ் பெறப்போவதாக ஜனாதிபதி துணிச்சலோடு அறிவித்தார். ஓகஸ்ட் 30 ஆம் திகதி அறிவித்தல் எதுவும் இன்றியே அது காலாவதியானது. அதனோடு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டமை, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் காரியாலயம் செயற்படுவது, 6,500 புலிப்போராளிகள் தொடர்ந்து காவலில் வைத்திருப்பது ஆகியவையும் காலாவதியாகின.

அவ்வாறு காலாவதியான சட்ட விதிகளில் சில பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் உருவாக்கப்படவிருக்கும் சில விதிகளில் இணைக்கப்படும் என்று அப்போதைய சட்டமா அதிபர் மோகான் பீரிஸ் பகிரங்கமாக அறிவித்திருந்தார். ஆனால் அது நடைபெற்றதாக உள்நாட்டவருக்கோ வெளிநாட்டவருக்கோ இதுவரை தெரியவரவில்லை. அவ்வாறான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று இருக்குமானால் அரசுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்டுள்ள தர்மசங்கடத்தை தவிர்த்துக் கொள்ள முடியும். இல்லையெனில் அவசரகாலத்தை வாபஸ் பெற்றுவிட்டதாக அது வெளியிட்டுள்ள அறிவித்தல்கள் எல்லாம் வியர்த்தமே. முன்னர் போலவே இலங்கையின் நம்பகத்தன்மையே பாதிக்கப்படப்போகின்றது.

கவனத்தைத் திருப்புவதனால் சர்வதேச சமூகத்தினால் கிளப்பப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதை விட ஏற்படப்போகும் பாதிப்புக்களை சமாளிப்பதிலேயே அரசு அதிக அக்கறைகாட்ட வேண்டியிருக்கும். அதற்காக உள்ளிருந்து வேலைசெய்யும் எதிரிகள் மீதே அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். எரிபொருள் கலப்பட விவகாரம் அல்லது அமெரிக்க போர் விமானங்கள் நாட்டுக்குள் ஊடுருவியமை போன்ற வையை விட கடைசியாக இடம் பெற்றவிடயம் மிக ஆபத்தானதாக முடியலாம்.

## தவறிவிட்டது

கோவில் வீதி, நல்லூரை முகவரியாகக் கொண்ட இராசேஸ்வரன் கேதுசன் என்பவ ரது இல. 921711280V எனும் தே.அ.அட்டை நல்லூர் பிரதேசத்தில் தவறிவிட்டது, கண் டெடுத்தவர்கள் 0773738442 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் முன்னாள் தலைவர்
**லயன் K.S. துரைரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தலைவர், இயக்குநர் சபை, அங்கத்தவர்கள்,
(7616) (34) மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

03.09.2011 அன்று இறைவனடி சேர்ந்த வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சங்கானை பொது நூலக நூலகர் பா.விஜயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **பார்த்தசாரதி பத்மாவதி**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் துயரில் பங்குகொள்ளும்
நூலகக் குடும்பம்,
வலி. மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்

(7616) (34)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச் சங்க நீண்ட காலத் தொண்டரும், ஆயுட் கால அங்கத்தவரும், ஆளுநர் சபை உறுப்பினருமாகிய

**K.S.துரைரத்தினம் (சாந்தா)**

அவர்கள் நேற்று (04.09.2011) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்து விட்டார்.
அன்னாருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கௌரவ தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள்,
அங்கத்தவர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்.

75% OFF A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு
DMI COMPUTER EDUCATION

Diploma in Information Technology
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Master Diploma in Multimedia & Animation
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சிமையம்.
veta
Experts in English Training
Come, let's speak fluent English
City & Guilds UK Approved Centre
veta Experts in English Training
புதிய பரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 05/09/2011 9.30 am
பிரிவு II - 10/09/2011 9.30 am
பிரிவு III - 12/09/2011 9.30 am
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணினி கல்வி நிறுவனம்.
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விரைவில் அரசியல் தீர்வு அவசியம்

## போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி வலியுறுத்து

கொழும்பு,செப்.05

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களுக்கும் மேலாகின்றன ஆனால் இன்னும் அரசியல் தீர்வு எட்டப்படவில்லை. எனவே விரைவாக அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவியான விசாகா தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் விடயத்தில் அரசு காட்டும் அக்கறை திருப்திகரமானதாக இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்கள் தொடர்பான கருத்தரங்கு மற்றும் கண்காட்சியொன்றில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு சென்றிருந்த அவர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பெண்களின் பிரச்சினைகளை பெண்களிடம் மட்டுமே கூற முடியும், பெண்களாலேயே அறிந்து கொள்ள முடியும், இதன் காரணமாகவே போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பொலிஸ் மற்றும் இராணுவத்தில் போதியளவு பெண் அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் தாம் வலியுறுத்துகிறார் எனவும் விசாகா தர்மதாஸ கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்ற பிரதேசத்தில் பெண்கள் சுயதொழில் மூலம் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து மகளிர் விவகார பிரதி அமைச்சரின் நேரடிக் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (சி)

# வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய கொழும்பில் இனிமேல் காணிகள் இல்லை

## சரத் பொன்சேகா

கொழும்பு,செப்.05

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு தலைநகர் கொழும்பில் இனி காணிகள் கிடையா என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதைக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேற்றும் சரத் பொன்சேகா கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்க அழைத்து வரப்பட்டார். இதன் போது ஊடகவியலாளர்களுக்கு சரத் பொன்சேகா இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இனி காணிகளை விற்பனை செய்வதில்லை என அரசு தெரிவிக்கின்றது. விற்பனை செய்வதற்கு இனி காணிகள் எங்கே இருக்கின்றன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நூறு ஏக்கர் காணி விற்பனை செய்து பெரும் தொகையான பணம் தரகாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இராணுவ வீடுகள், சிறைச்சாலை காணிகள் உள்ளிட்ட காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மக்களின் வளங்களே இவ்வாறு கொள்ளையிடப்படுகின்றன என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் முபாரக், கடாபி போன்றவர்களும் இதனையே செய்தார்கள். எனவே, மக்களை இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தாதியர் கல்லூரியில் நேற்றிரவு பதற்றம்

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி கட்டடத்துக்குள் நேற்றிரவு இனந்தெரியாத நபர் நடமாடினார் என்று பரவிய தகவலால் சற்றுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இரவு 9.30 மணியளவில் தாதிய மாணவர்கள் தங்கியிருந்த அறைக் கதவுகளில் பலத்த சத்தத்தில் யாரோ தட்டினார் எனவும் இதனால் மாணவிகள் கூக்குரல் இடவே ஆள் ஒருவர் தப்பி ஓடினார் எனவும் பின் பாதுகாப்பு ஊழியர்கள் தாதிய கல்லூரி கட்டடப் பகுதி முழுவதும் தேடுதல் நடத்தியபோதும் எவரையும் காணவில்லை என்று விடுதியிலிருக்கும் தாதியமாணவிகள் தமது பெற்றோருக்கு தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி நிர்வாகத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோது எந்த விதமான அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை என ஒரே வரியில் முடித்துக்கொண்டனர். (உ-323-4)

## வன்னியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம் வொசிங்டனுக்கு அனுப்பியிருந்த ஆவணங்கள் கூறுகின்றன.

இந்தத் தகவல்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிகொள்ளப்பட்டதாக அரசு அறிவிப்பதற்கு இரு மாதங்களுக்கு முன்னதாக அனுப்பப்பட்டிருந்தன.

பகிரங்கமாக கூறும் அறிக்கைகளுக்கு மாறாக, தாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக இலங்கை அரசு உதவி வழங்கும் நாடுகளுக்கு கூறியிருந்தது எனவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷ இரு அண்மைய சந்திப்புக்களின்போது இலங்கைப் படையினர் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்தினர் என ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் அந்த விடயத்தைப் பேசுவதில் அவர் அவ்வளவு விருப்பமில்லாதவராக இருந்தார் என்றும் நோர்வேத் தூதுவர் கூறியிருக்கிறார்.

ஆனால், மிக மோசமான மனித நேய பேரழிவு குறித்து ஒரு அறிக்கை வெளியிட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தினால் கேட்கப்பட்டதை, ஜப்பான், நோர்வே ஆகிய உதவி வழங்கும் நாடுகள் எதிர்த்தன எனவும், பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குவதற்கு அப்பால், தமது முன்னைய கரிசனைகள் பலவற்றுக்கு இலங்கை சாதகமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்த நாடுகள் கூறியது எனவும் அமெரிக்கத் தூதரகத்தின் கசிந்த தகவல் கூறியுள்ளது. (சி)

## தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளால் இந்தக் கூட்டத் தொடரில் முன் வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 2009ஆம் ஆண்டு போர் முடிந்த கையோடு மனித உரிமைகள் சபையில் இவ்வாறு மேற்கு நாடுகளால் கொண்டுவரப்பட்ட இது போன்றதொரு தீர்மானம் இலங்கையால் முறியடிக்கப்பட்டது. அத்துடன் இலங்கையில் போருக்குப் பிந்திய அபிவிருத்திக்கு உதவவேண்டும் என்று இலங்கை ஆதரவு நாடுகள் முன்வைத்த தீர்மானம் நிவேற்றப்பட்டது.

இலங்கைக்கு ஆதரவான அந்தத் தீர்மானத்தை அன்று இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் என்பன ஆதரித்தன. எனினும் அதன் பின்னர் போர்க் குற்றச்சாட்டுக்களில் இலங்கை ஈடுபட்டது என்பதற்கான நம்பகமான ஆதாரங்கள் உள்ளன என்று ஐ.நா. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு வெளியிட்ட அறிக்கை மற்றும் பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப்படம் என்பன வெளியாகிய நிலையில் உலகின் கருத்து இன்று பெருமளவில் மாற்றமடைந்துள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச தரத்திலான விசாரணையை நடத்துமாறு மேற்குலக நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்தி வந்தபோதும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு அவ்வாறான ஒரு விசாரணையை நடத்த அடியோடு மறுத்து வருவதுடன் போர்க் குற்றங்கள் எவையும் இங்கு இடம்பெறவில்லை என்றும் திரும்பத் திரும்பக் கூறிவருகிறது.

இத்தகைய பின்னணியிலேயே தற்போது மீண்டும் இலங்கை மீது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான ஒரு நிலையில் என்ன செய்வது, தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பன தொடர்பாகவே பான் கீ-மூன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

நிறைவேற்றப்படும் தீர்மானம் சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும்படி கோரும் என்றே அநேகமாக எதிர்பார்க்கப்படும் நிலையில், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கும் அத்தகைய குழுவை எவ்வாறு நியமிப்பது, அதற்கான சட்டதிட்டங்கள் என்ன, விசாரணைக்கான காலவரையறை, உள்ளடக்கப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை என்பன உட்பட்டப் பல விடயங்களையே ஐ.நா. செயலாளர் ஆராய்ந்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

ஐ.நா. செயலரின் இந்த நடவடிக்கைகள் குறித்து ஐ.நாவுக்கான இலங்கை தூதரகம் இலங்கை அரசுக்கு அறிவித்திருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. (உ-சி)

## தமிழர் பகுதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. இது குறித்துக் கேட்டபோது செயலாளர் அதனை மறுத்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு பிரதேச சபைகளுக்குமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

''நெல்சிப்' திட்டத்தின் எந்த ஒரு ஒதுக்கீடும் மற்றொரு பிரதேச சபைக்கு மாற்றப்படவில்லை. அந்தந்த நிதி ஒதுக்கீடுகள் அந்தந்தப் பிரதேச சபைக்கே வழங்கப்படும்'' - என்றார் அவர்.

இந்த விடயம் குறித்து முல்லைத்தீவு அரச அதிபரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, ''முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 'நெல்சிப்' திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலதிக விவரங்களை நீங்கள் மாகாண சபையிடம் இருந்துதான் பெறவேண்டும்'' என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு என 'நெல்சிப்' திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி, முல்லைத்தீவு மாவட்டத்திலேயே தற்போது உருவாக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றப்பகுதியான சம்பத்நுவரவுக்கு மாற்றப்பட்டது என்று ஆங்கில இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் நெறிப்படுத்தலில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இதற்கான உத்தரவை விடுத்துள்ளார் என்று அந்த இணையத் தளம் கூறுகிறது. முல்லைத்தீவுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நிதியும் சம்பத்நுவரவின் வீதிப் புனரமைப்புப் பணிகளுகே ஒதுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவிட்டார் என்றும் அந்தச் செய்தி தெரிவித்தது.

சம்பத்நுவர என்ற இந்தச் சிங்களக் குடியேற்றம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறும் அந்த இணையத்தளம், அதனைச் சுற்றி இராணுவ முகாம்களால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (உ-15)

## சனியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ வடக்கில் குறிப்பாகக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மலையகத்தின் சில இடங்களிலும் புத்தளத்திலும் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து மர்ம மனிதர்களின் செயற்பாடுகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்று ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுப்பது. இதற்காக சந்திப்பில் யாழ்ப்பாண சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான குழு ஒன்றை அனுப்புவது.

✱ எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கின் குறிப்பாக யாழ். குடாநாட்டின் இன்றைய நிலைமை தொடர்பாக நாடாளுமன்றத்தின் கவனத்தை ஈர்ப்பது.

✱ குடாநாட்டின் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்களை அரசுக்கும் வெளி உலகுக்கும் எடுத்துரைக்கும் நோக்குடன் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை யாழ். குடாநாட்டில் உள்ள ஓர் ஆலய முன்றலில் எதிர்வரும் சனிக்கிழமை நடத்துவது.

ஆகிய தீர்மானங்களே எடுக்கப்பட்டன. (உ)

## பதற்றத்தைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் திரும்பியுள்ளன. இங்கு எவ்வித பதற்றமுமில்லை. 'கிறீஸ் பூதம்' என்ற கதையின் மூலம் ஆதாயம் பெற முனையும் தரப்பினரே அவ்வாறான கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இரவு வேளைகளில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கிராமமட்டங்களில் விழிப்புக்குழுக்களை அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் என்னுடன் அடிக்கடி தொடர்புகொண்டு கேட்பார். அதுமட்டுமன்றி, நிலைமைகளைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மர்ம மனிதனுக்கும் இராணுவத்துக்கும் எந்த வகையிலும் தொடர்பில்லை. இராணுவத்தரப்புக்கு சேறுபூச முனைபவர்களே சம்பவங்களைத் திரிபுபடுத்திக் கூறுகின்றனர். மர்ம மனிதன் விவகாரத்தின் பின்னணியில் அரசியல் உள்ளது என நான் கருதுகின்றேன் - என்றார். (உ-சி)

**பணிப்பெண் தேவை**

குழந்தையைப் பராமரிப்பதற்கும், சமையல் வேலை செய்வதற்கும் வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்பு-
15/4, முருகேசர் லேன்,
நல்லூர். 0214923089

**Spoken English Classes**

★ தொழில் புரிவோர், வெளிநாடுகளுக்கு செல்வோர் மற்றும் ஆங்கிலத்தைக் கற்க விரும்பும் அனைவருக்குமுரியது.

ஆரம்பம்- 07.09.2041
மாலை 5 மணி.
இடம் - சிறுவர் மகிழ்வகம்,
115, சட்டநாதர் கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**வேலைக்கு ஆள் தேவை**

சுதுமலையில் இயங்கும் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை. பெண் [illegible] தேவை. தொடர்பு- 0779352930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகக் கட்சித் தலைவர்களுக்கு 'போரக்குற்றவாளி' புத்தகங்கள்

## அதிரடி நடவடிக்கையில் குதித்தது 'மனிதம்' அமைப்பு

சென்னை, செப். 05

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பான 'போர்க்குற்றவாளி' என்ற நூலை தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய தலைவர்கள் ஆகியோருக்கு மனிதம் என்ற மனித உரிமை அமைப்பு அன்பளிப்பாக வழங்கி வருகிறது.

இதனடிப்படையில், முதலில் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களுக்கு 25 'போர்க்குற்றவாளி' புத்தகங்கள்அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அன்பளிப்பின் முதல் பிரதியை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார்.

''ஐ.நா.வின் அறிக்கை முதன் முதலில் தமிழில் கொண்டுவரப்பட்டு இவ்வாறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதன் மூலம், மேலும் முழுதாக அறிக்கையைப் புரிந்து கொள்ள உதவும் என்றும் தேவைப்படும் காலத்தில் இதைச் செய்துள்ளதைப் பாராட்டி நன்றி தெரிவிக்கின்றேன்'' - என்றார் தா.பாண்டியன்.

புத்தகத்தை மனிதம் அமைப்பின் சென்னைப் பொறுப்பாளர் சுரேஷ், தா.பாண்டியனிடம் கொடுத்தார்.

மனிதம் சென்னையின் இளைஞர் பிரிவு பொறுப்பாளரும் சட்டத்தரணியுமான கோபால் மற்றும் மனிதம் செயல் இயக்குநர் அக்னி சுப்பிரமணியமும் உடன் இருந்தனர்.

இதேவேளை, மார்க்சிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களுக்கும் 30 'போர்க்குற்றவாளி' புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன.

அன்பளிப்பின் முதல் பிரதியை மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

மனிதம் அமைப்பு எவ்வித பிரதிபலனும் எதிர்ப்பார்க்காமல், ஐ.நா. அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பை தங்களது கட்சியினருக்கு கொடுத்துள்ளதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளப் போவதாகவும், இதற்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறார் எனவும் ஜி.ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

வரும் வாரங்களில், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியின் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய பொறுப்பாளர்களுக்கும் போர்க்குற்றவாளி புத்தகங்கள் கொடுக்கப்பட உள்ளன. (சி)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்கு மீண்டும் வாய்ப்பு

கொழும்பு, செப். 05

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இடை நிறுத்தப்பட்ட அமெரிக்க ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீண்டும் இலங்கைக்குக் கிடைக்கும் வாய்ப்புள்ளது என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தக நடவடிக்கை திணைக்களத்தின் சர்வதேச வர்த்தக கொள்கை தொடர்பிலான பொருளாதார நிபுணர் மயிக்கல் ஓ டொனவன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே இதைத் தெரிவித்தார்.

அவர் தனது இலங்கை விஜயத்தின்போது தொழில்துறை அதிகாரிகள், முதலாளிமார் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த அமெரிக்கப் பிரதிநிதி, வரிச்சலுகை கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன எனத் தெரிவித்தார் என்று சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைகள் பணியாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அன்டன் மாகஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் காரியாலயமும் நேற்றுமாலை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, அமெரிக்க ஜி.எஸ்.பி. வரிசலுகை இலங்கை உள்ளிட்ட ந[illegible]களுக்கு மீளவும் வழங்குவதற்கு தமது அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஊடாக இது இந்த வருடத்தில் மீளமைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

# மருந்தகங்களில் குளிரூட்டிகள் கட்டாயமாக்க சட்டம் வருகிறது

கொழும்பு, செப்.05

மருந்து வகைகளின் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மருந்தகங்களில் குளிரூட்டிகள் பொருத்தப் பட்டிருக்க வேண்டியதைக் கட்டாயமாக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குறிப்பாக மருந்து வகைகளை 24பாகை செல்சியஸுக்கு குறைவான வெப்ப நிலையின் கீழ் களஞ்சியப்படுத் திவைக்க வேண்டியது கட்டாயம் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இயற்கை வெப்பநிலைக்கு அமைய நுவரெலிய மாவட்டத்தில் மாத்திரமே குளிரூட்டிகள் பயன்படுத்தாமல் மருந்து வகைகளைக் களஞ்சியப்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வழமையான வெப்பநிலை 24 பாகைக்கு அதிகமாகவே அமைந்துள்ளது. அதிக வெப்பத்தில் மருந்து வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைப்பதால் அதில் இரசாயன மாற்றம் ஏற்படுகின்றது எனவும் சில சந்தர்ப்பங்களில் மருந்துகள் விஷமாகின்றன எனவும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அனைத்து மருந்தகங்களிலும் குளிரூட்டி இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த வசதியில்லாத மருந்தகங்களுக்கு அனுமதிப் பத்திரத்தை வழங்காமல் விடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள மருந்தகங்களுக்கு குளிரூட்டிகளைப் பொருத்துவதற்கு ஆறுமாதகால அவகாசம் வழங்கப் பட்டுள்ளது. அத்தோடு, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது குளிரூட்டிகள் இருக்கின்றனவா என்பது ஆராயப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

English
Spoken And Grammar
G.A.Q. BA Paper Classes
By: A.Britto
புதிய பிரிவு: 07.09.2011
இடம்: ஆஸ்பத்திரி வீதி (7th Day ADVE)
NTIST பாலர் பாடசாலை அருகில்
நேரம் : திங்கள், புதன் மாலை 4 மணி
செவ்வாய், வியாழன் காலை 8 மணி
08.09.2011 வியாழன் ஆரம்பம்

ஸ்ரீ காளிகாம்பா ஜோதிடம்
சுவாமிகள்: இலக்சுமி அம்மா சாஸ்திரி (50 வருட அனுபவம்)
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுநர்
கைரேகை, ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.
தொடர்பு: நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
இல 191, H.K, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0776925916
நேரம்: காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை

ESOFT The Leader in Professional ICT Education
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக.
Diploma in Infromation Technology
Diploma in Software Engineering
Diploma in Web Engineering
Diploma in Business Management
புதிய பிரிவுகள் ஆரம்பம். யாழ் மண்ணில் எவருமே வழங்காத விசேட கட்டணச் சலுகைகளுக்கு இன்றே இணையுங்கள்.
பிரிவுI:-05/09/2011 நேரம்:-9.00
பிரிவுII:-07/09/2011 நேரம்:-9.00
பதிவுகளுக்கு முந்துங்கள்
ESOFT Computer Studies Private Limited
No. 166/3, Navalar Road,
TP:-021 222 4142 Jaffna Hotline:-0773099308

| | |
|---|---|
| நெல்லியடி | 021 2264940 |
| சாவகச்சேரி | 021 2270333 |
| கிளிநொச்சி | 021 2285444 |
| உடுப்பிட்டி | 021 3201303 |
| கொடிகாமம் | 077 3099308 |

CHEMISTRY - S.Vasu

| A/L 2013 | A/L 2012 |
|---|---|
| வாயுக்கள் | சேதன இரசாயனவியல் |
| (Mon, Fri -4.30pm) | (Tue,Thur - 5.00pm |
| ஆரம்பம்- 05.09.2011 (இன்று) | ஆரம்பம்- 06.09.2011 (செவ்) |

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L DAY CLASSES
கணித உயிரியல் பிரிவு
CHEMISTRY => S.வாசு
PHYSICS => N.எடிசன்
COM.MATHS => S.சயந்தன்
BIOLOGY => V.A.ஞானேந்திரன்
S.சுதா
ஆரம்பம்:- 07.09.2011 Wed 4.00pm
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

THE COLLEGE OF CHEMISTRY
DAY CLASSES
ஆரம்பம் - 09.09.2011 3.00pm
Sat, Sun - 9.45 - 11.45
Tu, Th - 3.00 - 4.30
★ அலகு ரீதியான மீட்டல்
★ கடந்தகால வினாவிடை
★ மாதிரி வினாக்கள்
★ தொடர் பரீட்சை, கருத்தரங்குகள்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புக்கள்
DIAS B.Sc (Hons) Spl in Chem
பழம் Rd, கந்தர் மடம் யாழ்ப்பாணம்.

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
10-09-2011,12-09-2011
Batch I : 09.00 AM - 12.00 PM
Batch II : 02.00 PM - 05.00 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

SAKTHIMICRO SYSTEM
Cool line - 0776102609
Chavakac... - 0212270084
Jaffna - 0217903456
இலங்கையில் Adobe இன் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரே ஒரு பயிற்சி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.......
Diploma in ICT, Advanced Maya Video Editing, MultiMedia, Office Internet, Hardware.
Home+
Processor - D Core - 3.02Ghz
Motherboard - Core 2 Suppor
RAM - 2GB DDR3
VGA - 128Share
HardDisk - 500GB
DVD Writer
Monitor - 19" LED
Multi Media Keyboard
Optical Mouse
41900/=
3 YEARS WARRANTY
இந்தியா மல்ரிமீடியா வல்லுனர்களால் கற்பிக்கப்படுகின்றது
Adobe AUTHORISED Training Centre
Adobe SOLUTION PARTNER
Novell
CISCO PARTNER Registered
NVIDIA PARTNERFORCE MEMBER
intel Software Partner
After O/L or A/L
Adobe Authorised Training Center
3months
Adobe Certify Expert
6months
CG Master
Adobe Certify Instructor
Photoshop C
Maya 2012
Premiere CS5.5
AfterEffect CS5
Audition CS5.5
Master Diploma in MULTIMEDIA
blenderfoundation
Blender 2.5
மலிவு விற்பனையில் TOSHIBA . HP. DELL Laptops

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org